# மல்லிகை



''காலனித்துவக் கலைப்பு நடவடிக்கைகள் முடிவை எய்துகின்ற போதிலும், நாடுகளிடையேயான உறவுகளில் இன்னமும் ஏற்றத் தாழ்வுகள் நிலவுகின்றன. இதை விரைவில் அழித்தொழிக்க முடியுமென்று யாரும் எதிர்பார்க்க முடியாது. இதன் காரணமாகவே கூட்டுச் சேரா நாடுகளது ஏகாதிபத்திய – எதிர்ப்புநிலைபாடு அசைக்க முடியாததாகவும் உள்ளது. அது, கூட்டுச்சேரா இயக்கத்தை உறுதியாக வலுப்படுத்தும் பிரதான முன் நிலைபாட்டில் ஒன்றாகவும் திகழ்கிறது.'' -பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா







ஜுலை 1976


ஆசிரியர்: டொமினிக் ஜீவா


விலை சதம்: 75


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ தரமான ஜவுளித் தினுசுகளுக்கும்

★ றெடிமேட் உடைகளுக்கும்

மற்றும்

★ அழகுசாதனப் பொருட்களுக்கும்

ராஜ்கோபால்ஸ்

47, பெரியகடை,
யாழ்ப்பாணம்


'ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
யாதியினைய கலைகளில் - உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர்
ஈனநிலை கண்டு துள்ளுவார்'


பதினோராவது ஆண்டு

ஜூலை 1976 99

'Mallikai' Progressive Monthly Magazine

மல்லிகை

முகவரி:
ஆசிரியர் டொமினிக் ஜீவா
234- A கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்
(இலங்கை)

MALLIKAI
Editor: Dominic Jeeva
234A, K. K. S. Road,
JAFFNA.
Sri Lanka

மணக்கும் 'மல்லிகை
கதை, பெயர்,
கவிதை, கட்டுரை,
கருத்து,
எல்லாம் ஆக்கியோர்
தனித்துவம்
பொறுப்பும் அவரே


## அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டுச் சிறப்பு இதழ்!

கொழும்பில் நடைபெற இருக்கும் கூட்டுச் சேரா நாடுகளின் உச்சி மாநாட்டுச் சிறப்பிதழை வெளியிட நாம் முயன்ற பொழுது அது சம்பந்தமான கட்டுரைகளை எப்படிச் சேகரித்து ஒழுங்கு படுத்துவது என்பது பெரும் பிரச்சினையாக நமக்கு முன் எழுந்தது.

ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க இம் மாநாட்டைப் பற்றிக் கட்டுரை எழுதுவதற்கே ஆராய்ச்சித் திறமை வேண்டும். அத்துடன் அரசியல் பார்வையும் இன்றியமையாதது. இவைகளைக் கவனத்தில் கொண்டு நம்முடன் ஒத்துழைத்த சகல எழுத்தாளருக்கும் எமது நன்றி உரியது.

அடுத்த இதழ் 100-வது இதழ்; அதாவது 12-வது ஆண்டு மலர். அதற்கான வேலைகள் காத்துக் கிடக்கின்றன. மலருக்குத் தேவையான கதை, கட்டுரை, கவிதைகளை இன்னமும் அனுப்பாத நண்பர்கள் உடன் அனுப்பி உதவினால் நல்லது.

— ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்போக்கான திசைவழிக்கு

## அனைத்துலக அங்கீகாரம்

அணிசேரா நாடுகளின் அனைத்துலக ஐந்தாவது உச்சி மாநாடு நமது தாய்த் திருநாட்டின் தலைநகர் கொழும்பில் நடைபெறப் போகின்றது.

வரும் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற இருக்கும் இந்த மாநாட்டில் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா, லத்தீன் அமெரிக்கா ஆகிய கண்டங்களைச் சேர்ந்த 80-க்கும் அதிகமான நாடுகள் பங்கு கொள்ளப் போகின்றன.

அந்த அந்த நாடுகளின் அரசாங்க மட்டத் தலைவர்கள், பொறுப்பு வாய்ந்த பிரதிநிதிகள், சர்வதேசத் தலைவர்கள் ஆகியோர் இம் மாநாட்டில் பங்கு கொண்டு மாநாட்டைச் சிறப்பிக்க போகின்றனர்.

உலகத்தின் தலைவிதியையே திசைதிருப்பத்தக்க தீர்மானங்கள் இம் மாநாட்டில் எடுக்கப்படும் என்பது சர்வ நிச்சயமாகும்.

இந்து மா கடலைச் சமாதான மண்டலமாக மாற்ற வேண்டும் என்ற இலங்கையின் பிரேரணையும், தென்கிழக்கு ஆசியாவை நடுநிலை மண்டலம் ஆக்கவேண்டும் என்ற 'ஏசியன்' ஸ்தாபனத்தின் வேண்டுகோளும், சமுதாய அமைப்பின் வேற்றுமைகளைப் பொருட்படுத்தாமல் 'அகில — ஆசிய மாநாடு' கூட்டப்பட வேண்டும் என்ற மலேசிய — பிலிப்பைன்ஸ் சிபார்சுகளும் ஆசிய சமாதானத்தையும் பந்தோபஸ்தையும் பாதுகாப்பதற்கான கூட்டுப் பிரேரணைகளும் விவாதித்து ஒப்பேற்றப்படும் என நாம் உறுதியாக நம்புகின்றோம்.

இதுவரை நடை பெற்றுள்ள நான்கு உச்சக்கட்ட மாநாடுகளை விட, இந்த ஐந்தாவது மாநாடு மிக வலிமை பொருந்தியதாகவும் பிரச்சினைகளுக்கு நேருக்கு நேர் முகம் கொடுக்கக் கூடியதான அம்சம் கொண்டதாகவும் குறிப்பாக ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாதையில் தொடர்ந்து முன்னேறக் கூடியதாகவும் அமையும் என நாம் நம்பும் அதே வேளையில் இம் மாநாட்டைச் சீர்குலைக்க கூடிய சர்வதேச சக்திகளின் நரித்தனத்தைக் கவனத்தில் எடுத்து எச்சரிக்கையாக இருக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

# கூட்டுச்சேரா இயக்கத்தில் ஆசிய நாடுகள்

**குலசேகரம் ராஜகுலேந்திரன்**

'வளர்முக நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கை துலாம்பரமாகவும் மேலும் தீவிரமாகவும் மாறியுள்ளது; அவை ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, அதிகரித்து வரும் தமது சர்வ வல்லமையுடன் தமது அரசியல் பொருளாதார உரிமைகளைப் பாதுகாத்து வருகின்றன. இதைக் கூட்டுச்சேரா இயக்கத்தின் பாத்திரம் அதிகரித்து வருவதானது எதிரொலிக்கிறது' இவ்வாறு சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 25-வது காங்கிரஸில் பிரெஸ்நேவ் தெரிவித்தார்.

இந்த இயக்கம் கடந்த காலங்களில் உருவத்தாலும் தரத்தாலும் உயர்ந்துள்ளது மட்டுமல்ல, உலக அரசியலில் பிழம்புருவமான ஓர் அமைப்பாகவும் மாறி வருகிறது, என்பதையும் இந்த வார்த்தைகள் காட்டியுள்ளன.

கூட்டுச்சேரா இயக்கத்தின் தொட்டிலாக ஆசியா விளங்குகின்றது. இந்தியா சுதந்திரமடைந்தவுடன் பாராளுமன்றத்தில் உரையாற்றி ஜவஹர்லால் நேரு தான் முதன் முதலில் கூட்டுச்சேரா கோட்பாடுகளுக்கும் அந்த இயக்கத்தின் நோக்கத்துக்கும் உருவம் கொடுத்தார். நாட்டிச் சுதந்திரத்திற்கு ஓர் உத்தரவாதமாகவும் சர்வதேச சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்குப் பங்காற்றும் ஒரு காரணியாகவும் கூட்டுச் சேராமையைக் கருதிய இந்தியா 1946 முதல் அதற்காக உழைக்க ஆரம்பித்தது இக் கோட்பாடுகள் நாடுகளிடையே உறவுகளை ஏற்படுத்தும், பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட நியமங்களுக்கு ஏற்ப சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் வரைபடுத்தப்பட்டன,

காலனித்துவ அமைப்புக் கலைக்கப்பட்டதன் விளைவாகப் பல சுதந்திர நாடுகள் எழுச்சியுற்றன. பல்வேறு வடிவங்களில் ஏற்பட்ட இந்த நிகழ்வுகள் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் மட்டுமல்ல அவை ஒரு கண்டத்தின் ஒரு பிராந்தியத்திலிருந்து இன்னொரு பிராந்தியத்துக்கு மாறுபட்டிருந்தன. புதிய சுதந்திர நாடுகளின் சமூக, பொருளாதார, அரசியல் அமைப்புக்களும் பின்விளைவான வெளிநாட்டுக் கொள்கையும் அவை தமது சுதந்திரத்தை வென்றெடுத்த வழிகளிலேயே பெரிதும் தங்கியிருந்தன. கலோனியலிஸ்டுகள் வெளியேறிய போதும் அவர்கள் இளம் நாடுகளைப் பலவீனப்படுத்துவதற்கும் அவை தமது பொருளாதார உதவியிலும் ராணுவ பிரசன்னத்திலும் பெரிதும் தங்கியிருப்பதற்கும் சகலதையும் செய்து விட்டுச் சென்றனர். பல தீர்க்கப்படாத பிரதேசப் பிரச்சினைகளை, விட்டுச் சென்றனர். ஆனால், சுதந்திரத்தின் ஓர் உத்தரவாதமாக சமாதானத்தை உறுதிப்படுத்தக் கூட்டுச் சேரா இயக்கம் முனைந்துள்ளது. இதன் முனைப்புக்கள் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளில் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது, வெளிப்படை.

மறுபுறத்தில் அதிகரித்து வரும் ஏகாதிபத்திய நாடுகளது விஸ்தரிப்புப் போக்கும், அவற்றினால் நிறுவப்படும் ராணுவக் கூட்டணிகளும், இயக்கத்தின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்துள்ளன.

**1955**-ல் பாண்டுங்கில் நடைபெற்ற ஆபிரிக்க — ஆசிய மகாநாட்டில் கூட்டுச்சேரா இயக்கத்தின் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன. இதில் இந்த மகாநாட்டினைக் கூட்டிய நாடுகளான பர்மா, இலங்கை, இந்தியா, இந்தோனேஷியா, பாகிஸ்தான் ஆகியவற்றைத் தவிர 24 நாடுகளது பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்; பெரும்பாலும் ஆசிய நாடுகளே. மகாநாட்டில் நீண்ட தயாரிப்பு வேலைகள் நடைபெற்றன.

**1953**-ல் இந்தோனேஷியாவின் முன்னாள் ஜனாதிபதி சுகார்னோ ஆசிய நாடுகளது தூதுவர்களுடன் குறிப்பாக இலங்கைத் தூதுவருடன் ஆசிய, ஆபிரிக்காக் கண்டத்தின் சுதந்திர நாடுகளது ராஜ்ய, அரசாங்கத் தலைவர்களது மகாநாடொன்றைக் கூட்டுவது குறித்து ஆராய்ந்தார். இந்தப் பிரச்சினை தெற்கு, தென்கிழக்காசியாவைச் சேர்ந்த ஐந்து நாடுகளது பிரதமர்கள் கலந்து கொண்ட மகாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றது. இந்த மகாநாடு **1954**-ல் கொழும்பில் நடைபெற்றது. 1954 டிசம்பர் மாதம் இந்தோனேஷியாவிலுள்ள பொகர் என்ற இடத்தில் நடைபெற்ற அடுத்த மகாநாட்டில், பாண்டுங்கில் இந்த ஆசிய, ஆபிரிக்க தலைவர்களது மகாநாட்டைக் கூட்டுவதென்று ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

இந்த மகாநாட்டின் ஆரம்பகர்த்தாக்கள், தங்கள் சொந்த நாட்டின் எதிர்காலம் குறித்து, அக்கறையைக் கொண்டிருந்தது மட்டுமல்ல, ஆசிய, ஆபிரிக்க நாடுகள் உலக சமாதானத்துக்குத் தமது பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்றும் விரும்பின என்பதை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

பொகார் மகாநாட்டின் போது ஒரு பிரச்சினை குறித்துக் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றன. பாண்டுங் மகாநாட்டின் அமைப்புக் குறித்து இந்த மகாநாட்டின் பிரதிநிதிகள் காரசாரமாக விவாதித்தார்கள். பிரச்சினை என்னவெனில் சீனாவை அழைப்பதா இல்லையா என்பதே. சீனா அழைக்கப்பட வேண்டும், 'ஆசியா, ஆபிரிக்க சமாஜத்தில்' அது உறுப்பினராக வேண்டும் என்று இந்தியாவும் பர்மாவும் உறுதியாக நின்றன. சீனா மகாநாட்டுக்கு அழைக்கப்பட்டது. எந்த நாடுகளின் முயற்சியால் சீனா அழைக்கப்பட்டதோ அந்த நாடுகள் மீது அது பின்னால் ஆக்கிரமிப்புச் செய்தது.

இந்திய — சீன வர்த்தக உடன்படிக்கையிலும், சீன தீபத்துக்கும் இந்தியாவுக்குமிடையிலான தொடர்புகளிலும் உத்தியோக பூர்வமாக முன்வைக்கப்பட்ட பஞ்சசீலக் கோட்பாடுகள் கூட்டுச்சேரா இயக்கத்தின் வளர்ச்சியில் மாபெரும் பாத்திரத்தை வகித்தன. இக் கோட்பாடுகள் மீது முழு நம்பிக்கை வைத்த இந்தியா அதை நடைமுறைப்படுத்த சகலதையும் செய்தது. அதே நேரத்தில் சீனா தமது விஸ்தரிப்புத் திட்ட அபிலாஷைகளை மூடி மறைக்க இக் கோட்பாடுகளைப் பயன்படுத்தியது. ஒப்பந்தத்தில் போட்ட கையெழுத்தின் மை காயமுன்னரே, இந்தியாவுக்குச் சொந்தமான வட லடாக் பிரதேசத்தில் வாகனச்சாலை ஒன்றை நிர்மாணிக்கச் சீனா தீர்மானித்தது.



சோஷலிஸ நாடுகள் பஞ்சசீலக் கோட்பாடுகளை அங்கீகரித்தன. இக்கோட்பாடுகளின் அடிப்படையில் சகல நாடுகளும் தமக்குள் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சோவியத் யூனியன் பாராளுமன்றம் சகல நாடுகளையும் வேண்டியது.

**1961**-ல் பெல்கிரேடில் நடைபெற்ற கூட்டுச்சேரா நாடுகளின் மகாநாட்டின் மூலம் கூட்டுச்சேரா இயக்கம் உருவாகியது. பதினொரு ஆசிய நாடுகள் தமது பிரதிநிதிகளை இந்த மகாநாட்டுக்கு அனுப்பியிருந்தன. கெய்ரோவில் நடைபெற்ற இரண்டாவது மகாநாட்டில் 22 நாடுகள் பங்குபற்றின. இங்குதான் கூட்டுச்சேராக் கொள்கை வரையறுக்கப்பட்டது. இதில் நேருவும் நாஸரும் பெரும் பாத்திரம் வகித்தனர். பெல்கிரேட் மகாநாட்டில் லத்தீனமரிக்காவைச் சேர்ந்த 25 நாடுகள் பார்வையாளராகக் கலந்து கொண்டன. இது, கூட்டுச்சேராக் கருத்து உலகம் முழுவதையும் ஈர்க்கின்றது என்பதைக் காட்டுகிறது. கூட்டுச் சேரா நாடுகளது 'மூன்றாவது அணி' யை உருவாக்குவது என்ற கருத்தை வன்மையாகக் கண்டிக்கும் பிரகடனமொன்றை பெல்கிரேட் மகாநாடு ஏகமனதாக நிறைவேற்றியது. இது மேற்குலக, மாவோயிஸ்ட் அரசியல் வாதிகளுக்குப் பேரிடியாகும்.

ஆபிரிக்க நாடுகள் இன்று கூட்டுச்சேரா இயக்கத்தில் பிரதான பாத்திரத்தை வகிக்கின்றன. ஆசிய நாடுகளில் குறிப்பாக, இந்தியாவும் இலங்கையும் ஆரம்பம் முதல் இன்றுவரை தலையாய பாத்திரத்தை வகிக்கின்றன. கூட்டுச் சேராமையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிதாமகர் ஜவஹர்லால் நேரு என்றால், சொலமன் பண்டாரநாயகா அவரது நெருங்கிய கூட்டாளிகளில் ஒருவராக விளங்கியவர். இன்று கூட்டுச்சேரா இயக்கம் தனது பதினைந்தாவது ஆண்டை அணுகிக் கொண்டிருக்கிறது. அதன் ஐந்தாவது மகாநாடு இலங்கையின் தலைநகரில் நடைபெறவுள்ளது. இது இந்த இயக்கத்தின் மாபெரும் மகாநாடாக அமையும் என்று பல அவதானிகள் கருதுகிறார்கள்.

தமது கண்டத்தின் சர்வதேசிய பிரச்சினைகளை வெற்றிகரமாகக் கையாளக் கூடிய உறுதியான அரசியல் சக்தியை கூட்டுச்சேரா ஆசிய நாடுகள் கொண்டுள்ளன. ஐரோப்பாவை உதாரணமாக 'ஆசிய ஹெல்சிங்கி' ஒன்றைக் கூட்டவேண்டும் என்ற ஆர்வம் ஆசிய நாடுகளது அரசாங்க ராஜ்ய தலைவர்களிடையே மேன்மேலும் அதிகரித்து வருகிறது. படைக்கலக் குறைப்பு, ராணுவத் தளங்களை அகற்றுதல். இதர பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்ற உணர்வும் மேலோங்கியுள்ளது. காலனியாதிக்கவாதிகள் விட்டுச் சென்ற எல்லைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிட்டன. உதாரணத்துக்கு இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான கச்சதீவுப் பிரச்சினைக்கும் கடல் எல்லைப் பிரச்சினைக்கும் தீர்வு காணப்பட்டுவிட்டன.

பதட்ட நிலையைத் தளர்த்துவதற்கான தமது ஆர்வத்தைப் பிரதிபலிக்கும் பல பிரயத்தனங்களை கூட்டுச்சேரா ஆசிய நாடுகள் ஆரம்பித்துள்ளன. இவற்றில், தென்கிழக்காசியாவை நடுநிலை நாடாக்குவது என்ற கோரிக்கை, கொரியாவை சமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான பூர்வமாக ஐக்கியப்படுத்துதல், நாடுகளிடையே ஒத்துழைப்பை விஸ்தரிப்பது என்பவற்றைக் குறிப்பிடலாம்.

கூட்டுச் சேரா இயக்கம் சர்வதேச அரங்கில் வல்லமை மிக்க சக்தியாகத் திகழ்கிறது. அவை ஐக்கிய நாடுகளிலும், இதர சர்வதேச ஸ்தாபனங்கள், மகாநாடுகளிலும் பல பிரதான தஸ்தாவேஜுக்களைக் கைச்சாத்திட்டுள்ளன. ஐ. நா. பந்தோபஸ்து சபையின் உறுப்பினர்களான ஈராக், இந்தியா, பங்களாதேஷ் மற்றும் பல கூட்டுச் சேரா நாடுகள் இஸ்ரேலின் மூர்க்கத்தனமான கொள்கையையும், ஆக்கிரமித்துள்ள அரபு நிலங்களில் அது மேற்கொள்ளும் அட்டூழியங்களையும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

நிரந்தர ஒருங்கிணைப்புக் கமிட்டி, இந்தியா, இலங்கை, மலேஷியா, நேபாளம், சிரியா ஆகிய பல ஆசிய நாடுகளை உள்ளடக்கியுள்ளது. இது கூட்டுச் சேரா இயக்கத்தின் பிரதான ஸ்தான சக்தியாக மாற்றியுள்ளது. இக்கமிட்டி கூட்டுச்சேரா நாடுகளிடையே ஐக்கியத்தை வலியுறுத்தவும் ஏகாதிபத்தியம், நவ — காலனியாதிக்கம், காலனியாதிக்கம் ஆகியவற்றுக்கு எதிராகப் போராடுவதிலும் உலக வியாபகமானதும் முழுமையானதுமான படைக்கலக் குறைப்பை மேம்படுத்துவதிலும் கூட்டுச் சேரா நாடுகளின் நடவடிக்கையை ஒன்றிணைக்கவும் முனைந்துள்ளன.

லெனினவர்களது தீர்க்க தரிசனம் மெய்யாகிவிட்டது, ஏக போகங்களது காலனியாதிக்கச் சுரண்டலுக்கும் ஏகாதிபத்திய அரசாங்கங்களது ரகசிய சூழ்ச்சித் திட்டங்களுக்கும் பலியான கிழக்குலக மக்கள், உலக நாடுகளது சமாஜத்தின் சமமான உறுப்பினர்களாகவும் விடுதலை, சமாதானம், பந்தோபஸ்து ஆகியவற்றின் தீவிரமான போராளியாகவும் திகழ்கிறார்கள். ★


## நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

திருநெல்வேலி,

**யாழ்ப்பாணம்.**

கூட்டுறவு அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் ஓர் நற்செய்தி.

விவசாய உற்பத்திக்கும் நுகர்ச்சித் தேவைக்கும் தேவையான

சகலவித

★ **விவசாய இரசாயனப் பொருட்கள்**
★ **இயந்திரங்கள்**
★ **உபகரணங்கள்**

ஆகியவற்றுடன்

**நுகர்ச்சிப் பொருட்கள், பிடவைவகைகள், இரும்பு கட்டிட உபகரணங்கள்**

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.




# கொழும்பு உச்சிமகாநாடு: அணிசேராமை, முடிவமைதி, ஆசிய 'சமாதானம்'

சுகந்தன் கந்தசாமி

அணிசேரா இயக்கம் தனது ஆரம்பகாலம் தொட்டே சமாதானத்துக்கான போராட்டத்தில் உறுதியான நிலையை வகித்து வருகிறது. இது, நெருக்கடிகளைத் தணிக்கும் பிரச்சினையில் அது கொண்டுள்ள மனோபாவத்தை உறுதிப்படுத்தியுள்ளது. பெல்கிரேடில் நடைபெற்ற முதல் மகாநாட்டில் 'நாடுகளிடையே ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்ட, சுதந்திரம், சமத்துவம், சமூகநீதியில் நிறுவப்பட்ட' புதிய உலக விதிக்காக உழைப்பதற்கு அணிசேரா நாடுகள் சங்கல்பம் கொண்டன. 'சமாதானத்தை வலுப்படுத்துவதையும் சுதந்திரமும் சமத்துவமும் மிக்க நாடுகளிடையே சமாதான பூர்வமான ஒத்துழைப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட சகல போக்குகளையும் ஊக்கப்படுத்துவது என்றும் அவை தீர்மானித்தன.

பிசகற்றதும் வரலாற்றுத் தன்மை கொண்ட இந்த நிலை உலகின் பிற்கால வளர்ச்சிப் போக்கினுல் உறுதிப்படுத்தப்பட்டது. சோஷலிஸ, அணிசேரா நாடுகளை முன்னணியில் கொண்ட சகல சமாதான சக்திகளினதும் பெரும் உழைப்பின் பயனுக, நாடுகளிடையே நம்பிக்கையை ஸ்தாபிப்பதை முன்னோக்கிய நல்மாற்றங்கள் உலகில் ஏற்பட ஆரம்பித்தன.

இதில் பிரதான முக்கியத்துவமாக விளங்கியது எதுவெனில் சமூக அமைப்பால் வேறுபாடு கொண்ட நாடுகளிடையேயான சமாதான சகஜீவனக் கோட்பாடே.

இந்தக் கொள்கை ஐரோப்பாவில் நல்ல விளைவுகளை ஏற்படுத்தியது. 33 ஐரோப்பிய நாடுகளினதும் அமெரிக்கா, கனடாவினதும் தலைவர்கள் 1975 ஆகஸ்டில் ஹெல்சிங்கி கோட்பாடுகளுக்கு மிக உகந்த வகையில் நாடுகளின் உறவுகளுக்கான ஒழுக்க விதி ஒன்றை வகுத்தனர்.

சோவியத் — அமெரிக்க உறவுகளில் ஏற்பட்ட அபிவிருத்தி, சர்வதேச சூழலின் பொதுவான அபிவிருத்திக்குப் பங்காற்றியது.

சர்வதேச நெருக்கடியைத் தளர்த்தும் கொள்கை அடைந்த வெற்றிகளை அணிசேரா நாடுகள் வரவேற்கின்றன. முடிவமைதியானது, ஆசியாவுக்கும் உலகின் இதர பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படல் வேண்டும் என்பதை இந்த நிகழ்வுகள் காட்டுகின்றன என்று பிரதமர் இந்திரா காந்தி தெரிவித்தார். இதை, முடிவமைதிப் போக்கின் மேலும் வளர்ச்சிக்குச் சாதகமானதாகச் சகல அணிசேரா நாடுகளும் மதிப்பிட வேண்டும் என்று பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரங்கில் சாதகமான போக்குகளை அனுகூலப் படுத்துவதில் அணிசேரா நாடுகள் கொண்டிருந்த ஆர்வம், அவற்றின் மகாநாடுகளின் தஸ்தாவேஜுகளில் பிரதிபலித்தது. சர்வதேச உறவுகளின் அபிவிருத்தியானது, அணிசேராக் கொள்கையின் லட்சியங்களினதும் அதன் கோட்பாடுகள், நடைமுறை நடவடிக்கைகளினதும் ஜீவ வலுவையும் பெரும் முக்கியத்துவத்தையும் உறுதிப்படுத்துகின்றன, என்பதை அல்ஜீயர்ஸ் மகாநாடு திருப்தியுடன் சுட்டிக்காட்டியது. தமது கொள்கை, இதர சமாதான ஜனநாயக, முற்போக்குச் சக்திகளுக்கும் மக்களது விடுதலைக்கும் சுதந்திரத்துக்குமான உலக சமாதானத்துக்கான போராட்டத்தில் பிரதான காரணியாகத் திகழ்கிறது என்று அணிசேரா நாடுகள் ஏகமனதாகப் பிரகடனப் படுத்தியுள்ளன.

லீமாவில் கூடிய அணிசேரா நாடுகளது வெளிநாட்டமைச்சர்கள், உலகின் சகல பகுதிகளிலும் சர்வதேச நெருக்கடிகளைச் சகஜப்படுத்துவதற்கு உழைக்கும் தமது திடசங்கல்பத்தை வலியுறுத்தினார்கள். லீமா மகாநாடு இந்த இயக்கத்தின் நோக்கங்களை அடைவதற்கான உறுதியான உபாயங்களை வகுத்தது. சர்வதேச சமாதானம், பந்தோபஸ்தை உறுதிப் படுத்துவது, சர்வதேச பதட்ட நிலைக்கான காரணங்களை அகற்றுவது, இராணுவத் தளங்களை இல்லாதொழிப்பது, சமாதான மண்டலங்களை உருவாக்குவது, உலகளாவிய, பொதுவான ஆயுதப் பரிகரணத்துக்கான போராட்டம் இன்னபிற நடவடிக்கைகளுக்கான அணிசேரா நாடுகளது கூட்டுழைப்புக்கள் இந்த உபாயத்தின் அடிப்படை அம்சங்களாகும்.

முடிவமைதியானது சகல கண்டங்களையும் தழுவியிருக்க வேண்டும் என்ற அணிசேரா நாடுகளது கோரிக்கையானது, சோவியத் யூனியன் இதர சோஷலிஸ நாடுகளது நிலையுடன் ஒன்றாக இணைகிறது. சமாதானம், சர்வதேச ஒத்துழைப்புக்கும் மக்களது விடுதலை, சுதந்திரத்துக்கும் மேலும் போராடுவதற்கான திட்டத்தை முன்வைத்த சோவியத் யூனியன், இந்த முடிவமைதியை ஆழப்படுத்தவும் நாடுகளுக்கு மத்தியில் பரஸ்பரம் அனுகூலமிக்க ஒத்துழைப்பின் வீச்சை விரிவுபடுத்தவும் தன்னாலானதனைத்தையும் செய்யும் என்பதை உறுதி செய்துள்ளது.

எனினும் உலகில் இன்னமும் சமாதானத்துக்கு எதிரிகள் உள்ளனர். அவர்கள் தமது மேலாதிகத் திட்டங்களை செயல்படுத்துவதற்கான ராணுவ வெறி உணர்வை விசிறி வருகிறார்கள். உலகில் நெருக்கடிகளை அதிகரிப்பதற்கான புதிய முயற்சிகளைச் செய்கின்றார்கள்.

ஆயினும் பதட்ட நிலைத்தணிவின் எதிரிகளது முயற்சிகளுக்கு மத்தியிலும் உலகின் அரசியல் சூழலை நிர்ணயிக்கும் சமாதான முற்போக்குச் சக்திகள் மேன்மேலும் அதிகரித்து வருகின்றன. இது சர்வதேச அரங்கில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தக் கூட்டாக உழைக்கும் சமாதான சக்திகளுக்குப் புதிய எதார்த்த பூர்வமான வாய்ப்புக்களைத் திறந்து விடுகிறது.

இந்தப் பணியில் அணிசேரா நாடுகள் முன்னரைப் போலவே பெரும் பங்களிப்பைச் செய்ய முடியும். ★



# ரத்துமல்

)(

**மல்லிகை சி. குமார்**

'ஏய்...... சும்மா இருக்சு மாட்ட......!'

'சும்மா இல்லாம இப்படி சொமந்துகிட்டா இருக்கு......' என்று வயித்துக்கு மேல கையை வளைத்துக் காட்டும் அந்த சிறுக்கியை என்னா செய்ய..? எனக்கு சிரிப்புத்தான் வருது.

'சொமப்படி காலம் நேரம் வந்தா சொமந்துதானே ஆகணும்' பாத்தி ஓரத்தில் நின்ற ஒரு முட்டைச் சுருண்ட கோவா செடிக்கு மண்ணை அணைத்துக் கொண்டே அவளைப் பார்த்து சொல்கின்றேன்.

'அய்ய...... இந்த ஆளுக்கு ராங்கியைப் பாரே...? சிணுங்கியவள் மீண்டும் ஒரு மண்கட்டியை எடுத்து என்மீது வீசுகிறாள்.

'ஏய்... திரும்பவும் சொல்லுறேன் சும்மா இரு. திரும்ப திரும்ப திரும்ப ஏங்கிட்ட எடக்குப் பண்ணின... அப்புறம்..?'

கீழுதட்டைக் கடித்துக் கொண்டு அவளுக்குப் பத்திரம் காட்டுகிறேன்.

'சும்மா கைவாருப்போடாம வேலையம் பாரு! என்னமோ கொஞ்சங் கதைச்சா தலைக்கு மேலத்தான் போறது. வேலைக்கு வந்தா வேலையைச் செய். சும்மா ஐஸ் அடிச்சிட்டுப் போக நெனைக்காத' என்றவளின் முகம் கோபமா மாறுது. அது உண்மையானதா இல்லாட்டி நடிப்பா? நெற்றியில் பூத்திருக்கும் வியர்வையை புறங்கையால் துடைத்துக் கொண்ட நான், ஆத்திரப்பட்டவனாய்......

ந்தாப்பாருடி...... என்னப் பார்த்தா ஐஸ் அடிக்கிறேன்னு சொல்லுற. ஏது, ஏது எங்க தொழிலாளி உழைப்பைத் தின்கிற உங்க எஜமானி புத்தி ஒனக்கும் வந்திருச்சோ? நீயும் எஜமானியாகிட்டியோ?' என்றேன். இது அவளுக்கு எப்படி இருந்ததோ......?

'என்னா .. சொன்னது நாங் எஜமானி மாதிரி கதைக்கிறதா? நம்ப முகத்தைப் பார்த்து சொல்லுங்க' என்றவள்,

'பாருங்க இந்த எஜமானிப் போட்டிருக்கும் ரவிக்கையை...' வலது கையைத் தூக்கி மூட்டு விட்டுத் தொங்கும் இடத்தைக் காண்பிக்கும் அவளின் கண்களில் நீர் தேக்கம்.

சோகப் புரையோட அவள் அந்த கிழிச்சல் கண்ட இடத்தை எனக்குக் காட்டினாலும், எனக்குள் ஒரு மோகம் பிறக்கத்தான் செய்தது. ஊறிய எச்சிலை விழுங்கிக்கொண்ட நான்,

'ந்தா... ஏங்கிட்டக் காண்பிச்ச மாதிரி இனி எந்த ஆம்பளைக்கிட்டேயும் இந்த எடந்தான் கிழிஞ்சிருக்கின்னு கையைத் தூக்கிக் காட்டாத......' இப்படிச் சொன்னதும் வேதனையை மறந்து செக் கென்று சிரித்தவள் இரண்டு கைகளாலும் வாயை மூடிக்கொள்கிறாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சீக் கழுத சிரிப்பப்பாரு சிரிப்ப..... அந்த முதலாளியம்மாக்கிட்ட சொல்லி ஒரு புது ரவுக்கை தச்சிப் போட்டுக்கக் கூடாதா? நீ என்னச் சின்னக் குழந்தையா? நீ வயசுக்கு வந்தவ. உனக்கு தேவையானதை நீ கேட்டு வாங்கிக்கக் கூடாதோ' என்றேன் நான்.

'கட்டிக் கழிச்ச துணியையேக் கொடுக்க அந்த அம்மாக் கணக்குப் பாக்குது. எப்படி புது துணி வாங்கிக் கொடுக்கும்? அப்படியேப் பழசுப் பட்டக் கொடுத்தாலும் அது நாரு நாராக் கிழிச்சதுக்கப்புறம்தான் அடுத்த துணி'

'பத்தியா...... பழையத் துணியை உனக்கு கொடுக்கக் கூட அவ கணக்குப் பார்க்கிறு? வேலக்காரின்னு காலமெல்லாம் நம்ம அடிமைங்கிர நெனப்பு அவளுக்கு. நீ வயசு வந்த பெண்ணு. உனக்கு மாத்துத் துணி கொடுக்கக்கூட மனசு வராத அவக்கிட்ட நீ ஏன்தான் இப்படி மாட்டிக்கஷ்டப்படணும்? வேற இடம் பார்த்துப் போகக் கூடாதா?' இவள் மீது அனுதாபப்பட்டுக் கேட்டேன்.

'எங்கேநான் போய் வேற இடந் தேடுறது. யாரையும் நம்பிப் போகப் பயமாக இருக்கே... அதுனலத்தான் இங்கேயே இருக்கேன்'

பார்வைக்கு அழகா அதுவும் பதினறு வயசுல நிக்கிறுளே. இவள் யாரைத்தான் நம்பிப் போவாள். அப்படியே யாரையாவது நம்பி இவள் போனுலும்... ? எனக்குள் எண்ணிக் கொண்ட நான் கிழிச்சல் விட்டிருக்கும் அந்த இடத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவளோ... பிடரியில் கைகளை வைத்துக் கொண்டு 'பியாஸ்' மரத்தில் குதித்தேறும் அணிலைப் பார்த்துக் கொண்டிருக்கிறுள்.

'அய்ய...... அங்கப்பாரே அந்த அணில் பியாஸ் காயை எப்படிக் கடிக்கிதுன்னு...' ஒரு குழந்தையைப் போல கைகளை உதறிக்கொண்டு சொல்கிறுள்.

'ஆமா... அந்த அணில் அந்தக் காயைக் சடிக்காமல் என்னுப் பண்ணும். அதுக்கு உரிமையிருக்கு ஆனு..' வார்த்தையை முடிக்காமல் பார்வையை அவள் மீது பதியவைக்கிறேன்.

'என்னு... என்னையே விழுங்கிற மாதிரி அப்படிப் பாக்கிற?' வலது கண்ணை சுருக்கிக்கொண்டு அவள் சொல்வதும் ஒரு அழகாகத்தான் இருக்கு.

'ந்தாப்பாரு இனிம நீ இங்க வந்து இப்படி பொட்டையா நிக்காத. ரவிக்கைக்கு மேல ஏதாவது தாவணிக் கட்டிக்கிட்டு வா. இல்லாட்டி வராத' இதைக் கேட்டு கெக்ன்னு சிரிச்சவ 'நமக்கு ரவிக்கையும் சீத்தையும் உடுத்திதான் பழக்கம். தாவணி போட்டுப் பழக்கமில்ல' என்ருள்.

அதே நேரத்தில் 'ரத்து...! ரத்து...! என்று வீட்டுப் பக்கம் இருந்து குரல் கொடுத்தாள் முதலாளியம்மா.

'நீங்க வேல செய்மிறதா இல்லையானு பார்த்திட்டு வரத்தான் என்ன அவுங்க அனுப்பினது. ஆனு... நாங் உங்கக்கிட்டேயே கதை போட்டுக்கிட்டிருக்கேன்' என்றவள் அந்த முதலாளியம்மா காதில் விழும் அளவுக்கு.

'சும்மா ஐஸ் அடிக்காம வேலையை செய்யுங்க. அந்திக்கி இந்த பாருக்கெல்லாம் கன்னு வைக்கணும்' என்று சத்தம் போட்டு சொல்லிவிட்டு சீத்தையை தூக்கி சொருகிக் கொண்டு வரம்புகளின் வழியாக ஓடியவள் முள்வேலிக்கு அருகில் இருக்கும் பியாஸ் மரத்தின் கிளையைத் தாவிப் பிடித்து அப்பால் குதிக்கும்போது அவளின் சீத்தை முள்ளில் சிக்குவதைப் பார்த்து 'ஹய்யா......' என்று நான் சிரித்தேன்.

'ஹனே... நம்ப சீத்தைப் போச்சே...' கிழிச்சல் கண்ட சீத்தையைப் பார்த்து அவள் விசனப்படுகிறுள்.

வழியோடுப் போகத் தெரியாம குறுக்கு வழியா முள்வேலியைத் தாண்டிப் போன பாவம் சீத்தையும் கிழிஞ்சிபோச்சு அதோட......' வார்த்தையை முடிக்காமல் நான் வாய்விட்டுச் சிரிக்கின்றேன், கெக் கென்று சிரித்த அவளும், உடனே முகத்தைத் திருப்பிக்கொண்டு 'அய்ய... சீத்தக் கிழிச்சா கிழியட்டும். அதெல்லாம் பார்த்து யாரு உன்ன சிரிக்கச் சொன்னது?' மூஞ்சில அடிச்ச மாதிரிக் கேட்டுட்டு சீத்தையை தூக்கிப் பிடிச்சிக்கிட்டு ஒடுருளே.......

'ந்தா......! நான் கையைத் தட்ட அவள் திரும்பிப் பார்க்கிறுள். திரும்பியேதும் வர்ரதா இருந்தா ஒரு பீடி வாங்கிட்டு வாவே.....'

'பீடியா?... சேச்சே அதுக்கெல்லாம் சல்லி? நான் எங்கப் போய் வாங்கிறது' பேக்காட்டிவிட்டு ஓடிவிட்டாள். நான் மீண்டும் பாத்தி கட்டும் வேலையில் ஈடுபட்டாலும் என் நினைப்பு......?

நான் இந்த 'கந்தப்பொலக்கு' அதுவும் இந்த நிலத்துக்கு வந்த அன்றைக்கு அந்த முதலாளியம்மாவை விட இவள்தான் என்னை கேள்விக்கு மேல் கேள்வியைக் கேட்டுத் தொலைச்சாள். விவசாயத்தில் உனக்கு எத்தனை வருஷம் எக்ஸ்பீரியன்ஸ்?

நுவரெலியாவில் எத்தனையோ மரக்கறித் தோட்டம் இருக்க எதுக்கு அதைவிடக் குளிரான இந்த கந்தப்பொலைக்கு வந்தது?

'ஒரு அவுன்ஸ் ஏ. எஸ். ரக கோவா விதையில் எத்தனை ஆயிரம் கண்றுகள் முளைக்கும்:

'பீட் விதைகளில் 'குரிச் செப்ட்' தான் நல்லதா?' கன்றுகள் வளர்ச்சிக்கு 'மெச்ஷோ குரோப்' எந்த விதத்தில் உதவுகிறது?'

அப்பப்பா அவ இந்தக் கந்தப் பொலயில இருந்து விவசாயத்தைப் பற்றி நல்லாத் தெரிஞ்சி வச்சிருக்கா. அவ எனக்கு வச்ச இன்டவ்யூவில் நான் பாஸ் பண்ணவே குதிரைக் கொம்பாய்ப் போயிடுச்சி.

'இதுதான் உங்கக் காம்பிராலைட் கிடையாது. படுக்கைக்கு நேரா ஒழுகினு படுக்கையைத் தான் மூலைக்கு மூலை மாத்தியாகணும். கூரையை மாத்த முடியாது' என்று நூலாம்படை படர்ந்து கிடக்கும் ஒரு காம்பிராவை எனக்கு அறிமுகம் செய்து வைத்தவள், இங்கே ஒரே ஒரு தியேட்டர் உண்டு. அந்திக்கு ஆறு மணிக்கு மேல வேண்டிய மட்டும் படம் பார்க்கலாம். ஆனு.. ரவ்வு எட்டு மணிக்கு முன்ன சாப்பாட்டுக்கு வந்திடணும். வெளியாட்களோடு எந்த தொடர்பும் இருக்கக் கூடாது. சம்பளம் வேலையைப் பார்த்துத் தான் தரப்படும்.

சொல்லிக் கொள்ளாமல் வேலையை விட்டு நின்னு அப்புறம் அந்த முதலாளியம்மா போலீசுக்காரன்கிட்ட 'இந்தப் பய எங்க சாமனத்தை எல்லாம் திருடிக்கிட்டுப் பொயிட்டான்னு'





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி அடிவாங்கிக்கொடுப்பா' இப்படியெல்லாம் சொன்னவா கடைசியா சொன்னு 'இந்தக் கன்டிஷனெல்லாம் ஒனக்கு ஒத்து வராது பேசாம வேற இடம் பார்த்து பொயிரே' என்ருள். இதிலிருந்து பார்க்கப் போனுல் இந்த நிலத்துக் காரியிடம் அவள் எத்தனையோ ஆக்கினைக் குள்ளாகி இருக்கிருள் என்பதை புரிந்துகொண்டேன்.

இங்குள்ளவுங்க இவளை ரத்து... ரத்தின்னுதான் கூப்பிடுவாங்க. நானும் இதே மாதிரித்தான் 'ரத்து,ன்னு கூப்பிட்டேன். அவளுக்கு ஒரே முறைப்பு வந்திருச்சி.

'என்னு... ரத்துன்னு மொட்டையாக் கூப்பிடுர. நம்மப் பேரு 'ரத்துமல்' தெரியுமா?' என்னவோ கோபக்காரியைப் போல முறைச்சவ கெக்கின்னு என்னைப் பார்த்து சிரிச்சிட்டு 'நீயும் ரத்துன்னேக் கூப்பிடு' என்ருள்.

'ஆமா...... ரத்துமல்ன்னு சிங்களப் பேரில்ல ..' நான் சந்தேகத்துடன் கேட்டேன்.

'சிங்களப் பேருத்தான்...... ஆனு நா சிங்களவனுக்கும் தமிழச்சிக்கும் பொறந்தவளாச்சே. தமிழும் கதைப்பேன் சிங்களமும் கதைப்பேன்; ஆனு ரெண்டுமே சரியா எழுத வராதே...' என்ருள்.

'ஆமா... இப்ப உனக்கு அம்மா அப்பா இல்லையா?'

'இருக்காங்களோ செத்துப் பொயிட்டாங்களோன்னுத் தெரியாது'

'ஏன் அப்படிச் சொல்லுர?'

'நாப் பொறந்ததும் ஒரு கொலைக் கேஸில்ல சம்பந்தப் பட்ட எங்க அப்பாவை போலீசுக் கொண்டு பொயிருச்சாம். அப்புறம் அம்மா சிய்யா வீட்டிலேயே என்னைக் கொஞ்சக் காலம் வச்சிக்கிட்டிருந்தாளாம். அப்புறம் யாரோ ஒருத்தனேட கூட்டாகி சிய்யாவோட சண்டை பிடிச்சுக்கிட்டுப் பொயிட்டாளாம். ஆனு சிய்யா என்னை அம்மாக்கிட்டக் கொடுக்கல்ல. அவரே வளர்த்தாரு. அப்புறம் ஒரு ஏழெட்டு வயசில எனக்கு நல்லா விபரம் தெரியரப்ப சிய்யா எங்க ராகலையிலிருந்து என்னைக் கூட்டிக்கொண்டாந்து இந்த வீட்டில வேலைக்கு விட்டுட்டு போனவரு போனவருத்தான். 'நுவர்ள' ஆஸ்பத்திரில்லத்தாங் காச்சல்ல செத்தாராம். இப்ப எனக்கு எல்லாமே இந்த வீடுதான்' என்ற ரத்துமல்லின் கண்கள் கலங்கின.

'சிய்யாவை இப்ப நினைச்சாலும் உனக்கு வருத்தமா இருக்கா?'

'பின்ன இருக்காதா. என்னை வேலைக்கு விட்டதும் விட்டாரு இந்த வீட்டிலேயா விட்டுட்டுப் போகணும்? அதை நினைச்சாத்தான் எனக்கு வருத்தம் கூட'

'சரி ... அழுவாத ......'

'யாருவா அழுதது. நாங் ஒண்ணும் அழுவல்ல நீ நமக்கு ஆறுதல் சொல்லாத. நமக்கு எல்லாந் தெரியும்.

இப்படித்தான் வேதனைப் படுவா — ஆறுதல் சொன்னு முறைப்பாள் அப்புறம் வெகுளித்தனமாகச் சிரிப்பா.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது

மப்பும் மந்தாரமுமாக இருந்த வானம் வெளிவாங்கி பளீச்சுன்னு சூரிய வெளிச்சம் பட்டது. அந்த சூரிய உஷ்ணத்திலும் எனக்கு குளிராகத்தான் இருந்தது. என்ன செய்ய அந்தக் கந்தப் பொலயின் குளிர்வாடை அப்படி. கன்றுகள் வைக்க வேண்டிய பாத்திகளை வேகமாக குத்திவிட்டேன்.



'என்னவா...... வேல நடக்கிதா?' என்று கேட்டபடியே முள் வேலியைத் தாண்டி வந்து கொண்டிருந்தாள் ரத்து. அவளின் கைகளில் ஈயக் கேத்தல், கக்கத்தில் பாண் துண்டையும் இடுக்கிக் கொண்டிருந்தாள்.

'அய்ய.. இதைக் கொண்டு வரவா இவ்வளவு நேரம்' என் கையில் படிந்திருக்கும் மண்ணைத் தட்டிவிட்டுக் கொண்டே நான் கேட்டேன். அவள் பியாஸ் மரத்தை கடந்து என் அருகில் வந்து என்னை ஒரு முறைப்பு முறைத்துவிட்டு, 'ஆமா... பாவ புண்ணியத்துக்கு கொண்டுவந்தா இப்படித்தான் கேட்பீங்க' என்றவள் பாண்துண்டை என்னிடம் கொடுத்துவிட்டு கேத்தலை கீழே வைத்தாள்.

'ஏது இன்னைக்கி அந்த அம்மா பாண் கொடுத்திருக்காங்க'

'ப்பூ.. அவளாவது கொடுக்கவாவது? காலயில நமக்குக் கொடுத்த பாண். அதைத்தான் வச்சிருந்து உனக்குக் கொண்டாந்தேன்' என்றவளை நான் வெறித்துப் பார்த்தேன். அவள் என்னைக் கவனியாது தூரத்தில் பசுமையோடு நிற்கும் லீக் பாத்திகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நான் எதுவும் பேசாமல் அந்த ஒருதுண்டு பாணைச் சாப்பிட்டுவிட்டு தேநீரை மண்டினேன். இதைப்பார்த்து கெக்கென்று சிரித்தவ 'அப்பாடா உங்களுக்கு சர்யான பசிதான்' என்ருள். 'ஆமாவென்று' தலையாட்டிய நான்......

'ரத்து பீடி வாங்கிட்டு வந்தியா'ன்னு கேட்டேன்.

'பீடியா.. மறந்துட்டேனே' என்றவள் ரவிக்கைக்குள் கையை விட்டு ரெண்டு பீடிகளை எடுத்துத் தந்ததும் எனக்குச் சிரிப்புத்தான் வந்தது.

'ஏன் சிரிக்கிற!' அவ டக்கின்னுக் கேட்டாள்.

'ஒண்ணுமில்ல... சும்மா...' நான் சமாளித்தேன்.

'நம்ம கிழிஞ்ச ரவிக்கையைப் பார்த்துத்தானே சிரிச்ச?' அவள் இப்படிக் கேட்டபோது அவளின் குரல் கம்மியது.

'சேச்சே... அதைப் பார்த்தில்ல......'

'பின்ன எதப்பார்த்து ....!'

அவ கேள்விக்கு நான் திண்டாடினேன். அவளே பியாஸ் மரத்துப் பக்கம் குதித்தோடி, ஒரு கிளையை வளைத்து ஒரு காயைப் பிடுங்கி கடித்தாள். அதே நேரத்தில்,

'ஏய்... என்னு இங்க வ்ந்து நான் வேலை செய்யுறியா?'

குரல் வந்த திசைப் பக்கம் திரும்பிப் பார்த்தேன். முள் வேலிக்கப்பால் சிரிசேனுவும் கைலாசமும் நின்று கொண்டிருந்தார்கள்.

'அட எப்படியப்பா என்னைத் தேடிக் கண்டுபிடிச்சீங்க' கேட்டபடியே அவர்கள் நிற்கும் அந்த முள்வேலிக்கருகில் நான் போனேன். 'இந்த வேலையை விட்டுட்டு எங்களோட சீக்கிரம் வா. இந்த மாதிரி பணக்காரப் புள்ளிங்க நிலத்தில உழைச்சுக் கொடுக்கிறதுனுல என்னு லாபம் கிடைக்கப் போவுது? கூலிக் குறைப்பு, ஏமாத்து இதுங்கத்தான் நடக்கும். என்றைக்கும் உன்ன ஒரு அடிமையா, அவுங்க வீட்டு செக்கு மாடாத்தான் நினைப்பாங்க. நீ எங்கக்கூட வா. நம்ம ஏழை விவசாயிகளுக்காக கூட்டுறவுல ஒரு நிலம் பிடிச்சிருக்கோம். நூரளைக் காட்டுப் பக்கம்தான் அது இருக்கு. இங்க அடுத்தவனுக்கு உழைச்சுக் கொடுப்பதைவிட அங்க நமக்காகவே உழைக்கலாம் வா......' என்ருன் கைலாசம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பவுமே தொழிலாளர் வர்க்க 'சிந்தனையோடு செயல்படும் அவர்களுடன் சேர்ந்து போக நானும் எண்ணினேன்.

'சரிடாப்பா நான் உங்கக் கூடவே வர்றேன், ஆனு நான் இத்தினி நாளா இங்க உழைச்ச சம்பளம்......?'

'இந்தாப்பாரு அதுக்கெல்லாம் அந்த வீட்டுக்காரிக்கிட்ட முடிவுப் பண்ணிட்டுத்தான் வந்திருக்கோம்.

உன்னப் பாக்கிறதுக்கு முன்ன உன்ன வச்சி வேலவாங்க நினைச்சாளே அவளப் பார்த்திட்டோண்டா' என்றுன் சிறிசேனு.

'சரி, சரி நீ கிளம்பிவந்து பஸ் ஸ்டாண்டில் நில்லு. நாங்க அப்படியே கல்லுப் பாலத்துக்குப் போய் அங்க ஒரு நிலத்தில வேல செய்யுர மஹிந்தபாலாவையும் சில்வேஸ்டரையும் கூட்டிக்கிட்டு வந்திடுறம்...' என்று சொல்லிவிட்டு அவர்கள் கிளம்பினுர்கள்.

'இந்தாடியம்மா... இன்றையோட இந்த வேலையும் வேண்டாம் ஒண்ணும் வேண்டாம்' என்று பியாஸ் மரத்துக் கிளையைப் பிடித்தவாறு வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் ரத்துமல்லைப் பார்த்து சொன்ன நான் — சாரத்தில் படிந்திருக்கும் மண்ணைத் தட்டிவிட்டேன்.

'போறதா......? போங்க... போங்க... போயி உங்கக் கூட்டத்தோட நல்லா இருங்க; என்று என்னை ஆசீர் வதிப்பது போல சொன்ன ரத்து எனக்கு முன்னுல் பியாஸ் மரத்துக் கிளையைத் தாவிப் பிடித்து முள் வேலியைத் தாண்டிக் குதித்து ஓடிவிட்டாள்.

நான் அந்த நிலத்துக்குச் சொந்தக்காரியிடம் போய் என் சம்பளக் கணக்கை எல்லாம் முடித்துக் கொண்டு என் காம்பிராவுக்குப் போனேன். அந்தக் காம்பிராவில் எனக்காக என்ன இருக்கிறது? ஒரு பழைய சாரமும் கம்பளிப் போர்வையும் தான். அந்தக் கம்பளிப் போர்வையை இங்கேயே விட்டுவிட்டுப் போய்விட்டால் அப்புறம் அந்த நூரளைக் குளிரில் எப்படிக் கிடப்பது?

நான் அந்தக் காம்பிராவின் கதவைத் திறந்து சாரத்தையும் கம்பளிப் போர்வையையும் சுற்றிக் கொண்டிருக்கும்போது ஒரு விசும்பல் சத்தம்.

'அட இந்தக் காம்பிராவில் விசும்பலா?' யன்னலைத் திறந்து பார்த்தேன். அவள்தான் அந்த மூலையில் விசும்பியபடி உட்கார்ந்திருந்தாள்.

'ஏன் ரத்து இங்கவந்து அழுதுகிட்டிருக்க. அம்மா ஏசுனுளா இல்லாட்டி அடிச்சாளா?'

அவள் எதுவும் பதில் சொல்லல்ல......

'பின்ன எதுக்கு அழுவுற'

'நீங்கதான் இங்க இருந்து போறீங்க. ஆனு நான் காலமெல்லாம் இங்கேயே இங்கேயே கிடக்கணும். அதை நினைக்கத்தான் அழுவ வந்திருச்சி.

ரத்துமல் இங்கிருந்து விடுதலையாகிப் போகத் துடிக்கிறுள். அவளை இப்படியே விட்டுட்டுப் போக எனக்கு மனசு வரல்ல.

'அழுவாத ரத்து. நீ என்னுடன் வந்திடுறியா?' இதை எதிர்பார்த்ததுபோல அவள் எழுந்து வந்து என் கைகளைப்பற்றி தன் கண்களில் ஒத்திக்கொண்டாள். அவளை அணைத்துக் கொண்டே காம்பிராவை விட்டுச் சென்றேன். நாங்க ஒரு புதிய பூமியை நோக்கிப் போறேம். அங்கே பூத்திருக்கும் ஒவ்வொரு சிவப்பு மலரும் எங்களை அடக்கி, ஒடுக்கி, ஏமாற்றும் பெரும் புள்ளிகளை சுட்டுப் பொசுக்காமல் இருக்காது. ★



# பாண்டுங் முதல் கொழும்பு வரை

வி. தாரசோவ்

கூட்டுச் சேரா நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் தமது முறையான ஐந்தாவது மாநாட்டினை ஒட்டி இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் கொழும்பில் கூடுகிறுர்கள் பல்வேறு மட்டங்களில் மிகப் பல வடிவங்களில் ஊக்கமான தயாரிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்காவிலுள்ள பெரும்பாலான வளர்முக நாடுகளை ஒன்றிணைக்கும் கூட்டுச் சேரா இயக்கம் இன்றைய உலகில் சர்வதேச உறவுகளின் ஆக முக்கியமான கூறுக விளங்குகிறது. வரலாற்று ரீதியான வளர்ச்சியின் நியதிப்படியே அது உலக சமாதான வீரன், சமுதாய மாற்றங்களுக்குப் போராடும் வீரன் என்ற உன்னதப் பாத்திரத்தை ஏற்றுள்ளது.

வரலாற்று ரீதியாக இந்த இயக்கம் 1955-ல் நடைபெற்ற ஆசிய — ஆபிரிக்க நாடுகளின் பாண்டுங் மாநாட்டிலிருந்து ஆரம்பித்தது. ராணுவக் கூட்டணிகளில் கலந்து கொள்வதில்லை என்ற கோட்பாட்டை பிரகடனம் செய்த இந்த மாநாடு, நாடுகளிடையே சமாதான சக வாழ்வை ஆதரிக்கத் தயாராக இருப்பதாகப் பெருமிதத்துடன் பிரகடனம் செய்தது. தனது ஸ்தாபன அடிப்படையினை வலுப்படுத்திக் கொள்ளும் அதே பொழுதில் இந்தக் கூட்டுச்சேரா இயக்கம் அதன் அரசியல் லட்சியங்களை முன்னைவிட அதிகத் தெளிவாக நிர்ணயம் செய்துள்ளது. 1961-ல் பெல்கிராடில் நடைபெற்ற கூட்டுச் சேரா நாடுகளின் முதல் உச்சகட்ட மாநாட்டில் 25 நாடுகள் கலந்து கொண்டன. கொழும்பில் நடைபெற இருக்கும் ஐந்தாவது மாநாட்டின் போது இந்த இயக்கததில் பாலஸ்தீன விடுதலைப் போர் ஸ்தாபனம் உள்ளிட்ட 82 உறுப்பு நாடுகள் கலந்து கொள்கின்றன.

கூட்டுச் சேரா இயக்கத்தின் அதிகரித்து வரும் பாத்திரத்தை சர்வதேசப் பிற்போக்குச் சக்திகள் கடுமையாக எதிர்க்கின்றன. இது இயல்பே. காரணம் இந்த இயக்கத்தின் பிரதான அம்சம் அதை ஏகாதிபத்திய — எதிர்ப்பு காலனியாதிக்க எதிர்ப்புத் திசை வழியாகும்.

1975 ஆகஸ்டில் கூட்டுச் சேரா நாடுகளின் அயல்துறை அமைச்சர் பேருவில் கூடினுர்கள். அவர்களது மாநாடு கொழும்பில் நடைபெறவிருக்கும் உச்சகட்ட மாநாட்டின் ஒத்திகை போன்று இருந்தது. அயல்துறை அமைச்சர்கள் லிமா பிரகடனம் என்று அறியப்படுகிற பரஸ்பர உதவி, ஒருமைப்பாட்டுக்கான ஒரு வேலைத் திட்டத்தை அங்கீகரித்தார்கள். ஏகாதிபத்தியம் காலனி ஆதிக்கம் நவீன காலனி ஆதிக்கம், இனவெறி, யூத இனவெறி, இன ஒதுக்கல் இதர வடிவிலான விதேசி ஆதிக்கம் ஆகியவற்றை எதிர்த்து அவர்கள் நடத்திய இடைவிடாத போராட்டத்தின் விளைவாக சர்வதே உறவுகளில் ஏற்பட்டு வரும் கணிசமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்கள் விஷயத்தில் கூட்டுச் சேரா நாடுகள் நிர்ணயமான கூறுகளில் ஒன்ருக விளங்குகின்றன.

கூட்டுச்சேரா இயக்கம் ஒரு வலிமை வாய்ந்த சக்தியாக வளர்ந்துள்ளது. மேலை நாடுகளின் ஏகாதிபத்திய வட்டாரங்கள் இதை நன்ருக அறிந்துள்ளன. இதனுல்தான் அவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்த இயக்கத்தின் ஏகாதிபத்திய—எதிர்ப்பு அம்சத்தை நெரித்து ஒடுக்கவும், இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் நாடுகளிடையே பிளவை ஏற்படுத்தவும் முயலுகின்றன. இந்த நோக்கத்திற்காக அவை வளர்முக நாடுகளுக்குத் தொடர்ந்து பாரமாக இருந்து வரும் எண்ணற்ற உள்நாட்டு பொருளாதார சமூகப் பிரச்சினைகளைப் பயன்படுத்துகின்றன. பெரும்பாலான கூட்டுச் சேரா நாடுகள் காலனி அடிமைத்தனத்திலிருந்து வெகு அண்மையில்தான் தம்மை விடுவித்துக் கொண்டன. அவற்றின் பொருளாதார இடர்ப்பாடுகள் அகற்றப்பட வேண்டியவை என்பது இயல்பே. ஏகாதிபத்திய சக்திகள் 'பொருளாதார உதவி' என்ற நெம்புகோல்களை முன்வைத்து இவற்றைப் பயன்படுத்த முயல்கின்றன. இன்று வளர்முக நாடுகள் ஏகாதிபத்திய ஆணையினை எதிர்த்துப் போராடவும், உண்மையிலேயே நீதியான பொருளாதார உறவுகளை நிலைநாட்டவும் ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்கியுள்ளன என்பதை நைரோபியில் நடைபெற்ற 'அங்டாட் - 4' மாநாடு எடுத்துக் காட்டியது. புதிதாக விடுதலை பெற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் ஏகாதிபத்தியம்தொடர்ந்து அப்பட்டமான அரசியல் தலையீடு நடத்தி வருகிறது.

கூட்டுச்சேரா நாடுகளுக்கும் சோஷலிஸ்ட் நாடுகளுக்கும் இடையே வளர்ந்து வரும் ஒத்துழைப்பு இன்றைய எதார்த்தத்தின் பிரதானமான வெளியீடாகும். மக்களின் தேச விடுதலைப் போராட்டத்திற்கு சர்வாம்ச ஆதரவு, தமது சுதந்திரத்தை வென்றடைந்துள்ள நாடுகளின் அரசுரிமையையும் சுயாதீனத்தையும் பாதுகாப்பது என்ற லட்சியங்கள் பால் சோவியத் யூனியன் விசுவாசத்தோடு நடந்து வருகிறது என்பதை வளர்முக நாடுகள் உறுதியாக நம்புகின்றன. சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் எல். ஐ. பிரஷ்னேவ் கூறியதாவது: 'வளர்முக நாடுகளின் அயல்துறைக் கொள்கை கண்கூடானது. செயலூக்கமானது. இதைப் பல போக்குகளில் — கூட்டுச் சேரா இயக்கத்தின் அரசியல் போக்கிலும் ஆபிரிக்க ஒற்றுமை அமைப்பின் செயல்பாட்டிலும், வளர்முக நாடுகள் உருவாக்கிய பல்வேறு பொருளாதார அமைப்புகளிலும் காணலாம். சக்திகளின் இன்றைய பரஸ்பர உறவுகளின் நிலைமையில் விடுதலை பெற்ற நாடுகள் ஏகாதிபத்திய ஆணையை எதிர்ப்பதற்கு முற்றிலும் வல்லமை பெற்றவையாக இருப்பதுடன், நீதியான சமத்துவமான பொருளாதார உறவுகளை அடைவதும் சாத்தியமாகியுள்ளது. சமாதானம், மக்கள் பந்தோபஸ்திற்கான பொதுப் போராட்டத்தில் அவை ஏற்கெனவே வகித்துள்ள கணிசமான பங்கு மேலும் செழுமையாக அதிகரிப்பது சாத்தியம் என்பது தெளிவாகும்'

கொழும்பில் நடைபெறவிருக்கும் கூட்டுச்சேரா நாடுகளின் மாநாடு இந்தச் சொற்களின் ஓர் ஒளிமயமான படப்பிடிப்பாகும். ★



# 'பிரச்சினைக்குரிய சில தகவல்கள்' இந்துசமுத்திர அமைதி சீர்குலையுமா?

எம். ஏ. இனயத்துள்ளாஹ்

தென்னுசியாவைச் சுற்றிச் சூழ்ந்து தன் ஆழ்கடலால் உலகை அச்சுறுத்தும் இந்து சமுத்திரத்தின் அமைதி இன்று உலகின் அமைதிக்கே ஒரு சவாலாக இருக்கிறது. இந்து சமுத்திரம் அமைதி மண்டலமாகப் பிரகடனம் செய்யப்பட வேண்டும் என்ற உலக நாடுகளின் கோரிக்கை தினம் தினம் வலுப்பெற்று வருகின்றது. ஆகஸ்டில் நடைபெற இருக்கும் கூட்டுச்சேரா நாடுகளின் உச்சி மகாநாடு கூட இக்கருத்தை ஆதரித்துப் பல பிரேரணைகளை நிறைவேற்றும் என்பது திண்ணம்.

இவ்வேளை ஆசியாவோடு தொடர்புள்ள பிரச்சினைக்குரிய சில கடந்தகால, நிகழ்கால சம்பவங்களை அலசி ஆராய்தல் தற்சமயம் பொருத்தமானதாகவே தோன்றுகின்றது இந்தப் 'பிரச்சினைக்குரிய தகவல்கள்' என்ற வரிசையில் இந்து சமுத்திரத்தின் மீதான அமெரிக்காவின் 'கழுகு'ப் பார்வை முதலிடம் பெறுகின்றது.

இந்து சமுத்திரத்திலுள்ள தியாகோ கார்சியா குறித்து ஆங்கிலோ — அமெரிக்க இணக்கம் மிகவும் பிரச்சினைக்குரியது. இத்தீவில் செய்திப் பரிவர்த்தனை நிலையமொன்றை அமைப்பது தொடர்பாக 1967-ம் ஆண்டளவில் அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்குமிடையில் 50 வருட கூட்டு ஒப்பந்தமொன்று நிறைவேற்றப்பட்டது. இதனையிட்டு பல நாடுகள் அச்சம் தெரிவித்தன. இத்தீவில் கடற்படைத் தளமொன்றை அமைக்க எடுக்கும் முதல் முயற்சி இது என பலரும் குற்றம் சாட்டினர். இவ்விவகாரம் ஐ. நா. சபை சென்றது. அதன் பலனுக, 'இந்து சமுத்திர எல்லைகள், அதன் ஆகாயப் பிராந்தியம் உட்பட நிர்ணயிக்கப்பட வேண்டும். இதன் மூலம் அது எப்போதுமே சமாதான மண்டலமாக இருக்க வேண்டும்' என்ற தீர்மானம் 1971 டிசம்பர் 16 ல் ஐ. நா. பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்துக்கு எதிரான முறையில் இன்று அமெரிக்காவே செயல்படுகிறது.

•அமெரிக்காவின் தேசிய நலன்களின் பிரதான அரசியல் ராணுவ தேவைகளை பூர்த்தி செய்யவே அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் இந்து சமுத்திரத்தில் தோன்றுகின்றன' என அமெரிக்க ராணுவக் கட்டுப்பாட்டு படைக்கலைப்பு ஏஜென்ஸியின் துணைத் தலைவரான ஸுர் ஹெல்லன் அயல் துறை அமைச்சின் உபகமிட்டியில் கருத்து வெளியிட்டுள்ளார். அதேவேளை இந் நடவடிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஒரு இந்து சமுத்திர நாட்டுக்கும் அல்லது நாடுகளுக்கும் எதிரான பயமுறுத்தல் வேலை அல்ல என்று அவர் சமாதானம் கூறுகிறார். அமெரிக்காவின் இப்போக்கு 'தன் நலனுக்காக அது உலகை அச்சுறுத்துகிறது' என்பதையே தெளிவுபடுத்துகிறது.

அமெரிக்காவின் இந் நடவடிக்கையை மானுட சௌஜன்யத்தை விரும்பும் நாடுகள் ஒருபோதும் ஆதரிக்கமாட்டாது. இந்து சமுத்திரத்தில் உள்ள தனது தளத்திலிருந்து தென் ரஷ்யாவிலும், சைபீரியாவிலும் உள்ள இலக்குகளை ஏவுகணைகள் மூலம் தாக்க அமெரிக்காவுக்கு முடியும் எனக் கூடி ரஷ்யா இதனைக் கண்டிக்கின்றது. இத்தாக்குதலைச் சமாளிக்க ரஷ்யாவிடம் போதிய பலம் இருப்பினும் அது உலக அமைதிக்குக் குந்தகம் செய்ய விரும்பவில்லை. மாறாக, இந்து சமுத்திரத்தை சமாதான மண்டலமாக, அணு சூன்யப்பிரதேசமாக உருவாக்க வேண்டும் என்ற ஆசிய ஆபிரிக்க மக்களின் விருப்பத்தை பூர்த்தி செய்ய சோவியத் யூனியன் தயாராக உள்ளது. உலகின் பல்வேறு பகுதிகளை அணுசூன்யப் பகுதிகளாகப் பிரகடனப் படுத்தல் வேண்டும் என சோவியத் தலைவர்கள் 1-61 செப்டம்பரில் கூறியமை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

அமெரிக்க கப்பல் தாம் விரும்பும் இடமெல்லாம் சென்று வரலாம்; அவை மற்ற நாடுகளின் கருத்துக்களை மதிக்காது என ஸர்ஹெல்லன் தொடர்ந்து வாதித்துள்ளார். இவ்வாதம் இந்து சமுத்திர கடலோரப் பகுதி நாடுகட்கு விடுக்கும் பகிரங்க சவாலாகும். இந்நாடுகள் எதிர் சவால் இட்டால் இந்து சமுத்திர அமைதி கெட்டுவிடவும் இடமுண்டு.

இதிலிருந்து ஓர் உண்மை புலப்படுகின்றது. அதாவது இந்தோசீனாவிலும் வங்காளத்திலும் தோல்விகண்ட அமெரிக்கா, மேற்காசியாவிலிருந்து பின் தள்ளப்பட்டதைத் தொடர்ந்து ஆசியாவுக்கும் ஆபிரிக்காவுக்கும் எதிரான குழிகளை வெட்டுவதில் இறங்கியுள்ளதெனலாம். தியாகோ கார்சியா தீவில் மாத்திரமன்றி முழு ஆசியாவிலுமே அமெரிக்கா கண்வைத்துள்ளதெனக் கூறப்படுகின்றது. ஓகினோவா உட்பட யப்பானில் 55000 துருப்புக்களை அமெரிக்கா வைத்துள்ளது. தென் கொரியாவில் 38000 துருப்புக்களும், பிலிப்பைன்ஸில் 16000 துருப்புகளும் உள்ளனர். 196[illegible] முதல் ராணுவத் தளம் அமைப்பதற்காக அமெரிக்கா [illegible]00 கோடி டாலர்களை செலவிட்டுள்ளதெனலாம். இச் செய்கைகள் எல்லாம் இந்து சமுத்திர நாடுகளை மாத்திரமல்ல பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சகல நாடுகளையும் பீதிகொள்ளச் செய்கின்றது என்பது கண்கூடு.

அடுத்து தென்னாசியத் துணைக்கண்டத்தில் பீக்கிங் தலைவர்கள் கொண்டுள்ள அக்கறையும் கவனமும் விபரிக்கப்பட வேண்டியதொன்று. இதற்குரிய காரணத்தை ஒரே வரியில் கூறின் 'ஆசியாமீது மேலாதிக்கம் செலுத்த வேண்டும் என்ற அவர்களின் பேராசை' எனலாம். தன் ஆசையை நிறைவேற்ற தென்கிழக்காசியத் துணைக்கண்டத்தில் சீனாவின் முக்கிய நண்பனான பாகிஸ்தானில் 'ராணுவ அதிகாரிகளைக் கொண்ட நெகிழ்ச்சியுறும் அரசை' நிறுவும் பணியில் சீனா என்றும் கண்ணும் கருத்துமாய் இருந்து வந்துள்ளதென்பதை மறுக்க முடியாது. எனினும் சீனா இதில் பூரண வெற்றி காணவில்லை.



சிம்லா — டெல்லி ஒப்பந்தங்களின் அமுல் நடப்பு, பாகிஸ்தான் வங்காளத்தை அங்கீகரித்தமை போன்றவை சீனாவுக்கு ஏமாற்றத்தையே அளித்தன. வங்காளிகளின் விடுதலைபோராட்டத்தின் போது பாகிஸ்தானின் ராணுவ ஆட்சிக்கு பீக்கிங் தலைவர்கள் ஆதரவு தெரிவித்த போதும் வங்காளிகள் விடுதலை பெறாமல் விடவில்லை. எனினும் இந்நிகழ்ச்சி சீனத் தலைவர்களின் கவனத்தை வேறுவழியில் திசை திருப்பியுள்ளதெனலாம்.

இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலான உறவை சீர்குலைப்பதிலும், பாகிஸ்தான், இந்தியா, வங்காளம் ஆகிய மூன்று நாடுகளுக்குமிடையிலான சுமுகமான உறவு ஏற்படுவதைத் தடுப்பதிலும், வங்காளதேச நிலைகள் ஸ்திரப்படுதலை தடைசெய்வதிலுமே இன்று சீனா ஈடுபட்டுள்ளதெனில் மிகையன்று. பீக்கிங் தலைவர்களின் இவ் எதிர்நடவடிக்கைகள் பூரண வெற்றி அளிக்கவேண்டுமாயின் சம்பந்தப்பட்ட நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் பீக்கிங் தலையிட வேண்டும். இதனை உலக நாடுகள் அனுமதிப்பதில்லை. இத்தலையீடு இந்து சமுத்திரத்தையே ஓர் இரத்தக்களறியாக்கி விடவும் கூடும். இதற்கு ஆதரவாக உலக முற்போக்குச் சக்திகள் ஒத்துழைப்பு நல்கலாம் என எதிர்பார்க்க முடியாது.

அடுத்து 1964-ல் சீனாவும், 1974-ல் இந்தியாவும் அணுவல்லரசாக மாறியமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று. உலகில் ஐக்கிய அமெரிக்கா, சீனா, சோவியத் யூனியன் என்பன அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து, பரீட்சித்து, பொருளாதாரத்தில் பின்தங்கிய ஆசிய நாடுகளை அணுவைக் காட்டி அச்சுறுத்திய நிலை இந்தியாவின் அணுப்பரிசோதனையால் தலைகீழாகக் கவிழ்க்கப்பட்டுள்ளது.

'தற்பாதுகாப்புக்காக எந்த ஒரு நாடும் அணுகுண்டு செய்வது சட்டமுறை' என 1964-ல் சீனா வாதிட்டது. 'அமைதிப் பணிக்காகவே அணுப் பரிசோதனை நடாத்தியது' என இந்தியா 1974 மேயில் கூறியது. இந்நிலையில் மூன்றாம் உலக நாடுகள் என்ன செய்யலாம் என்ற சிந்தனையில் லயித்துள்ளன. அதே வேளை இந்திய அணுகுண்டுப் பரிசோதனையை மேற்கு நாடுகள் கண்டித்தன. இதிலிருந்து மேற்கு நாடுகளுக்கு மூன்றாம் உலக நாடுகளின் மீது அன்பும் அனுதாபமும் உள்ளதென நாம் முடிவெடுக்க இயலாது. மேற்கு நாடுகள் நெஞ்சில் நஞ்சையும் உதட்டில் அமுதையும் வைத்துக் கொண்டு பாசாங்கு செய்கின்றன ஏன்?

அணுச்சக்தித் துறையில் இந்தியா தலைதூக்கி விட்டால் ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கு இந்தியா பாதுகாப்பு அரணாகி விடலாம் என மேற்கு நாடுகள் கவலைப்படுகின்றன. அணுசக்தியை ஆக்கத்துறைக்குப் பயன்படுத்துவதில் இந்தியா வெற்றி பெற்றுவிட்டால் ஆசியாவில் மேற்கு நாடுகளுக்குள்ள 'வர்த்தகச் சந்தை' வீழ்ச்சியுறும் என்ற பீதி மேற்கு நாடுகளிடம் இல்லாமல் இல்லை. எல்லாவற்றையும் விட இந்தியாவின் அண்டை நாடான பாகிஸ்தான் மிகவும் ஆத்திரமும் கவலையும் கொண்டுள்ளது. இந்து சமுத்திரத்தில் அமைதி நிலவுவதற்குப் பதிலாக யுத்த மேகங்கள் சஞ்சாரம் செய்யும் என பாகிஸ்தான் கருதுகின்றது.

இவ்வாறு இந்தியாவை மையமாக வைத்து ஏனைய நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் மனப்போக்கை கணிப்பீடு செய்கையில், இந்திய அணுகுண்டு வெடிப்பு சிலருக்கு அதிருப்தியை அளிக்கின்றது. அதிருப்தியும் மனக்கசப்பும் சுயநலமும் ஒன்றுகூடி இந்து சமுத்திர அமைதியைச் சீர்குலைக்கலாம் என பலரும் கருதுகின்றனர். ஒரு நாட்டைவிட மற்ற நாடு பலம் பொருந்தியது என்பதைக் காட்ட அணுப் பரீட்சை என்ற 'விஷப்பரீட்சை' அதிகரிக்கும்போது இந்து சமுத்திரத்தில் மட்டுமல்ல, இவ் அவனி எங்குமே அமைதி நிலவ முடியாது.

'பார்சல்' தீவுகளை சீனு பலவந்தமாகக் கைப்பற்றியமை, சீனுவின் 'சண்டித்தனத்'தைக் காட்டுகின்றது. அதே வேளை ஆசியாவின் சிறிய நாடுகளுக்கு அது ஓர் எச்சரிக்கையாகவும் அமைகின்றது. அமெரிக்க கடற்படைத் தளங்களை மொஸாம்பிக்கில் உள்ள லொயென் கேமார்குயஸிலும், நகாலாவிலும் தாபிக்க போர்த்துக்கல் அளித்த அங்கீகாரம், அமெரிக்காவின் நோக்கையும் போக்கையும் தீவிரப்படுத்த உதவுகிறது. கராச்சித் துறைமுகத்தை சீனக் கப்பற்படை தன் தேவைக்காகப் பயன்படுத்தவும், அதற்குப் பிரதி உபகாரமாக பின்னர் 30 கோடி டாலர் பெறுமதியான ராணுவ உதவியைப் பெறவும் சீனுவோடு பாகிஸ்தான் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நடுநிலைமை நாடுகள் ஒருபோதும் வரவேற்க முடியாது. இந் நிகழ்ச்சிகள் அனைத்தும் ஏககாலத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இவை இந்து சமுத்திர நாடுகளை பீதிகொள்ளச் செய்துள்ளன.

இந் நிகழ்ச்சிகளும் தகவல்களும் ஆசிய ஆபிரிக்க நாடுகளினது மாத்திரமல்ல உலக நாடுகளினது பாதுகாப்பு, அமைதி, நலன் என்பன குறித்து விமர்சிக்கப்பட வேண்டியவைகளாகும். எனவே இந்து சமுத்திரத்தை சமாதான மண்டலமாக உலக நாடுகள் ஏகமனதாகப் பிரகடனம் செய்யவேண்டும்; பிரகடனத்தில் கையெழுத்திட்டால் மட்டும் போதாது; செயலில் அமுல் நடத்தவேண்டும். இதனை நிகழ்கால மனுக்குலம், எதிர்கால மக்களின் அமைதியான நல்வாழ்வு கருதிச் செய்யும் அரசியற் சமூகத் தொண்டென வர்ணிப்பதில் தவறில்லையெனலாம். இனியாவது நிகழ்காலத்தார் சிந்திக்கட்டும். ★

மல்லிகை

## புதிய சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா [மலர் உட்பட] | 12 — 00 |
| தனிப்பிரதி | — 75 |
| இந்தியா, மலேசியா | 18 — 00 |

(தபாற் செலவு உட்பட)





# ஆகஸ்ட் மகாநாடும் அதன் முக்கியத்துவமும்

சிவா. சுப்பிரமணியம்

ஆகஸ்ட் மாதத்தில் அனைத்து நாடுகளின் கவனமும் எமது தலைநகரை நோக்கித் திரும்பும்.

சர்வதேச அரங்கில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் எனக் கருதப்படுகின்ற கூட்டுச் சேரா நாடுகளின் ஐந்தாவது உச்சி மகாநாடு ஆகஸ்ட் மாதத்தில் கொழும்பில் நடைபெறவிருக்கின்றது. மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சர்வதேச மகாநாடு எமது நாட்டில் நடைபெறுகின்றது என்பதை நினைக்கும் போது உள்ளம் பூரிப்படைகின்றது.

வளர்முக நாடுகளின் — குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் வளர்ச்சிப் பாதையை நெறிப்படுத்திச் செப்பனிட்டுக் கொடுக்கும் ஸ்தாபனமான கூட்டுச்சேரா நாடுகள் அமைப்பின் வரலாற்றையும் நோக்கத்தையும் இலங்கையைப் போன்ற வளர்முக நாடுகளின் மக்கள் அனைவரும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

### தோற்றமும் நோக்கமும்

எந்தவொரு நாட்டுடனும் கூட்டுச்சேராமல் 'தனிமரமாக' நிற்பதுதான் கூட்டுச்சேராத் தத்துவம் என்ற தவருன கருத்து சிலரால் முன்வைக்கப் படுகின்றது. கூட்டுச்சேரா நாடுகள் அமைப்பு தோன்றிய பின்னணியைப் புரிந்து கொள்பவர்கள் இத்தகைய விஷமப் பிரசாரத்தில் சிக்கிக்கொள்ள மாட்டார்கள்.

மூன்றுவது உலக நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கையை நெறிப்படுத்தும் வகையில் 1955-ம் ஆண்டு இந்தோனேஷியாவிலுள்ள பாண்டுங் நகரத்தில் நடைபெற்ற மகாநாடுதான் கூட்டுச்சேரா நாடுகள் அமைப்பின் முன்னேடி எனலாம்; இராணுவக் கூட்டுக்களில் பங்கேற்காமை என்ற கொள்கையும் பஞ்சசீலக் கோட்பாடும் பாண்டுங் மகாநாட்டிலேயே முதன் முதலாக அங்கீகாரம் பெற்றன.

சமாதான சகவாழ்வு, தேசங்களின் சமத்துவ அந்தஸ்தை அங்கீகரித்தல், ஒவ்வொரு தேசத்தினதும் இறைமையும் பிரதேசங்களும் பாதிக்கப்படாத வகையில் தேசங்களுக்கிடையே உறவை வளர்த்தல், உள்நாட்டு விவகாரங்களில் பிறநாடுகள் தலையிடுதலையும் யுத்தப் பயமுறுத்தலையும் நிராகரித்தல், தீர்க்கப்படாத எல்லாப் பிரச்சனைகளையும் சமாதான பூர்வமாகத் தீர்த்தல் ஆகியவை கூட்டுச் சேரா நாடுகள் அமைப்பின் பிரதான நோக்கங்களாகும். இவை பாண்டுங் மகாநாட்டின் கோட்பாடுகளோடு ஒத்தனவாக அமைகின்றன.

மேற்காணும் நோக்கங்களை நாடி நிற்கும் நாடுகளுடன் 'கூட்டுச் சேர்ந்து' அவற்றை நடைமுறைப் படுத்துவதற்கேற்ற ஆக்கபூர்வமான நடவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிக்கைகளை எடுப்பதும், அந்த நோக்கங்களுக்கு முரணான முயற்சிகளை எதிர்த்து முறியடிப்பதும் தான் உண்மையான கூட்டுச்சேராத் தத்துவமேயொழிய, உலக அரங்கில் இடம்பெறும் எல்லா நிகழ்வுகளிலுமிருந்து ஒதுங்கியிருப்பதல்ல.

**வளர்ச்சி**

கூட்டுச்சேரா நாடுகள் ஸ்தாபனம் அடைந்து வரும் வளர்ச்சி அதன் அடிப்படை நோக்கங்களை அங்கீகரிக்கும் நாடுகளின் தொகை அதிகரித்து வருவதற்கும், இராணுவ அணிகளின் அதிகாரமும் வலிமையும் குறைந்து வருவதற்கும் ஒரு எடுத்துக்காட்டு.

கூட்டுச் சேரா நாடுகளின் முதலாவது மகாநாடு 1961-ம் ஆண்டு பெல்கிறேட் நகரில் நடைபெற்றது. இந்த மகாநாட்டில் 25 நாடுகள் கலந்து கொண்டன. 1966-ம் ஆண்டு கெய்ரோவில் நடைபெற்ற இரண்டாவது மகாநாட்டில் 47 நாடுகளும் 1970-ம் ஆண்டு லுசாகாவில் நடைபெற்ற மூன்றாவது மகாநாட்டில் 54 நாடுகளும் 197[illegible]-ம் ஆண்டு அல்ஜியர்ஸில் நடைபெற்ற நான்காவது மகாநாட்டில் 76 நாடுகளும் கலந்து கொண்டன. ஆகஸ்ட் மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும் ஐந்தாவது மகாநாட்டில் பலஸ்தீன விடுதலை இயக்கம் உட்பட எண்பதுக்கு மேற்பட்ட நாடுகள் கலந்து கொள்ளவிருக்கின்றன.

இது தற்செயலான வளர்ச்சி அல்ல. இந்த வளர்ச்சியின் பின்னணியில் ஒரு போராட்டமே அடங்கியிருக்கின்றது.

கூட்டுச்சேரா நாடுகள் ஸ்தாபனம் உருவாகிய செய்தி மேற்கத்திய நாடுகள் மத்தியில் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியது. இந்த அமைப்பை முற்று முழுதாகச் சின்னாபின்னப் படுத்திவிட முடியும் என்று ஆரம்பத்தில் அவர்கள் மனப்பால் குடித்தார்கள்.

அன்றைய அமெரிக்க இராஜாங்க செயலாளராக இருந்த ஜோன் பொஸ்டர் டல்லஸ் கூட்டுச்சேராக் கொள்கைக்கு எதிராக வெளிப்படையாகவே கண்டனக் குரல் எழுப்பியதோடு அது ஒரு 'துன்மார்க்க' தத்துவம் என்று ஏளனம் செய்தார். ஆனால் அது பிசகான கணிப்பீடு என்பதை அவர்களே விரைவில் உணர்ந்து கொண்டனர். கூட்டுச்சேராத் தத்துவம் ஏகாதிபத்தியத்தின் எதிர்த்தாக்குதல்களுக்கெல்லாம் முகங்கொடுத்து முன்னேறி வருகின்ற வளர்ச்சிப் போக்கை உணர்ந்த எதிர் அணியினர் இப்போது புதிய தந்திரோபாயத்தைக் கையாள்கின்றார்கள்.

**புதிய வழிகள்**

கூட்டுச்சேரா நாடுகள் பொருளாதாரப் பிரச்சனைகளில் மாத்திரமே கவனம் செலுத்த வேண்டும் என்ற கருத்தைப் பிரபல்யப் படுத்துவதற்கான முயற்சிகள் இப்போதும் நடைபெற்று வருகின்றன. முக்கியமான அரசியல் பிரச்சனைகளிலிருந்து கூட்டுச்சேரா நாடுகளைப் பிரித்துத் தனிமைப் படுத்துவதற்கான சூழ்ச்சி இது. அங்கோலாவில் விடுதலைப் போராட்டம் நடக்கும் போது அதைப்பற்றி வாய்கூடத் திறவாமலிருப்பது காலனியாதிக்கத்தை அங்கீகரிப்பதற்குச் சமனாகுமேயொழிய, கூட்டுச்சேராத் தத்துவமாகாது.

அங்கத்துவ நாடுகளின் வேறுபட்ட அரசியல், பொருளாதாரப் பின்னணிகளை மையமாக வைத்து அவற்றிற்கிடையே பிரிவினையை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் ஏகாதிபத்தியவாதிகள் ஈடுபட்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. வளர்முக நாடுகளுக்கு வழங்கப்படும் 'பொருளாதார உதவி' இந்த வகையைச் சார்ந்தது. 'அமெரிக்காவிடமிருந்து பொருளாதார உதவியை எதிர்பார்க்கும் நாடுகள் ஐ. நா. சபையிலும் ஏனைய சர்வதேச ஸ்தாபனங்களிலும் அதனுடன் ஒத்துழைக்க வேண்டும்' என கடந்த ஜனவரி மாதம் ஹென்றி கிஸிங்கர் கூறியதை இப்போது நினைவு கூருதல் பொருத்தமானதாகும்.

ஏகாதிபத்தியவாதிகளின் இத்தகைய முயற்சிகளுக்கு வலுவூட்டும் வகையில் அதிதீவிரப் 'புரட்சிவாதி'களும் புதிய கோஷங்களை முன்வைக்கின்றார்கள். இன்றைய உலகம் 'வளர்ந்த வடக்கு' என்றும் 'தேய்ந்த தெற்கு' என்றும் பிளவுபட்டிருக்கின்றது எனவும், வடக்கின் ஆதிக்கத்துக்கு எதிராகத் தெற்கு நாடுகள் அணிதிரள வேண்டும் எனவும் அவர்கள் கூறுகின்றார்கள். சோஷலிசம், முன்னேற்றம், சமாதானம் ஆகியவற்றை நாடி நிற்கும் நாடுகள் ஒருபுறத்திலும், ஏகாதிபத்தியத்தையும் கலோனியலிஸத்தையும் அனுசரிக்கும் நாடுகள் மறுபுறத்திலுமாக உலகம் பிளவுபட்டிருக்கின்ற இன்றைய நிலையில் பணக்கார நாடுகள் — ஏழை நாடுகள் என்றும், வடக்கு நாடுகள் — தெற்கு நாடுகள் என்றும் வேறுபாடுகளைப் புகுத்தும் முயற்சி சோஷலிச முகாமிலிருந்து வளர்முக நாடுகளை அந்நியப் படுத்தும் நோக்கத்தைக் கொண்டது. இது மறைமுக எதிர்ப்பின் இன்னொரு அம்சம்.

**முக்கியத்துவம்**

இவ்வாறாக ஏகாதிபத்தியவாதிகளும் அதிதீவிரப் புரட்சிவாதிகளும் கூட்டுச்சேராத் தத்துவத்தின் அடிப்படையையே சிதைப்பதற்கு முகமூடிகளுடன் முனைவந்திருக்கின்ற இவ்வேளையில் ஐந்தாவது உச்சி மகாநாடு கூட்டுச் சேராத் தத்துவத்தை மேலும் முன்னெடுத்துச் செல்லக்கூடிய வகையில் அமைய வேண்டியது மிகவும் முக்கியமாகும். கூட்டுச்சேராத் சிந்தனையைத் திசைமாற்றுவதற்காக முன்வைக்கப்படுகின்ற புதிய கோஷங்களை ஆகஸ்ட் மகாநாடு நிராகரிக்க வேண்டும். அதேபோல, இந்தியாவில், அங்கோலாவில், சிலியில், இலங்கையில், அரபு மண்ணில், இன்னும் இதுபோன்ற எத்தனையோ நாடுகளிலும் தியாகோ கார்ஸியாவிலும் ஏகாதிபத்தியம் விரித்து வரும் சதிவலைக்கு எதிரான போராட்டப் பாதை தெளிவான முறையில் தீர்மானிக்கப்பட வேண்டும்.

எமது பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா 'போர்மா' என்ற யூகோஸ்லாவியப் பத்திரிகைக்கு 2-2-76-ல் அளித்த பேட்டியின் பின்வரும் பகுதி கூட்டுச்சேரா மகாநாட்டின் நோக்கத்தையும் கடமையையும் தெளிவுபடுத்துகின்றது.

'கலோனியலிஸத்தை ஒழிக்கும் நடவடிக்கைகள் கிட்டத்தட்டப் பூர்த்தியடைந்து கொண்டு வருகின்ற போதிலும் தேசங்களுக்கிடையிலான உறவில் சமத்துவமற்ற நிலைமை இன்னும் இருந்து வருகின்றது. இந்த நிலைமை விரைவில் அற்றுப் போய் விடும் என்று எதிர்பார்க்கவும் முடியாது. இதன் காரணமாக கூட்டுச்சேரா நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மை அசைக்கமுடியாத அளவுக்கு நிலைபெற்றிருக்கின்றது. கூட்டுச்சேரா இயக்கத்தைப் பலப்படுத்துவதற்கான பிரதான முன்தேவைகளுள் இது ஒன்றாகும்' ★





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுச்சேரா இயக்கத்தின் கோட்பாடுகளுக்கு பீகிங் குழிபறிக்கிறதா?

'சாணக்கியன்'

கூட்டுச் சேரா நாடுகளுக்கும் பீகிங்குக்குமிடையில் உருவாகி வரும் உறவுகளின் இயல்பு குறித்து ஆசிய பத்திரிகைகளில் அடிக்கடி அலசி ஆராயப்பட்டு வருகின்றன இதற்குச் சில காரணங்களும் உண்டு அண்மைக் காலத்திலிருந்து சீனாவும் ஒரு வளரும் நாடென்றும், அதுவும் விரிவடைந்து வரும் கூட்டுச் சேரா நாடுகளின் சமாஜத்தைச் சார்ந்த ஒரு நாடென்றும் உத்தியோக பூர்வமான சீனப் பிரதிநிதிகள் கூறத் தலைப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டு ஆகஸ்டில் கொழும்பில் நடைபெறவுள்ள கூட்டுச்சேரா நாடுகளின் மகாநாடு அண்மிக்கும் தருணத்திலேயே இவ்வாறு சீனப் பிரதிநிதிகள் 'புதிய பாஷை'யில் பேச ஆரம்பித்துள்ளனர். பீகிங்கின் இந்தப் புதுமையான போக்குடன் சில திட்டங்கள் இணைந்திருக்க வேண்டும். ஆனால் இதுவரையில், திட்டங்களின் ஒரு பகுதியே அம்பலமாகியுள்ளது. இந்நிலையில் பீகிங்கிலிருந்து வெளியாகும் அறிக்கைகளையும். நிஜத்தில் பீகிங் தலைவர்கள் நடந்துகொள்ளும் முறையையும் ஒப்பிட்டு ஆராய்வதில் ஆசியாவிலுள்ள அரசியல் அவதானிகள் ஆர்வமுடன் ஈடுபடுவது இயல்பேயாகும். பீகிங் தலைவர்களின் சொல்லும் செயலும் ஒன்றுக்கொன்று முரணானது என்பதை யார்தான் அறியமாட்டார்கள்!

1955-ல் பாண்டுங்கில் நடைபெற்ற ஆசியா, ஆபிரிக்க ஒருமைப்பாட்டு மகாநாட்டில் இந்திய, இந்தோனேஷிய, பர்மிய பிரதிநிதிகளுடனும், இதர நாடுகளின் பிரதிநிதிகளுடனும் சீனப் பிரதிநிதிகளும் கூட்டுச் சேரா இயக்கத்தின் அடியாதாரமாகவுள்ள கோட்பாடுகளைக் கௌரவிப்பதென உடன்பட்டுக் கொண்டனர். அனைத்துச் சர்வதேசத் தகராறுகளுக்கும் சமாதான பூர்வமாகத் தீர்வு காணுவது, இதர நாடுகளின் சுயாதிபத்தியத்தையும் பிராந்திய முழுமையினையும் கௌரவிப்பது, பலாத்கார பிரயோகத்தைக் கைதுறப்பது ஆகியன இக்கோட்பாடுகளில் முக்கியமானவையாகும். இம் மகாநாட்டின் பின்னர், இன்று கூட்டுச்சேரா இயக்கம் என்ற நாமத்தில் நாமறியும் இவ்வியக்கத்தின் பிரிக்கப்பட முடியாத பகுதியை மேற்படி கோட்பாடுகள் மாறிவிட்டன.

## பீகிங்கின் துரோகம்

ஆனாலும் சீனாவில் 'கலாசாரப் புரட்சி' நடைபெற்ற பொழுதும், அதைத் தொடர்ந்த காலகட்டத்திலும், தென்னாசியாவிலுள்ள தனது அண்டையயல் நாடுகளுக்கு எதிராக பகிரங்கமான முறையில் எதிர் நடவடிக்கைகளில் இறங்கியதன் மூலம் பீகிங் இக் கோட்பாடுகளின் பாலான தனது கடப்பாடுகளை மீறியது. அண்டையயல் கூட்டுச்சேரா நாடுகளுக்கு மாஓவாதத்தை ஏற்றுமதி செய்தற்கு பீகிங் மேற்கொண்ட எத்தனிப்புக்கள் ஏகாதிபத்திய வட்டாரங்களுக்கும், உள்நாட்டுப் பிற்போக்குச் சக்திகளுக்கும் துணை செய்வதாக அமைந்தது. இவையாவும் பீகிங்கின் நடவடிக்கைகளை ஆசிய அவதானிகள் சந்தேகக் கண்கொண்டு நோக்க நிர்ப்பந்தித்தில் வியப்பேதுவுமில்லை.

பீகிங்கின் சிக்கலான கணிப்பீடுகளை மதிப்பீடு செய்வதாயின் தற்சமயம் மாஓவாத ராஜதந்திரம் முகம் கொடுத்து நிற்கும் கஷ்டங்களைக் கருத்திற் கொண்டாக வேண்டும். உலக சோஷலிஸத்திலிருந்து பீகிங் விலகிச் செல்வதும் கூட்டுச் சேரா நாடுகள் உட்பட அண்டையயல் நாடுகளுக்கு எதிரான இதனது குழிபறிப்பு நடவடிக்கைகளும் பல உண்மைகளை விளக்குவதாக உள்ளன. தனது அரசியல் நோக்கங்களுக்குக் கூட்டுச்சேரா இயக்கத்தினைக் கீழ்ப்படுத்துவதற்கான எத்தனிப்புகளை மேற்கொள்ளுவதன் மூலம் பீகிங் தலைவர்கள் தற்போதுள்ள கஷ்டங்களிலிருந்து மீளுவதற்கு முயலுகின்றனர். ஆனாலும் ஆசியாவிலுள்ள அரசியல் அவதானிகள் முன்வைக்கும் கேள்வி இதுதான்: 'மாஓவாதத் தலைமைப் பீடத்தின் தற்போதைய கொள்கை எந்த அளவுக்கு கூட்டுச் சேரா இயக்கத்தின் நோக்கங்களுக்கும், பணிகளுக்கும் இசைவாக உள்ளது?'

## கூட்டுச் சேராமையின் அடித்தளம்

இன்று. கூட்டுச் சேரா இயக்கம் 80 நாடுகளைத் தழுவி நிற்கின்றது. தமது சமூக — பொருளாதாரப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணுவதில் தமது மத்தியில் சில வேறுபாடுகள் இருப்பினும், இவ்வியக்கத்தின் அடிப்படைக் கருத்துருவங்களை புதிதாகச் சுயாதீனமடைந்த பல நாடுகள் பகிர்ந்து கொள்ளுகின்றன.

கலோனியலிஸத்துக்கு எதிராகவும் தமது சுயாதீனம், விடுதலை ஆகிய பற்றுக்காகவும் ஆற்றிய போராட்டங்களில் இந்நாடுகளின் மக்கள் திரட்டிய அனுபவத்தினையே இந்த இயக்கம் அடியாதாரமாகக் கொண்டுள்ளது. கூட்டுச் சேரா இயக்கத்தின் வளர்ச்சியும் இதன் நிலைபாடுகளின் உறுதிப்பாடும் தனித்தனியான தோற்றப்பாடுகளல்ல; உலக அரங்கில் சோஷலிஸத்துக்குச் சாதகமாக சக்திகளின் இணைப்புறவுகளை அடிப்படை பூர்வமாக மாற்றிய பெருநிகழ்ச்சிகளுடன் இவை நேரடியாகத் தொடர்பு கொண்டவையாக உள்ளன.

1950-ம் ஆண்டுகளில் இளம் சுயாதீன நாடுகள் தமது சுயாதீனத்தை உறுதிப்படுத்துவதனைத் தடுக்கும் முயற்சியில், ஏகாதிபத்திய வட்டாரங்கள் நேட்டோ சியாட்டோ, சென்டோ என தமது இராணுவ முகாம், அரசியற் பாதையில் இறங்கிய தருணத்தில்தான் கூட்டுச் சேரா இயக்கம் உற்பவமானது. இந்த நிலைமைகளில், கூட்டுச் சேரா இயக்கமானது இந்நாடுகளில் பலவற்றுக்குத் தமது அயல்துறைக் கொள்கைச் சுயாதிபத்தியத்தையும், தமது நலன்களையும் பாதுகாக்கின்ற ஒரு கவச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக மாறியது. இதைத் தொடர்ந்த நிகழ்வுகள் இக்கொள்கையின் சமாதான நேச இலக்குகளையும், இதனது தீவிர ஏகாதிபத்திய — எதிர்ப்பு திசையமைவினையுமே உறுதிப்படுத்தின.

## மாஓவாத ஏகாதிபத்திய அணிசேர்வு

மேற்கூறிய யாவற்றையும் கருத்திற் கொண்ட பின்னர், இக் கொள்கைக்கும் பீகிங் தலைவர்களின் கொள்கைக்குமிடையில் ஏதாவது பொதுவான அம்சங்கள் உள்ளனவா என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கலாம். சோஷலிஸ முகாமிலிருந்து பீகிங் பகிரங்கமாகவே விலகியிருப்பதையும், மேற்குலகின் பாலான அதனது கருத்து நிலையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களையும் நாம் அவதானிக்க வேண்டும். இப்போதெல்லாம் ஆசியாவிலும் இதர கண்டங்களிலும் ஏகாதிபத்தியவாதிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை கண்டிப்பதற்குப் பதிலாக, பீகிங் அவற்றினுக்குப் பகிரங்கமாக ஊக்கமளித்து வருவதாகவே படுகின்றது. பலவற்றில் இங்கு உதாரணமாக ஒன்றினைச் சுட்டிக்காட்டலாம். இன்று சமூகத்திலுள்ள தியாகோ கார்ஸியா தீவில் பெண்டகன் ஒரு இராணுவத் தளத்தினை நிர்மாணிப்பதற்கு ஆரம்பித்தபோது, இந்து சமுத்திரக் கரையோர நாடுகள் இம்முயற்சியினை வெகுவாகக் கண்டித்தன. ஆனால் இதுபற்றிப் பீகிங் மூச்சுக்கூட விடுவதாயில்லை. பதிலாக, இந்த அபாயகரமான முயற்சியில் இறங்கு முன்னர் பெண்டாகன் பீகிங்கின் 'மௌனமான சம்மதத்தை'ப் பெற்றுள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன.

## பீகிங்கின் உண்மையான கொள்கை

இவ்வாறு, பீகிங் ஆசியாவில் எல்லாவிடங்களிலும் நெருக்கடியை உருவாக்கி வருவதுடன் அண்டையயல் நாடுகளுக்கிடையிலான உறவுகளை மேலுமாக்கவும் முனைகின்றது. தென்னாசிய உபகண்டத்தில் உறவுகளைச் சுமுகப்படுத்தும் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவேறுவதற்கு முட்டுக்கட்டையிட இது மேலும் மேலும் எத்தனித்தது. இந்திய — பர்மிய எல்லை புனர்நிர்ணயிக்கப்பட்டமை பற்றிய தனது ஆத்திரத்தை வெளிப்படையாகவே காட்டிக்கொண்ட பீகிங் இந் நாடுகளிலுள்ள பிரிவினை இயக்கங்களுக்கும் ஆதரவு அளித்து வருகின்றது. இது, தான் சுயாதிபத்திய உரிமைகளைக் கௌரவிப்பதாக முன்பு உடன்பட்டுக் கொண்ட கூட்டுச் சேரா நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் அத்துமீறித் தலையிடுவதாகாதா?

ஆசியாவில் 'சக்திகளின் சமநிலை'யை மாற்றுவதற்கும் தனது விஸ்தரிப்பு இலக்குகளை எய்துவதற்குமான ஒரு கருவியாகவே பீகிங் சில ஏகாதிபத்திய வட்டாரங்களுடனான தனது 'தொடர்பினை' பயன்படுத்திக் கொள்கின்றது என எவரும் அபிப்பிராயப்படுவது தவிர்க்கப்பட முடியாததாகும்.

இவ்வாறு, பீகிங் தலைமைப் பீடத்தின் உண்மையான கொள்கை கூட்டுச்சேரா இயக்கத்தின் இலக்குகளுக்கும் கோட்பாடுகளுக்கும் பகிரங்கமாகவே முரண்பாடாக உள்ளது மட்டுமன்றி, கூட்டுச் சேரா நாடுகளின் முக்கிய நலன்களுக்கும் கடுமையான ஊறினை விளைவிப்பதாகவுள்ளது. இதனால்தான், தானும் இந்நாடுகளின் இயக்கத்தைச் சார்ந்த ஒரு நாடுதான் என்று மீகிங் கூறிக் கொள்ளும் போது, இந்நாடுகள் பீகிங்கின் பேச்சை நியாயமாகவே உள் நேசிக்கின்றன. ★



# அணிசேராக் கொள்கையும் ஆசிய சமாதானமும் இராணுவத் தளங்களும்

அலெக்ஸாண்டர் லவ்றென்டியேவ்

முதலாவது பிரிட்டிஷ் போர்வீரன் 1824-ல் சிங்கப்பூரில் வந்திறங்கினான். கடந்த செப்டம்பரில் திறமைமிக்க நாடாக மலர்ந்துள்ள இந்த நாட்டிலிருந்து கடைசிப் பிரிட்டிஷ் போர்வீரனும் இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் வெளியேறினான்.

ஒரு காலத்தில் மாபெரும் கலோனியல் சக்ராதிபத்தியமாக விளங்கிய பிரிட்டன் தனது அந்நிய நாட்டுச் சம்பத்துக்களைப் பெருக்கவும் இந் நாடுகளிலிருந்து இயற்கை வளங்களை இறக்குமதி செய்யவும் அடிமை கொள்ளப்பட்ட மக்களை ஈவிரக்கமின்றிச் சுரண்டவும் 'பீரங்கிப் படகு' ராஜதந்திரத்தை வியாபாரமாகப் பயன்படுத்தியது.

ஆசியாவில் இப்போது பிரிட்டன் தனது நிலைகளை இழந்து வருகின்றது. ஆனாலும், இப்பகுதியில் மேற்கத்தைய இராணுவத் தளங்கள் தொடர்ந்து இருந்து வந்துள்ளன. மேலும் அண்மைக் காலங்களில் இவற்றின் தர ரீதியானதும் அளவு ரீதியானதுமான ஆற்றலியல்புகள் கணிசமான அளவு அதிகரிக்கவுஞ் செய்துள்ளன. தென்னாபிரிக்காவின் சைமன் டவுன் முதல் ஆஸ்திரேலியாவின் கொக்பேர்ன் — சவுண்ட் வரை இந்து சமுத்திரத்தில் சில மேற்கு நாடுகளின் இராணுவ நிறுவனங்கள் 22 பாரிய யுத்த தளங்களைப் பேணி வருகின்றன.

ஆசியாவிலுள்ள இராணுவத் தளங்களில் பெரும்பாலானவை கைமாறியிருப்பதும் யாவருமறிந்த விஷயமாகும், ஆனாலும், இது இத்தளங்களின் அந்தஸ்தினையோ அல்லது இயல்பினையோ மாற்றியுள்ளதா? இல்லவே இல்லை. இந்து, பஸிபிக் சமுத்திரங்களிலுள்ள இராணுவத் தளங்கள் உட்பட எல்லா ஏகாதிபத்தியத் தளங்களினதும் பிரதான நோக்கம் குறைத் திட்டங்களைச் செயல்படுத்துவதே என்பதை கலோனியல் தளையிலிருந்து விமோசனம் பெற்ற நாடுகளின் மக்கள் அனுபவவாயிலாக அறிந்துள்ளனர். இதனை வாஷிங்டனிலுள்ளவர்கள் மறுப்பதாயுமில்லை. 'இந்து சமுத்திரத்தில் எமக்குள்ள ஆர்வமானது, இப் பிரதேசத்தில் உள்ள மூலப் பொருட்கள், போக்குவரத்து ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்டதாகும்' என அமெரிக்க அட்மிரல் எல்மோ ஸும்வால்ட் அமெரிக்க கடற்படை உயர் பீடத்தின் பிரதம தளபதியாயிருந்த பொழுது கூறினார். 'இந்து சமுத்திரக் கரையோரப் பிரதேச நாடுகளின் நிகழ்வுகள் மீது நாம் செல்வாக்கு செலுத்தக் கூடியவர்களாயிருத்தல் வேண்டும்' என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிய 'நிகழ்ச்சிகள் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற' நோக்குடன் வாஷிங்டன் மேற்கொண்டு வந்த எத்தனிப்புகள் தேசிய விமோசன, ஜனநாயக இயக்கங்களை நசுக்குகின்றதும் மேற்கத்தைய ஏகபோகங்களினது நலன்களைப் பாதுகாக்கின்றதுமான வடிவங்களையே எடுத்தன என்பதை அனுபவம் காட்டுகின்றது. இந்த விஸ்தரிப்பு நடவடிக்கைகள் காலாவதியாகிவிட்ட 'விமானந்தாங்கிக் கப்பல் ராஜதந்திரம்' முதல் அப்பட்டமான ஆக்கிரமிப்பு வரை எல்லாவிதமான வடிவங்கள் வாயிலாகவும் மேற்கொள்ளப்பட்டன. இத்தருணங்கள் யாவற்றிலும் இராணுவத் தளங்கள் கேந்திர நிலைகளாக இயங்கின.

இங்கு சில உதாரணங்களைச் சுட்டிக் காட்டலாம். 1950-ம் ஆண்டுகளில், பிலிப்பைன்ஸிலுள்ள அமெரிக்க ஆகாயப் படைத் தளமான கிளார்க் ஃபீல்ட் மேற்கத்தைய நிறுவனங்களைத் தேசியமயமாக்கிய இந்தோனேஷியாவுக்கெதிராக ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்குப் பயன்படுத்தப் பட்டது. மணிலாவிலுள்ள ஸுபிக்-பே தளம் வங்காள தேச மக்களின் விடுதலைப் போராட்டத்தின்போது விமானந் தாங்கிக் கப்பலான 'என்டர்பிரைஸி'னல் பயன்படுத்தப் பட்டது.

பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, தைவான் ஆகியவற்றிலுள்ள அமெரிக்கத்தளங்கள் வியத்நாம், லாவோஸ், கம்போடியா முதலானவற்றுக்கு எதிரான ஆக்கிரமிப்பின்போது தாராளமாகப் பயன்படுத்தப்பட்டன.

ஆசியாவினைத் தெற்கு, கிழக்கு திசைகளிலிருந்து முற்றுகையிடும் வகையிலுள்ள இந்த ஏகாதிபத்திய இராணுவ அரண்கள் ஆசிய நாடுகள் மீது டமோகிளெஸின் கொடுவாள் போல தொங்கிக் கொண்டிருப்பதுடன் இப்பிரதேச நாடுகளின் சமாதானம், சுயாதிபத்தியம் ஆகியவற்றுக்குப் பெரும் அச்சுறுத்தலாயுமுள்ளன. இப் பிரதேசத்திலுள்ள நாடுகள் மத்தியில் நல்விளப்பமற்ற சூழல் ஏற்பட ஏதுவாயுள்ளன; வலுவான பந்தோபஸ்தினை அமைத்துக் கொள்ளுவதனை நோக்கி மக்களைக் கோட்பாட்டு ரீதியில் ஒருமைப்படுத்துவதற்குத் தடைக் கற்களாயுள்ளன.

ஆசியாவில் ஏகாதிபத்திய தளங்கள் இருப்பதுவும், இக் கண்டத்தின் நிஜமான பாதுகாப்பும் ஒன்றியைப்பற்றவை என்பதனை அநுபவம் காட்டியுள்ளது, ஆசியாவில் மேற்கத்தைய இராணுவ இருக்கைக்கு முடிவுகட்டுவதுடனேயே நிஜமான பந்தோபஸ்துக்கான போராட்டம் ஆரம்பமாகவேண்டும் என பெரும்பாலான ஆசிய நாடுகளின் மக்கள் மேலும் மேலும் தெளிவு பெற ஆரம்பித்துள்ளனர்.

அமெரிக்காவின் பழைய கூட்டாளிகளான தாய்லாந்தும், பிலிப்பைன்ஸும் 'சியாட்டோ' இராணுவ அணி குலைவதை உத்தரவாதப்படுத்தியது மட்டுமன்றி தளங்கள் பற்றிய இருதரப்பு உடன்படிக்கைகளை புனராய்வு செய்யுமாறு வாஷிங்டனை வற்புறுத்தியும் வருகின்றன. நடுநிலைமை நாடுகளினது அயல்துறை அமைச்சர்களின் லீமா மகாநாடும் தியாகோ கார்ஸியா பற்றிய பெண்டாகன் திட்டங்களை ஏகக் குரலில் கண்டித்திருப்பதையும் இங்கு சுட்டிக் காட்டலாம். ★



## சமாதானத்துக்குப் பங்காற்றும் கூட்டுச்சேரா இயக்கம்

'அரசு'

கூட்டுச்சேரா இயக்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையின் கருத்தமைப்பு ஐம்பதுக்களில் ஆரம்பமானது. அது தொடக்க காலம் முதலே ஏகாதிபத்தியத்துக்கும் காலனியாதிக்கத்துக்கும் எதிரானதாகவேயிருந்து வருகிறது. புதிதாக விடுதலையடைந்த நாடுகள் இக் கொள்கையைப் பின்பற்றுவதன் பயனாக அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்துவதும் அவற்றைப் பல்வேறு கூட்டணிகளுக்குள் சிக்க வைப்பதும் 'கெடுபிடி யுத்த' அரசியலுக்குள் சிக்க வைப்பதுமான ஏகாதிபத்திய வல்லரசுகளை ஆட்டங் காணச் செய்கின்றன.

காலனியாதிக்க எதிர்ப்பு, ஏகாதிபத்திய — எதிர்ப்புப் போராட்டத்தில் கூட்டுச் சேரா இயக்கம் புதிய கட்டத்தை அடைந்துள்ளது. இது காலனியாதிக்க ஒடுக்குமுறையிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட நாடுகளின் சுய — பிரக்ஞையின் வளர்ச்சியில் பிரதிபலிக்கிறது. கூட்டுச்சேரா நாடுகள் பலவற்றின் தலைவர்கள், நமது இயக்கம் 'சக்திமிக்க நடுநிலைமை' கோட்பாட்டில் தங்கியிருக்க வேண்டும் என்று உறுதியாக நம்புகிறார்கள். இதுதான் தேசங்களிடையே சமாதானம் மற்றும் ஒத்துழைப்பை ஸ்திரப்படுத்துவதற்கும் சர்வதேச ஏகாதிபத்தியம் கலோனியலிஸத்தை எதிர்த்துப் போராடுவதற்கும் இது ஒரு உறுதியான கொள்கையாகும்.

சோவியத் யூனியன், இதர சோஷலிஸ நாடுகள் உட்பட உலகின் முற்போக்குச் சக்திகள் அனைத்தும் இக் கோட்பாட்டை அங்கீகரித்துள்ளன.

1974 ஏப்ரல் மாதம் ஐ. நா. பொதுச் சபையில் உரையாற்றிய சோவியத் வெளிநாட்டமைச்சர் வருமாறு தெரிவித்தார்: 'கூட்டுச்சேரா நாடுகள் பின்பற்றும் கொள்கைக்கு நாங்கள் எமது அங்கீகாரத்தை வழங்குகிறோம். அது மேன்மேலும் வரவேற்கப்பட்டு வருகிறது. நமது காலத்தின் பிரதான அம்சங்களில் இதுவும் ஒன்று. சமாதான லட்சியத்திற்கு இந் நாடுகள் சொல்லாலும் செயலாலும் பங்களிக்கட்டுமாக'

கூட்டுச்சேரா இயக்கத்திற்கு சோவியத் யூனியனின் ஆதரவு உள்ளது என்பதை அந்த இயக்க நாடுகள் முழுமையாக உணர்ந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளன. 'சர்வதேச அரங்கில் ஆசிய, ஆபிரிக்க, லத்தீனமரிக்க கூட்டுச்சேரா நாடுகளின் பக்கம் சோவியத் யூனியன் என்றும் இருந்து வருகிறது' என்று இந்திராகாந்தி இந்தியப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி இடதுசாரி ஜனநாயக முற்போக்குச் சக்திகள் அனைத்தினதும் ஐக்கியமானது சமாதானத்துக்கும் தேசிய விமோசனத்துக்குமான போராட்டத்தில் இந்த இயக்கத்தை ஒரு சக்திமிக்க ஆயுதமாக மாற்றும் என்பதை கூட்டுச்சேரா நாடுகள் மேன்மேலும் உணர்ந்து வருகின்றன. தாம் ஒன்றிணைந்தால் மட்டுமே பலவான் கொள்கையை அடிக்கடி நிலை நிறுத்தும் ஏகாதிபத்தியத்தைத் தம்மால் தூக்கி எறிய முடியும் என்று புதிய சுதந்திர நாடுகள் அனைத்தும் உணர்ந்து வருகின்றன. கூட்டுச்சேரா நாடுகள் ஆசிய, ஆபிரிக்க; லத்தீனமரிக்காவின் தேசிய விமேசன இயக்கத்தையும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கெதிரான அரபு நாடுகளின் போராட்டத்தையும் ஆதரிக்கின்றன. இந்து சமுத்திரத்திலிருந்து அமெரிக்க ராணுவத் தளங்கள் அகற்றப்பட வேண்டுமென்று வலியுறுத்துகின்றன.

கூட்டுச்சேரா நாடுகள் வெளிநாட்டுக் கொள்கைத் துறையில் மட்டும் ஒத்துழைக்கவில்லை. பொருளாதார சுதந்திரத்தை ஈட்டுவதற்கும் ஒத்துழைப்புக்களை மேம்படுத்துவதற்குமான அவசியம் குறித்தும் பெரும் அக்கறை காட்டுகின்றன.

1975-ல் மார்ச்சில் ஹவானாவில் நடைபெற்ற கூட்டுச்சேரா கமிட்டியின் கூட்டத்தின் பின்னர் வெளியான பிரகடனம் 'அடிமை, சரண்டல் உறவுகளுக்குப் பதிலாக, ஒத்துழைப்பும் பரஸ்பர கௌரவமும் மிக்க உறவுகளைக் கொண்ட நியாயமான சர்வதேச பொருளாதார விதி ஒன்றினை உத்தரவாதப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட கூட்டுழைப்பை ஐக்கியமும் ஒருமைப்பாடும் சாத்தியமாக்குகின்றன.

சுதந்திரத்தின் அடித்தளத்தை மேலும் பலப்படுத்துவதான பொருளாதாரத்தின் பொதுத்துறையின் முக்கிய தொழில் திட்டங்களின் வளர்ச்சிக்கு முதலாளித்துவ நாடுகள் நன்குதவுகின்றன என்பதையும் வளர்முக நாடுகள் உணர்ந்துள்ளன.

புதிய சுதந்திர நாடுகளுக்கு சோவியத் யூனியன் தொடர்ந்து பொருளாதார உதவியளிக்கும்; பூரண சமத்துவக் கோட்பாடுகளில் அவற்றுடனான ஒத்துழைப்பை அது மேம்படுத்தும் என்பதை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25-வது மகாநாட்டில் பேசிய லியோனிட் பிரெஷ்னேவ் வலியுறுத்தியுள்ளார்.

சோஷலிஸ நாடுகளுக்கும் கூட்டுச்சேரா நாடுகளுக்கும் இடையிலான நட்புறவையும் ஐக்கியத்தையும் சீர்குலைக்க ஏகாதிபத்தியவாதிகள் முயன்று வருகிறார்கள். அதற்கான தவறான பிரசாரங்களில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். இதற்கு மாவோயிஸ்டுகளும் துணை நிற்கிறார்கள். ஆயினும் இவர்களது சூழ்ச்சிகளுக்கு மத்தியிலும் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க கூட்டுச்சேரா நாடுகள் சமாதான சகவாழ்வு, சோஷலிஸ உலகுடன் நெருக்கமான பொருளாதாரத் தொடர்புகள் என்பவற்றின் அடித்தளத்தில் சர்வதேச



---

# 12[illegible]

அடுத்த மாதம் விசேஷ சிறப்பு மலராக இந்த ஆண்டு மலர் வெளிவர இருக்கின்றது.

அருமையான கதைகள், ஆழமான கட்டுரைகள் தனித்தன்மை வாய்ந்த இலக்கியப் பார்வைகள், கவிதைகள், மற்றும் நுட்பமான இலக்கியப் பிரச்சினைகளை உள்ளடக்கிய ஆண்டு மலர் இது.

சென்ற காலங்களில் ஓர் அனுபவம் உண்டு. மலர் வெளிவந்த சில நாட்களுக்குள்ளேயே மலர் முழுவதும் தீர்ந்துபோய் விடும் நிலைமை ஏற்படுவதுண்டு.

ஆகவே இந்த மலர் தேவை என விரும்பி நம்புபவர்கள் முன் கூட்டியே எம்முடன் தொடர்பு கொள்வது நல்லது.

— ஆசிரியர்

---

நெருக்கடிகளின் துணிவுப் போக்கைத் தொடர்ந்து மேம்படுத்தி வருகின்றன. அவை கலோனியலிஸ்டுகள், நவ கலோனியலிஸ்டுகளது சுரண்டலின் ஒவ்வொரு வடிவத்தையும் எதிர்த்துப் போராடி வருகின்றன. இந்த லட்சியத்திற்கான போராட்டத்தில் அதிகமான நாடுகள் இணைந்து வருகின்றன.

ஏகாதிபத்திய சூழ்ச்சித் திட்டங்களைத் தவிடுபொடியாக்குவதில் கூட்டுச்சேரா இயக்கம் பெரும் சாதகமானபாத்திரத்தை வகித்து வருகிறது; சர்வதேச பதட்டத் தளர்வுப் போக்கிற்கும் கூட்டுச் சேரா நாடுகளுக்கிடையிலும் அவற்றிற்கு சோஷலிஸ நாடுகள், உலகின் முற்போக்குச் சக்திகளுக்கிடையிலும் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும் அது கணிசமான பங்களிப்பைச் செய்கிறது இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான பீட்டர் கெனமன் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25-வது காங்கிரஸில் தெரிவித்தார்.

இந்த ஆண்டு ஆகஸ்ட்மாதத்தில் கொழும்பில் கூட்டுச்சேரா மகாநாடு நடைபெறவுள்ளது. கூட்டுச்சேரா இயக்கத்தின் வரலாற்றில் இது மாபெரும் கூட்டமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விடுதலை, சுதந்திரம், உலக சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்கான மக்களது முயற்சிகளுக்கு இந்த மகாநாடு பெரும் பங்காற்றும் என்பதில் சந்தேகமில்லை. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இரண்டாவது பாண்டுங்' கை பீகிங் கவிழ்த்த விதம்

**ஷேகு ஃபரீத் ஸவாஹிர்**

1935 ஏப்ரலில் நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாண்டுங் மகாநாட்டின் தீர்மானங்களுக்கமைய ஆசிய — ஆபிரிக்க நாடுகளின் இரண்டாவது மகாநாடு ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு முன்னர், 1965 நவம்பரில் நடைபெறவிருந்தது. ஆனாலும் இந்த 'இரண்டாவது பாண்டுங்' மகாநாடு எப்போதுமே நிகழவில்லை. ஏனெனில், இம் மகாநாடு தனது மேலாதிக்க திட்டங்களுக்கு ஒத்தாசை செய்வது என்ற முடிவுக்கு வந்த பீகிங் தலைமைப் பீடம் இம் மகாநாட்டினை கடைசித் தருணத்தில் குழப்பியடித்து விட்டது.

முன்னர், இந்த இரண்டாவது ஆசிய — ஆபிரிக்க மாநாட்டுக்கான தயாரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வந்த காலகட்டத்தில் ஆசிய — ஆபிரிக்க மக்களின் அனுதாபத்தைப் பெறும் பொருட்டும் தனது பேரரசுத் திட்டங்களைச் சாதிக்கும் பொருட்டும் பீகிங் தலைமைப் பீடம் தந்திரோபாயமாக இம் மகாநாடு கூட்டப்படுவதற்குத் தான் ஆதரவு அளிப்பதாக வேஷம் போட்டது. இவ்வாறுதான், 1965 ஜூனில் தான்ஸானிஸாவுக்கு சூ என் லாய் மேற்கொண்ட விஜயத்தின் இறுதியில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை, 'இரண்டாவது மகாநாடு பாண்டுங் உணர்வினை மேலும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும்' என்றும் 'ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தினை உத்வேகப் படுத்துவதுடன் தேசிய சுயாதீனத்தை வென்றெடுக்கின்றதும் பேணுகின்றதுமான புனித இலட்சியத்திற்கு துணை செய்யும்' என்றும் நம்பிக்கை தெரிவித்தது. ஆனால் இந்த பெரிதான பிரலாபங்களுக்கும் மாஓ வாதிகளின் நிஜமான நோக்கங்களுக்கும் பெரும் வேறுபாடு இருக்கவே செய்தது.

முதலாவதாக, இக் காலகட்டத்தின் போது வளரும் நாடுகள் மீதும் தேசிய விமோசன இயக்கங்கள் மீதுமான தனது மேலாதிக்கத்தை வலியுறுத்துவதற்கு இந்த 'இரண்டாவது பாண்டுங்' கைப் பயன்படுத்துவதற்கு பீகிங் தலைமைப் பீடம் எண்ணியது. இரண்டாவதாக, தனது சோஷலிஸ— விரோத, பிளவுவாதப் போக்கினுக்கு இசைவான முறையில் ஆசிய, ஆபிரிக்க நாடுகளை சோஷலிஸ நாடுகளிலிருந்து பிரித்து வைக்கவும், இம் மகாநாட்டில் சோவியத் யூனியன் கலந்து கொள்ளுவதைத் தடை செய்வதற்கும் பீகிங்விரும்பியது.

**சோவியத் பங்கெடுப்பு**

சோவியத் யூனியன்தான் இந்த மகாநாட்டில் கலந்து கொள்ளும் பிரச்னையை எழுப்பாதவிடத்தும், சோஷலிஸ நாடுகளுக்கும் தேசிய விமோசன இயக்கங்களுக்குமிடையிலான ஐக்கியத்தைக் குலைக்கின்ற, பலஹீனப் படுத்துகின்ற போக்கினை சோவியத் அரசாங்கம் எதிர்த்தது. 1٠64 மே 5-லும் ஆகஸ்ட் 14-லும் சோவியத் அரசு விடுத்த அறிக்கையில் இந்த நிலை தெளிவாக விளக்கப்பட்டிருந்தது,



இருந்த பொழுதிலும் இந்தியா, எகிப்து, இலங்கை உட்பட பல நாடுகள் சோவியத் யூனியன், இம் மகாநாட்டில் கலந்து கொள்ள வேண்டுமென விரும்பின. 'எதிர்வரும் மகாநாட்டில் சோவியத் யூனியன் கலந்து கொள்ளுவது, இம் மகாநாட்டின் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குத் துணை செய்யும் என ஐக்கிய அரபுக் குடியரசின் அரசாங்கம் கருதுகின்றது' என சோவியத், எகிப்திய கூட்டறிக்கை வலியுறுத்தியது.

'சோவியத் யூனியன் ஒரு ஆசிய நாடோ அல்லது ஆபிரிக்க நாடோ அல்ல' என்று பீகிங் தலைமைப் பீடம் பகிரங்கமாகவே கூறி சோவியத் யூனியன் இம் மகாநாட்டில் கலந்து கொள்ளுவதில் தனக்குள்ள கசப்பைக் காட்டிக்கொண்டது. பீகிங்கின் இந்த வாதம் எவ்விதத்திலும் ஆதாரமற்றது என்பதனால் பெரும்பான்மையான ஆசிய— ஆபிரிக்க நாடுகளினால் இந்தப் போலி வாதத்துடன் உடன்பாடு கொள்ள முடியவில்லை. ஜனாதிபதி நாஸர் சீனப் பிரதமருக்கு எழுதிய கடிதங்களிலொன்றில் 'சோவியத் யூனியன் ஆசியாவில் பெரும் பிராந்தியங்களை உள்ளடக்கியிருப்பதனால், இம் மகாநாட்டில் சோவியத் யூனியன் கலந்து கொள்ளுவது பயனுள்ளது என்று குறிப்பிட்டிருந்தார்.

## இந்தியா மீது அவதூறு

இக் காலகட்டத்தின் போது இந்தியாவுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தவும் அதனைத் தனிமைப் படுத்தவும் பீகிங் தலைமைப் பீடம் எல்லா வழிகளிலும் முயன்றது. ஆசிய — ஆபிரிக்க உலகில் தனது மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் பாதையில் இந்தியாவினை ஒரு பெரும் முட்டுக்கட்டையாகப் பீகிங் கருதியது பின்னர், 1965-ல் இந்தியா— பாகிஸ்தான் தகராறு மூண்ட பொழுது, இதனை தனது இந்திய — விரோதத் தேவைகளுக்காகப் பயன்படுத்த பீகிங் எல்லா வழிகளிலும் முயன்றது. பாகிஸ்தானுடன் சார்ந்து நின்ற பீகிங் இந்திய யுத்த நிறுத்த எல்லையை மீறுவதாகவும், தகராறினை மேலும் பெரிது படுத்துவதாகவும் குற்றஞ்சாட்டியது.

இந்த 'இரண்டாவது பாண்டுங்' குக்கான தயாரிப்புகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் பீகிங் தலைவர்களின் நடவடிக்கைகள் உச்சக் கட்டத்தை அடைந்தன. 1963-க்கும் 1965-க்குமிடைப்பட்ட காலத்தில், காலஞ்சென்ற சீனப் பிரதமர் சூ என் லாயும், வெளிநாட்டமைச்சர் சென் யீயும், இதர சீனத் தலைவர்களும் பல ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயஞ் செய்தனர். தாம் விரும்பிய விதத்தில் மகாநாட்டினை நடாத்தி முடிக்கும் நோக்குடன் இவர்கள் சில நாடுகளுக்குப் பல தடவைகள் விஜயம் மேற்கொண்டனர்.

மகாநாடு நடைபெறும் திகதி இரு தடவைகள் மாற்றப்பட்டன. 1965 மார்ச் 10-ந் திகதியன்று மகாநாட்டினை நடாத்துவதென்ற திட்டம் மாற்றப்பட்டு ஜூன் 5-ம் திகதிக்குப் பின்போடப்பட்டது. பின்னர் இத்திகதியும் மாற்றப்பட்டு மகாநாட்டினை அதே ஆண்டு நவம்பர் 25-ந் திகதி நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகள் ஆசிய, ஆபிரிக்க மக்களின் பாலான பீகிங் தலைவர்களின் நட்புறவின் சூட்சுமத்தையும் சீனவையும் பெரும்பான்மையான ஆசிய, ஆபிரிக்க நாடுகளையும் வேறுபடுத்தி நிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் வேற்றுமைகளையும் அம்பலமாக்கின. தொடர்ந்து மகாநாடு நிகழுவதைத் தாமதப்படுத்த பீகிங் மேற்கொண்ட முயற்சிகள் ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் நலன்களை அது உதாசீனஞ் செய்வதை முழு உலகுக்கும் காட்டின.

**பகிரங்க காலக்கெடு**

அக்காலகட்டத்திலிருந்த சர்வதேசச் சூழ்நிலைமைகளில், மகாநாட்டில் தமது பேரரசு ஆதிக்கவாத நோக்கங்களை எய்துவதற்கு வாய்ப்பில்லை என்பதை பீகிங் தலைவர்கள் உணர்ந்து கொண்டார்கள் என்பதுதான் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய உண்மையாகும். சோவியத் யூனியன் இம் மகாநாட்டில் கலந்து கொள்ளுவதனைத் தம்மால் தடுத்து நிறுத்திவிட முடியாதென்பதை உணர்ந்த போது இவர்கள் மேலும் விசனமடைந்தார்கள். பிரதான ஆசிய நாடுகளுடனும், குறிப்பாக, இந்தியாவுடனும் சீன உறவுகள் சீர்கெட்டவாறிருந்தன. இந்திய — பாகிஸ்தான் தகராறைப் பயன்படுத்தி ஆசிய, ஆபிரிக்க உலகில் இந்தியாவுக்குள்ள கௌரவத்துக்கு குழிபறிப்பதற்கு பீகிங் மேற்கொண்ட எத்தனிப்புகள் வெற்றியளிக்கவில்லை.

தனது திட்டங்கள் தகர்ந்து வருவதனை உணர்ந்த பீகிங், முன்னர் திட்டமிட்டவாறு அக்டோபர் 28-ல் மகாநாடு ஆரம்பமாகுமாயின் அதில் சீனு கலந்து கொள்வது என அறிவித்தது. இது ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கான ஒரு பகிரங்க காலக்கெடு ஆகும்.

இந்த அறிவிப்பும், பின்னர் பீகிங்கிலிருந்து வெளியான அறிக்கைகளும் மகாநாடு தொடர்பான சீனுவின் நோக்கங்களுக்கும் பெரும்பான்மையான ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் நோக்கங்களுக்குமிடையில் அடிப்படை ரீதியில் வேறுபாடுகள் இருப்பதனையே காட்டின. இக் காரணங்களினுல், 1965 அக்டோபர் 30-ந் திகதி அல்ஜியர்ஸில் நடைபெற்ற ஆசிய, ஆபிரிக்க நாடுகளினது வெளிநாட்டமைச்சர்களின் கூட்டம் இரண்டாவது ஆசிய, ஆபிரிக்க மகாநாட்டினை காலவரையின்றி ஒத்தி வைப்பதெனத் தீர்மானித்தது.

**நடப்பு முக்கியத்துவம்**

'இரண்டாவது பாண்டுங்'குக்கான தயாரிப்புகளின் போது பீகிங் தலைமைப்பீடம் நடந்து கொண்ட விதத்தையும், அதனது நோக்கங்களையும் இவ்வாறு ஆராய்வது இன்றைய சூழலில்— 'மூன்ருவது உலக நாடுகளை அணிதிரட்டுவது' என்ற சுலோகத்தின் கீழ் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளைத் தனது பக்கம் ஈர்த்திழுத்துக் கொள்ளுவதற்கு பீகிங் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளும் இன்றைய சூழ்நிலையில் — சுவாரஸ்யமானதாகும். ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுடன் உறவுகளைப் பேணும் போது 'சீனு ஒரு போதும் ஒரு மஹா வல்லரசாக மாருது' என சீனத் தலைவர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றனர். மாஓவாத அயல்துறைக் கொள்கையின் மேலாதிக்க நோக்கங்களை பற்றி வளரும் நாடுகளுக்குள்ள சந்தேகங்களை அகற்றுவதற்கு மட்டுமன்றி, இரண்டாவது ஆசிய, ஆபிரிக்க மகாநாட்டுக்கான தயாரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட காலகட்டத்தில் பீகிங் கடைப்பிடித்த பேரரசுவாதப் போக்கு இந்நாடுகள் மத்தியில் ஏற்படுத்திய பாதகமான அபிப்பிராயத்தை தீர்க்கும் நோக்குடனேயே இந் சீனத் தலைவர்கள் 'மூன்ருவது உலக நாடுகளை அணிதிரட்டும்' சுலோகத்தினை உரக்க கோஷிக்கின்றனர். ★



## கூட்டுச்சேரா நாடுகளின் உச்சி மகாநாட்டில்

## பங்குகொள்ளும் அங்கத்துவ நாடுகள்

ராஜ ஸ்ரீகாந்தன்

**அல்ஜீரியா** - வட ஆபிரிக்காவிலுள்ள இந்நாட்டின் தலைநகர் அல்ஜியர்ஸ். தேசிய புரட்சிக் கவுன்சிலின் தலைவர் கர்னல் ஹவாரிபோமிடியென் நாட்டின் தலைவராகவும், பிரதமராகவும் உள்ளார்.

**அங்கோலா** - மேற்கு ஆபிரிக்காவிலுள்ள இந் நாட்டின் தலைநகர் லுவாண்டா. ஜனுதிபதி அகுஸ்தீன் நேட்டோவின் தலைமையில் ஆட்சி நடைபெறுகிறது.

**ஆர்ஜென்டீனு** - தென் அமெரிக்காவிலுள்ள இந் நாட்டின் தலைநகர் பியூனஸ் எயர்ஸ். ஜெனரல் ஜோர்ஜ் ஆர் விடெல்லா தலைமையில் மூவர் கொண்ட இராணுவ அரசாட்சி நடைபெறுகிறது.

**ஆப்கானிஸ்தான்** - மத்திய ஆசியாவிலுள்ள இந்நாட்டின் தலைநகர் காபுல். சர்தார் முகம்மது தாவூத் ஜனுதிபதியாகவும் பிரதமராகவும் உள்ளார்.

**வங்காளதேசம்** - இந்த ஆசிய நாட்டின் தலைநகர் டாக்கா. ஜனுதிபதி அபுசதாத் முஹம்மத் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

**புருண்டி** - கிழக்கு மத்திய ஆபிரிக்காவில் அமைந்துள்ள இந்நாட்டின் தலைநகர் புஜம்ரா. ஜனுதிபதி லூத்தினன் ஜெனரல் மைக்கல் மிக்கொம்பூபரோ ஆட்சி நடாத்துகிருர்.

**பூட்டான்** - மத்திய ஆசியாவிலுள்ள இந்நாட்டின் தலைநகர் திம்பு. மன்னர் ஜிமே சிங்கி வாங்சுக்.

**பொட்ஸ்வானு** - தென் ஆபிரிக்காவிலுள்ள இந்நாட்டின் தலைநகர் கபோர்னி. ஜனுதிபதி சேர் செரெட்சிகாமா.

**பாஹ்ரேன்** - தென்மேற்கு ஆசியாவிலுள்ள இத்தீவின் தலைநகர் மனுமா. இந்நாட்டின் பிரதமர் அமீர் கலிபாபின் சுல்மான்.

**பர்மா** - இத் தென்கிழக்காசிய நாட்டின் தலைநகர் ரங்கூன், ஜனுதிபதி நே வின்.

**கம்போடியா** - தென்கிழக்கு ஆசியாவிலுள்ள இந்நாட்டின் தலைநகர் நொம்பென். பிரதமர் கியூ சாம்பன்.

**காமரூன்** - மேற்கு மத்திய ஆபிரிக்காவிலுள்ள இக் குடியரசின் தலைநகர் யௌண்டி. ஜனுதிபதி அகமது அகிஜோ.

**காம்பியா** - இம் மேற்கு ஆபிரிக்க நாட்டின் தலைநகர் பான்ஜுல். ஜனுதிபதி சேர் தவூரா கைராபி ஜவாரா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கானு** - மேற்கு ஆபிரிக்காவிலுள்ள இந்நாட்டின் தலைநகர் அக்ரா. கர்னல் இக்நேஷியஸ் குட்டு ஆக்கிம் பொங் நாட்டின் தலைவர்.

**கியூபா** - கரிபியன் கடலின் வட கரையில் அமைந்துள்ள இந்நாட்டின் தலைநகர் ஹவானு. பெடல் காஸ்ரோ பிரதமர்.

**கினி** - மேற்கு ஆபிரிக்காவிலுள்ள இந்நாட்டின் தலைநகர் கோனக்ரி. பிரதமர் லூயி பொன்சானே பீலோக்னி.

**கினி — பீஸன்** - மேற்கு ஆபிரிக்காவிலுள்ள இந்நாட்டின் தலைநகர் பிஸவ். நாட்டின் தலைவர் லூயி த அல்மேதாகப்ராவ்.

**கபொன்** - மேற்கு மத்திய ஆபிரிக்காவிலுள்ள இந்நாட்டின் தலைநகர் லிப்ரெவில்லி. ஜனாதிபதி அல்பர்ட் பெர்னுட் பொங்கோ.

**கயானு** - தென் அமெரிக்காவிலுள்ள இந்நாட்டின் தலைநகர் ஜோர்ஜ்டவுன். பிரதமர் போர்பஸ் பர்ன்ஹாம்.

**கென்யா** - இக் கிழக்காபிரிக்க நாட்டின் தலைநகர் நைரோபி அரசின் தலைவர் ஜனாதிபதி ஜோமோ கென்யாட்டா.

**கொங்கோ** - மேல் மத்திய ஆபிரிக்காவிலுள்ள இந்நாட்டின் தலைநகர் பிரஸ்ஸாவில். ஜனாதிபதி மாரியன் என்குவாபி.

**குவைத்** - அரேபிய தீபகற்பத்தின் வடகிழக்கே அமைந்துள்ள இந்நாட்டின் தலைநகரின் பெயரும் குவைத் ஆகும். மன்னர் ஷேக் சபா அல் சலிம் அல் சபா.

**குவாட்டார்** - தென்மேற்கு ஆசியாவிலுள்ள இந்நாட்டின் தலைநகர் டோசா. மன்னர் கலீபா பென் ஹமாட் அல்தானி.

**சாட்** - வடமத்திய ஆபிரிக்காவிலுள்ள இக் குடியரசின் தலைநகர் நிஜமினு. அரசின் தலைவர் இராணுவத்தலைவர் பீலிக்ஸ் மல்லூம்.

**டகோமி** - மேற்கு ஆபிரிக்காவிலுள்ள இக்குடியரசின் தலைநகர் போர்ட்நோவோ. மேஜர் மட்டியூ கெரேக்கோ பிரதமர், ஜனாதிபதி.

**மத்திய ஆபிரிக்கக் குடியரசு** - இந்நாட்டின் தலைநகரம் பான்குயி. ஜனாதிபதி ஜெனரல் ஜீன்பெடல் பொக்காஸா.

**பூமத்திய கினி** - மேற்கு ஆபிரிக்காவிலுள்ள இக்குடியரசின் தலைநகர் மலாபு. ஜனாதிபதி பிரான்சிஸ்கோ மாசியாஸ்.

**எகிப்து** - வடகிழக்கு ஆபிரிக்காவிலுள்ள இந்த அரபுக் குடியரசின் தலைநகர் கொய்ரோ. ஜனாதிபதி அன்வர் சதாக்.

**எதியோப்பியா** - கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள இதன் தலைநகர் அடிஸ் அபாபா. இராணுவ அரசின் தலைமையை டெபெரி பென்டி ஏற்றுள்ளார்.

**இந்தியா** - இக்குடியரசின் தலைநகர் புதுடில்லி. திருமதி இந்திரா காந்தி பிரதமர்.

**இந்தோனேசியா** - தென்கிழக்காசியாவிலுள்ள இந்நாட்டின் தலைநகர் ஜகர்த்தா. ஜனாதிபதி சுஹார்ட்டோ.

**ஈராக்** - தென்மேற்கு ஆசியாவில் அமைந்துள்ள இக் குடியரசின் தலைநகர் பாக்தாத்.

**ஐவரி கோஷ்ட்** - மேற்கு ஆபிரிக்காவிலுள்ள இக்குடியரசின் தலைநகர் அபிட்ஜான். ஜனாதிபதி பீலிக்ஸ் ஹியூபௌட் பொயினி.

**ஜோர்டான்** - தென்மேற்கு ஆசியாவிலுள்ள இம் முடியரசின் தலைநகர் அம்மான். மன்னர் ஹுசைன் இப்னு தலால்.

**ஜமேக்கா** - மேற்கிந்தியத் தீவுகளின் ஒன்ருன இதன் தலைநகர் கிங்ஸ்டன். பிரதமர் மைக்கல் மான்லி.

**வட கொரியா** - வடமேற்கு ஆசியாவிலுள்ள இம் மக்கள் குடியரசின் தலைநகர் பியொங்யாங். தலைவர் கிம் இல் சுங்.

**லெபனுன்** - தென்மேற்காசியாவிலுள்ள இக்குடியரசின் தலைநகர் பேருத். பிரதமர் ரஷீத் கராமி.

**லிபியா** - இக்குடியரசின் தலைநகர் திரிபொலி. கடாபி நாட்டின் தலைவராகவுள்ளார்.

**லாவோஸ்** - தென்கிழக்கு ஆசியாவிலுள்ள இக்குடியரசின் தலைநகர் வியான்ரியான். பிரதமர் கேசோன் போமிகேன்.

**லைபீரியா** - மேற்கு ஆபிரிக்காவிலுள்ள இக்குடியரசின் தலைநகர் மொன்ரோவியா. ஜனாதிபதி வில்லியம் ஆர். டொல்பெர்த்.

**லெசோத்தோ** - தென் ஆபிரிக்காவிலுள்ள இம் முடியரசின் தலைநகர் மாஸெரு, பிரதமர் லெபுவா ஜொனுன்.

**மொஸாம்பிக்** - இக் குடியரசின் தலைநகர் லோரேன்கு மார்க்கேஷ் ஜனாதிபதி சமோரா மைக்கல்.

**மொரீஸியஸ்** - இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள இந்நாட்டின் தலைநகர் போட்லூபிஸ். பிரதமர் சேர் சிவூசேகர் ராம்கூலம்.

**மலகாசி** - இக்குடியரசின் தலைநகர் டானுனரிவ். அரசின் தலைவர் ஜெனரல் ஜில்லெஸ் ஆன்ரியாமாஸோ.

**மாலி** - இம் மேற்காபிரிக்கக் குடியரசின் தலைநகர் பமாக்கோ லூத்தினன் மொஸிடிராபோரே நாட்டின் தலைவராயுள்ளார்.

**மால்ட்டா** - மத்தியதரைக் கடலிலுள்ள இந்நாட்டின் தலைநகர் வலெட்டா. பிரதமர் டொம்மின்டொப்

**மொரோக்கோ** - வடமேற்கு ஆபிரிக்காவிலுள்ள இம் முடியரசின் தலைநகர் ரபாட். மன்னர் ஹசன்.

**மலேசியா** - இந்நாட்டின் தலைநகர் கோலாலம்பூர், பிரதமர் தாதுக் ஹுஸேன்.

**மொரிடேனியா** - மேற்கு ஆபிரிக்காவிலுள்ள இக்குடியரசின் தலைநகர் நௌவாக்கொட். ஜனாதிபதி முக்தார் ஔல் டட்டாஹ்.

**நேபாளம்** - மத்திய ஆசியாவில் உள்ள இதன் தலைநகர் காட்மண்டு. பிரதமர் நாகேந்திர பிரசாத் ராய்ஜ்ல.

**நைஜீரியா** - இச் சமஷ்டிக் குடியரசின் தலைநகர் லாகோஸ். ஜெனரல் முர்தாலா முகம்மது நாட்டின் தலைவராயுள்ளார்.

**நைஜர்** - மேற்கு மத்திய ஆபிரிக்காவிலுள்ள இக்குடியரசின் தலைநகர் நியாமி. லூத்தினன் கேர்னல் சீனே மௌன்ஷே நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

**ஓமான்** - தென்கிழக்கு அரேபியாவிலுள்ள இந்த இராச்சியத்தின் தலைநகர் மஸ்கட். தலைவர் சுல்தான் குவாபாஸ் பின் செய்த்.

**பெரு** - இக்குடியரசின் தலைநகர் லீமா. நாட்டின் தலைவர் பிரான்ஸிஸ்கோ மொரால்ஸ் பேர்முடெஸ்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பனுமா** - இக்குடியரசின் தலைநகர் பனுமாநகர். புரட்சி அரசின் தலைவர் பிரிகேடியர் ஜெனரல் ஓமர் டொரிஜோ ஹெரமர்.

**ருவாண்டா** - மத்திய ஆபிரிக்காவிலுள்ள இக் குடியரசின் தலைநகர் கிகாலி. அரசின் தலைவர் மேஜர் ஜெனரல் ஜுவெனல் நப்யாரிமானு.

**சவூதி அரேபியா** - இம் முடியரசின் அரசியற் தலைநகர் ரியாத் நிர்வாகத் தலைநகர் ஜித்தா. மன்னர் காலிட் அப்துல் அஸீஸ் அல் சவுத் ஆட்சி புரிகிறார்.

**சியெராலியோன்** - மேற்காபிரிக்காவிலுள்ள இந்நாட்டின் தலைநகர் பிரீடவுன், பிரதமர் கொரோமா.

**சிரியா** - இவ்வரபுக் குடியரசின் தலைநகர் டமாஸ்கஸ். ஜனாதிபதி லூத்தினன் ஜெனரல் ஹ்பேஷ் அல் அஸாத் நாட்டின் தலைவர்.

**சிங்கப்பூர்** - இக்குடியரசின் தலைநகர் சிங்கப்பூர். பிரதமர் லீ குவான் யூ.

**சூடான்** - வடகிழக்கு ஆபிரிக்காவிலுள்ள இந்த ஜனநாயகக் குடியரசின் தலைநகர் கார்ட்டூம். ஜனாதிபதி ஜாபீர் அல் — நெமெரி.

**செனகல்** - மேற்கு ஆபிரிக்காவிலுள்ள இக் குடியரசின் தலைநகர் டக்கார். பிரதமர் அப்துடியூப்.

**ஸ்ரீலங்கா** - நமது நாடு. தலைநகர் கொழும்பு. பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா.

**தன்ஸானியா** - கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள இந்த ஐக்கியக் குடியரசின் தலைநகர் டுடோமோ பிரதமர் ராஷிடி காவாவா.

**ஸாயிரே** - தென்மேற்கு ஆபிரிக்காவிலுள்ள இக்குடியரசின் தலைநகர் கின்ஷாசா. ஜனாதிபதி லூத்தினன் ஜெனரல் மொபுட்டு


**ஸாம்பியா** - தென் ஆபிரிக்காவில் அமைந்துள்ள இக்குடியரசின் தலைநகர் லுகாக்கா. ஜனாதிபதி கென்னத்கௌண்டா.

## வளரும் நாடுகள்

தென்னோலைக் கீற்றுகளும்
செவ்வானப் பறவைகளும்
அந்நாள் நினைவுகளை
அருட்டுகின்ற வேளையிலே,
அந்நாளில்,
நெல்லென்ன பருப்பென்ன
நிரை நிரையாய்க்
கடை நிறைந்த
பல்வண்ணப் பட்டென்ன,
ஆஹா, அவை மிக்க
பொன்னாட்கள்,
என்றெழுந்த வாயூறல்
கழிந்து சென்ற பழநாளிற்
புது மோகம்.........
தானியங்கள் பெருகியதாய்க்
காட்டியதும்
தவிக்கின்ற நிலைக்குள்ளே
மாட்டியதும்
சூரியனே அஸ்தமிக்காச்
செய்புரியின் திட்டமென
கூறுகின்ற கொள்கை
குணக்குன்றாய்த்
தலைதூக்கும்
மூலைகளில் முடுக்குகளில்
துடியாட்டம்.
..............................
செத்தைகளினுள்ளே
செந்தீ யகல் விளக்கு

**சபா. ஜெயராசா**





# நீல. பத்மநாபனின்

## புதிய நாவல்

# ‘உறவுகள்’

**செ. யோகநாதன்**

குறுகிய காலத்திற்குள் தமிழ் நாவல்துறையில் அறிமுகமாகி, ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளவர் நீல. பத்மநாபன். அவரின் நாவல்களில் ‘தலைமுறைகள்’, ‘பள்ளிகொண்டபுரம்’, ‘பைல்கள்’ ஆகியன அச்சில் வந்திருக்கின்றன. புதிதாக வெளியாகியுள்ள நாவல் ‘உறவுகள்’ என்பதாகும். ‘தலைமுறைகள்’ குமரிமாவட்டத்தைச் சேர்ந்த ஊரான இரணியல் பகுதியிலே வாழுகின்ற செட்டிமார் சமூகத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட நாவல்.

சென்ற தலைமுறையின் வீழ்ச்சியையும் வருங்காலத்தின் தலைமுறை பிறப்பதற்கு முன்னோடியாகிய இந்தத் தலைமுறையின் சித்திரங்களையும் மனித இயலாளன் ஒருவனுக்குரிய நிதானத்துடன் அதே வேளையில் கலைத்தன்மை ததும்ப நீல. பத்மநாபன் ‘தலைமுறைகளி’ல் காட்டியுள்ளார். தலைமுறைகள் நாவல் ‘ஹிந் புத்தக நிறுவன’த்தால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது. வாசகர் வட்டத்தினரால் வெளியிடப்பட்ட ‘பள்ளிகொண்டபுரம்’ கேரளத் தலைநகரான திருவனந்தபுரத்திலே வாழுகின்ற நாயர் சமூகத்தை நிலைக்களனாக வைத்து எழுதப்பட்ட நாவலாகும். இந்த நாவலும் இந்திய அனைத்திந்திய மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளது. ‘பைல்கள்’ என்ற நாவல் எனக்கு இன்னமும் படிக்கக் கிடைக்கவில்லையாயினும், அதனைப்பற்றிய அறிமுகங்களினை வாசிக்கின்றபோதிலே, நீல பத்மநாதனைப்பற்றிய நம்பிக்கை மேலும் வலுப்பெறவே செய்கின்றது. மூன்று நாவல்கள், மூன்று சிறுகதைத் தொகுதிகள் கவிதைத் தொகுதி ஒன்று ஆகியன ஏற்கனவே நீல. பத்மநாபனால் வெளியிடப் பெற்றுள்ளன. இப்போது கடைசியாக ‘உறவுகள்’ என்ற அவருடைய நாவல் வெளியாகியுள்ளது. எப்படி அவருடைய நாவல் பிரதி ஏறக்குறைய ஒரு வருஷ காலமாக பிரசுரிப்பாளரிடமும், பத்திரிகையாசிரியரிடமும் எவ்வித நடவடிக்கையுமின்றி கிடத்தப்பட்ட வேண்டுமென்றே புறக்கணிப்போடு நிராகரிக்கப்பட்டதோ அதுபோலவே அது வெளியாகிய பின்னரும் கூட விமர்சகர்களால் தொடப்படாமல் வைக்கப்பட்டுள்ளது என்ற உண்மையினையும் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதிலே கொள்ளுதல் வேண்டும்.

பெரிய பெரிய புத்தகங்களை, நமது தலைமுறையினரின் சிந்தனைகளையே பாழடிக்கும் காகிதக் குப்பைகளை பல்லாயிரக் கணக்கிலே வெளியிட்டு வரும் பிரசுரகாரரும், பத்திரிகையாளரும் அற்புதமான கலைஞன் ஒருவனை ஏன் இப்படிப் புறக்கணித்தார்கள் என்ற கேள்விக்கான விடை மிகவும் இலகுவானதாகும். நீல. பத்மநாபன் வாழ்க்கையை வாழ்க்கையாகவே எழுதுகின்ற கலைஞன். அவரிடம் உள்ள இலக்கிய நேர்மை, பரிபூரணமான கலைத்துவம் ஆகியன அவருடைய ஒவ்வொரு நாவலிலும் பிரகாசித்து விளங்குகின்றது. ஒரே விதமான பாத்திரங்களையும், வாழ்க்கையின் அக, புற மாற்றங்களைப் பற்றிய அறிவீனங்களையுமே முதலாகக் கொண்டு எழுதுபவர்களுக்கு நடுவே நீல. பத்மநாபனைப் போன்ற எழுத்தாளர்கள் மிகக் குறைவாகவே காணப்படுகிறார்கள். எனவே. இயல்பாகவே இத்தகைய நிலைமையில் நீல. பத்மநாபனைப்பற்றிய ஆய்வினை பரவலாக மேற்கொள்ளுவது ஆரோக்கியமான இலக்கிய வளர்ச்சிக்கு வழிகோலுமென்றே எண்ணலாம். இத்தகைய பின்னணிகளுக்கு மத்தியிலேதான் 'உறவுகள்' நாவலை நீங்கள் வாசித்துப் பார்க்க வேண்டும்.

'உறவுகள்' நாவலும், நீல. பத்பநாபனின் ஏனைய இரு நாவல்களைப் போல கதை அம்சத்திலே அதிவிசேடங்களையோ, பரபரப்புகளையோ உள்ளடக்கியதில்லை. அதன் பிரதான அம்சம் என்னவெனில் நுட்பமான மனச் சித்தரிப்பு. ஒவ்வொரு கணத்தையும் பிரத்தியட்சமாகவே குறையின்றித் தீட்டும் வன்மை. நீல. பத்மநாபனே இதனை வெகு அழகாகவும் அழுத்தமாகவும் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார். 'முந்திய என் எல்லா நாவல்களையும் விடவும் என்னை மிகவும் கஷ்டப்படுத்திய நாவல் இது. தனி நபர் என்ற மையக் கிரகத்தைச் சுற்றிய உறவு மண்டலத்தில் ஒன்றுக்கொன்று இழுக்கும், விலக்கும் எத்தனையோ சிறிய கிரகங்கள்...... இன்றைய வாழ்வில் ஒவ்வொருவனும் அவனவன் தனித்தன்மையுடன் ஆத்மப் போர் தொடுத்தவாறு தன்னந்தனிமையில் உழலும் உழற்சியை, யந்திரமாற்றங்களின் வீச்சில் தன்னையும் சேர்க்க இயலாது தனிப்பட்டுப் போய் விமோசனத்திற்கு அகப்பிரமத்தை அடைக்கலமாகத் தவிக்கும் பந்தபாசமெனும் உறவுகளின் உறவுமண்டலத்தில் கடைந்து விகசிக்க முனைந்த வினையே இந்த நாவல்...... ஒரு பார்வைக்கு பொருத்தமில்லாததாய்த் தோன்றும் சின்னச் சின்ன நிகழ்ச்சிச் சிதறல்கள் தாரதம்ய ஆராய்ச்சிக்கு மினக்கெடாத வேறுபாடுகளில் இழையோடும் ஒருமைப்பாடு, சுதந்திரமான வாழ்க்கைப் பார்வை, தீவிரமான தேடல் ஆர்வம், அசலை மீறி புதிய அனுபூதிகளைத் துழாவும் சிரத்தை, யந்திரத்தன்மையில் அகப்பட்டுக் கலைந்து போகாதிருக்க தன்னைத் தானே கண்டு பிடிக்கக் கலை செய்யும் ஆத்மரோதனை — இத்தியாதியானவைகளுக்கு வந்து விட்ட நவீன (அ) நாவல் உலகைப் புரிந்து கொள்ளும் சமகாலப் பிரக்ஞையுள்ள உங்கள் முன் ஆத்ம தைரியத்துடன் — நம்பிக்கையுடன் இந் நாவலை வைத்திருக்கிறேன்.........'

'உறவுகள்' நாவலைத் தொடங்குவதே ஒரு வேகமான பரபரப்போடுதான். பள்ளி



கொண்ட புரத்திலிருந்து, புனல் புரத்திற்குக் கடிதம் வந்திருக்கிறது. ராஜகோபால் மனப் படபடப்போடு அந்தக் கடிதத்தை வாசிக்கின்றான். கடைசித் தம்பி ராமகிருஷ்ணனால் எழுதப்பட்டது. அவர்களின் தகப்பன் இருதய வியாதி காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தி வந்திருக்கின்றது. ராஜகோபால் மனத்துயரோடு பிரயாணப் படுகிறான். பிரயாணத்தோடு மனச் சுழலில் கடந்த காலம், நிகழ்காலத்தின் நிகழ்ச்சிகள் யாவும் தொட்டுந் தொடர்ந்தும் அவனுக்கும் எங்களுக்கும் சித்திரங்களாகின்றன. வீட்டிலே போய் சில நாட்களில் தகப்பனும் இறந்துவிடுகின்றார். அதுவும சாவுக்கே கௌரவமான சாவாக எல்லோரும் அழுது பிரலாபித்துக் கொண்டு நிற்கின்றனர். நாவல் முடிகின்றது. ஆனால் வாசித்து முடித்ததும், வாசிக்க இன்னுமுள்ளது போலவும், வாழ்வின் ஒரு பகுதியினை மிகவும் அந்நியோன்னியமாக நாமே நின்று அனுபவித்து வந்தது போலவும் மனதினைக் குடையும் ஒரு குறுகுறுப்பு 450 பக்கங்களுள் எத்தனையோ பாத்திரங்கள் வந்து போகின்றன. ஒவ்வொன்றும் தனி. பிசிறில்லாத குண இயல்புகள். அவர்களைச் சுற்றிய வாழ்க்கைமுறை, பழக்க வழக்கங்கள் ஆகியனவற்றின் பிசகில்லாத வர்ணிப்புகள். நாவலை வாசிக்கின்ற போதிலே வட்டார மண்ணின் நம்பிக்கைகள், வாழ்க்கைமுறை சம்பிரதாயங்கள், நம்பிக்கைகளின் ஆதாரமான சடங்குகள் ஆகியவற்றை நாம் தரிசிக்கலாம். தலைமுறைகள், பள்ளிகொண்டபுரத்தினை விட உறவுகள். உத்திமுறையாலும், சித்தரிப்பாலும் உயர்ந்து நிற்கின்றது. எனினும் இங்கே ஒரு குறிப்பைக் குறிப்பிட்டாக வேண்டும். திருமணமாகி, குழந்தைகளுக்குத் தகப்பனான ராஜகோபால் தன்னுடைய தகப்பனின் அந்திமகாலத்திற்காக இப்படி ஏங்கிக் கலங்கித் துயருறுவானா என்பதுதான் அக்கேள்வி. ஆனால் அதுவே கதையுமாகும்.

நீல. பத்மநாபனின் அனந்தன் நாயரும், தெரவியும் போலவே உறவுகளில் வரும் கதாபாத்திரங்கள் எல்லாம் எம்முடைய மனத்தோடு ஒட்டுகின்றன. எனினும், இனிவரும் நீல. பத்மநாபனின் நாவல்கள் மனப்போராட்டங்களை அலசுவதோடு அமையாது, சமூக மாற்றங்கள், போராட்டங்கள் ஆகியவற்றினை விஸ்தாரமாக விவரிக்க வேண்டுமென்று விரும்புகின்றோம். அதுவே காலத்தின் தேவையுமாகும். நீல. பத்மநாபன் வாழ்வதும் இத்தகைய யுகத்தில்தான்.

இது தமிழ் நாவல் நூற்றாண்டு. இந்த நூற்றாண்டின் நாவலாளிகளில் நீல. பத்மநாபனும் ஒருவர். தமிழ் நாவல் இலக்கியத்தில் அவரின் செழுமையான பங்களிப்புக்கு இன்னமும் நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. அதை அவர் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. ★

**கொழும்பில் 'மல்லிகை' ஆசிரியரைச் சந்திக்கும் முகவரி**

ஒவ்வொரு மாதத்தினுடைய கடைசி வாரத்தில் ஆசிரியர் கொழும்பில் கீழ்க்கண்ட முகவரிகளில் தங்கியிருப்பார்: 137, மலிபன் வீதி, 182, முதலாம் குறுக்குத்தெரு, 24, ஸ்ரீ கதிரேசன் வீதி.

விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏகாதிபத்தியமும் கூட்டுச்சேரா இயக்கமும்

செல்வி இலக்கியா ஷண்முகநாதன்

கூட்டுச் சேரா இயக்கத்தின் முதல் நடவடிக்கைகளை ஏகாதிபத்திய அரசுகள் மிகுந்த முன்யோசனையுடனும், வெளிப்படையான விரோதத்துடனுமே வரவேற்றன. அமெரிக்கப் பேராசிரியர் சிஸில் — குரூப்பின் பிரசாரம் ஆரம்பத்திலிருந்தே நடுநிலைமைவாதம் அமெரிக்க ஆளும் வட்டாரங்களில் ஒருவித அச்சத்தையும் ஐயப்பாட்டினையுமே ஏற்படுத்தியிருந்தது.

யுத்தத்துக்குப் பிந்திய கால கட்டத்தில் சர்வதேச ஏகாதிபத்தியத்தின் கொள்கையானது, ஆசியாவில் 'கம்யூனிஸப் பயமுறுத்தலு'க்கு எதிரான போராட்டக் கொடியின் கீழ் ஒரு பிரதேச இராணுவ — அரசியல் முகாம்களின் அமைப்பொன்றினை (சியாட்டோ, பாக்தாத் ஒப்பந்தம், அமெரிக்காவுக்கும் தைவானுக்குமிடையிலான பரஸ்பர பந்தோபஸ்து உடன்படிக்கை, ஜப்பானிய — அமெரிக்க உடன்படிக்கை முதலியன...) நிறுவுவதனையே நோக்காகக் கொண்டிருந்தது. பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, பாகிஸ்தான் போன்ற ஆசிய நாடுகளை சியாட்டோவினுள் இழுத்துக் கொள்வதில் வெற்றி கண்டன. இந்நாடுகளுடன் ஏற்கனவே அமெரிக்கா இராணுவ உடன்படிக்கைகளைச் செய்து கொண்டிருந்தது. பாக்தாத் உடன்படிக்கையில் ஈராக், பாகிஸ்தான், துருக்கி, ஈரான் ஆகிய நாடுகள் சம்பந்தப்பட்டிருந்தன.

இந்த நிலைமைகளில், தென்னாசியாவினையும், தென்கிழக்கு ஆசியாவினையுஞ் சேர்ந்த பல சோஷலிஸ நாடுகளல்லாத நாடுகள் எந்தவொரு இராணுவ— அரசியல் அணியிலும் சேர்ந்து கொள்ள உறுதியாக மறுத்தமை நவகலோனியலிஸ்டுகளுக்குச் சினத்தை மூட்டிவிட்டது. முன்னை நாள் அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஜே. டல்லஸ் நடுநிலைமைக் கருத்து காலாவதியாகிவிட்ட ஒன்றென்றும் தீயதான ஒன்றென்றும் வருணித்தார். 'எவர்கள் எங்களுடன் இல்லையோ, அவர்கள் நமது எதிரிகள்' என்ற முரட்டுத் தத்துவத்தின் அடிப்படையில் ஏகாதிபத்தியவாதிகள் கூட்டு சேரா ஆசிய, ஆபிரிக்க நாடுகளைப் பொறுத்து ஒரு பகிரங்கமான விரோதப் போக்கினையே பின்பற்றின.

1950-ம் ஆண்டுகளின் இறுதி வரை இளம் சுயாதிபத்திய நாடுகள் உலகின் இரு சமூக அமைப்புகளின் போராட்டத்தில் ஏதாவதொன்றின் தரப்பினைச் சார்ந்து நிற்கவேண்டுமென்று மேற்கத்தைய ஆளும் வட்டாரங்கள் வலியுறுத்தி வந்தன.



நிஜத்தில், இது இந்த இளம் நாடுகள் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புப் போரினுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற மறைமுகமாக ஏகாதிபத்திய வட்டாரங்கள் விடுத்த கோரிக்கையாகும்.

கூட்டுச் சேரா நாடுகள் ஏதாவதொரு தரப்பைத் 'தேர்ந்தெடுப்பதில்' அவற்றுக்குத் 'துணை செய்யும்' பொருட்டு உதவி உட்பட பல உத்திகளும் முண்டுகளும் பயன்படுத்தப்பட்டன. இதற்கான ஒரு உதாரணத்தை இங்கு சுட்டிக் காட்டலாம். 1953-ம் ஆண்டின் அமெரிக்க பொருளாதார, தொழில்நுட்ப உதவித் திட்டத்துக்கு அமைய, இந்தியாவுக்கு 1150 லட்சம் டாலர்களையும் பர்மாவுக்கு 180 லட்சம் டாலர்களையும், இலங்கைக்கு 450 ஆயிரம் டாலர்களையும் இந்தோனேஷியாவுக்கு 80 லட்சம் டாலர்களையும் ஒதுக்குவதென்று திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் இந்த ஒதுக்கீடுகளை அமெரிக்க காங்கிரஸ் அங்கீகரிக்கவில்லை. காங்கிரஸின் வெட்டுக் கொத்துகளின் பின்னர், இந்தியா 43,600 ஆயிரம் டாலர்களையும், பர்மா 70 லட்சம் டாலர்களையும், இந்தோனேஷியா 3,500 ஆயிரம் டாலர்களையும் பெற்றன. இலங்கைக்கு எதுவுமே கிடைக்கவில்லை. இந்த உதவி ஒதுக்கீடுகள் ஏன் குறைக்கப்பட்டன என்பதை ஆராய்ந்து பார்ப்பது சுவாரஸ்யமானது. இந்தியாவுக்கு உதவி வழங்குவது பற்றிய விவாதத்தின் போது, ஜோர்ஜிய மாகாண காங்கிரஸ் உறுப்பினர் டேவிஸ், இந்தியாவில் உருக்காலை, செயற்கைப் பசளைத் தொழிலகம் போன்றன நிர்மாணிக்கப்படுவது அனுமதிக்கப்பட முடியாதது என்று ஆத்திரத்துடன் கூச்சலிட்டார். வேர்ஜினியா மாகாண காங்கிரஸ் உறுப்பினர் ஸிமித், அமெரிக்காவுக்குச் சார்பாக ஜவஹர்லால் நேரு எதுவும் பேசியது தனது காதில் விழவில்லை என்பதற்காக இந்தியாவுக்கு உதவி வழங்கப்படக் கூடாது என வெளிப்படையாகவே தனது அதிருப்தியைக் காட்டிக் கொண்டார்.

பாண்டுங் மாநாடு ஏகாதிபத்திய, நவகலோனியலிஸ சக்திகள் மத்தியில் சினத்தை ஏற்படுத்தியதில் வியப்பதற்கு எதுவும் இல்லை. இம் மகாநாடு பூரண தோல்வியையே அடையும் என நச்சுப்பல்லி ஆருடம் கூறிய இவர்கள், இம் மகாநாட்டில் கலந்து கொண்ட நாடுகள் மத்தியில் முரண்பாடுகளையும், பூசல்களையும் ஏற்படுத்துவதற்குப் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டனர். ஆனால் பிற்போக்குச் சக்திகளின் முயற்சிகள் வீணாகிப் போயின; மகாநாடு எல்லாப் போலி ஆருடங்களையும் பொய்ப்பிக்கும் வகையில் வெற்றிகரமாக நடந்தேறியது. இதுவும், இன்னும் பல உண்மைகளும் சில நவ — கலோனியலிஸத்துக்கு வக்காலத்து வாங்கும் தொலைநோக்குள்ள சில அரசியல் வாதிகள் தமது தந்திரோபாயங்களை மாற்றியமைத்துக் கொள்ள நிர்ப்பந்தித்தன: புதிய வரலாற்று நிலைமைகளில், விமோசனமடைந்த நாடுகள் உலக சோஷலிஸ சமாஜத்திடமிருந்து பன்முக ஆதரவினையும் பெற முடியும் என்ற நம்பிக்கை நிலவும் நிலைமைகளில் பல முதலாளித்துவத் தலைவர்கள் (இவர்களில் மிஸ்கி பல்கலைக்கழகத்தைச் சார்ந்த டி. வேர்ஃபலும் ஒருவர்) ஏகாதிபத்திய நாடுகள் தாம் வழங்கும் உதவியைப் பூரணமாக நிறுத்தினாலும் ஆசிய, ஆபிரிக்க நடுநிலைமை நாடுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிபணிய வைக்க முடியாது என்று உணர்ந்து கொண்டனர்.

மேற்கு நாட்டு தலைவர்கள் கூட்டுச்சேரா இயக்கத்தின்பால் தமது விரோதப் போக்கினைக் காட்டுவதனை நிறுத்திக்கொண்டனர். சில தடவைகளில் இவர்கள் கூட்டுச்சேரா இயக்கத்துக்குச் சாதகமாகப் பேசவும் செய்தனர். ஆனால் 'இந்தப் புதிய ஏகாதிபத்திய தந்திரத்தின் இலக்கு யாதெனில், 'உண்மையான நடுநிலைமை வாதத்தை' பாதுகாக்கின்றோம் என்ற போர்வையில் தீவிர ஏகாதிபத்திய—எதிர்ப்பு போராட்ட அரங்கிலிருந்து ஆசிய, ஆபிரிக்க நாடுகளினைத் திசை திருப்புகின்றதும், ஆக்கபூர்வமான நடுநிலைமை நிலைபாடுகளிலிருந்து 'இடைத்தர வளர்ச்சி'ப் பாதைக்கு இந் நாடுகளைத் தள்ளிவிடுகின்றதும், தேசிய விமோசன சக்திகளுக்கும் உலக சோஷலிஸத்துக்குமிடையிலான உறவுகளைப் பலஹீனப் படுத்துகின்றதுமான நோக்குடன் உலகின் இரு சமூக அமைப்புகளினின்றும் 'சமதையாக விலகிச் செல்லும்' கொள்கையைப் பரப்புவதேயாகும் என நம்புவதற்கு இடமுண்டு' என இன்றைய கிழக்குலகப் பிரச்னைகள் பற்றி சோவியத் யூனியனில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வு நூலொன்றின் ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

கூட்டுச் சேரா ஆசிய, ஆபிரிக்க நாடுகளுடன் இணக்கம் காணும் போக்கு லிண்டன் ஜான்ஸனின் 'ஆசிய சூத்திர'த்திலும், நிக்ஸனின் 'குவாம் சூத்திர'த்திலும், ஆசியாவில் அமெரிக்க இருக்கையைப் பேணுவது பற்றிய ஜனாதிபதி போர்டின் சூத்திரத்திலும் தருக்க ரீதியாக நெறிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சூத்திரங்களின்

## சந்தாதாரர்களுக்கு

சந்தாவைப் புதுப்பிக்காத சந்தாதாரர்களுக்குக் கண்டிப்பாக மலர் அனுப்பப்பட மாட்டாது. மலர் தேவையானோர் எம்முடன் நேரடியாகத் தொடர்பு கொள்வது வரவேற்கத் தக்கது. மலர் அறிமுக விழாக்கள், விமர்சன அரங்குகளுக்கு அவர்களை அழைப்பதில் உதவியாக அது அமையும்.

—ஆசிரியர்

பின்னால் என்ன உள்ளது என்பதை இந்தியாவில் தற்போதைய அரசியல் நிகழ்வுப் போக்குகள் பற்றி மேற்கத்தைய நாடுகள் கருத்துத் தெரிவித்த விதத்திலிருந்தும், 1975-ல் இந்தியாவில் அரசியல் நெருக்கடியை உக்ரப்படுத்துவதற்கு ஏகாதிபத்திய நாடுகள் மேற்கொண்ட சதி வேலைகளினின்றும் புரிந்துகொள்ளலாம்.

1976 ஜனவரியில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸில் உரையாற்றுகையில் பிரதமர் திருமதி இந்திராகாந்தி ஏகாதிபத்தியத்தின் கபடத் திட்டங்கள் பற்றிப் பிரஸ்தாபிக்கையில், சிலியில் தமது குழிபறிப்பு வேலைகள் வெற்றி பெற்ற குஷியில் சில சக்திகள் இந்தியாவுக்கு எதிராகவும் இதே போன்ற சதிகளை மேற்கொள்ள முயலுகின்றன என்று குறிப்பிட்டார். ★



# கொழும்பு உச்சி மகாநாடு

## அணி சேராமையின் பரிணாமம்

பி. முத்தையா

அணி சேரா இயக்கத்தைத் தொடக்கிவைத்தவை இந்தியாவும், பாகிஸ்தானுமே. பின்னால் இவற்றுடன் இந்தோனேஷியா, எகிப்து, இலங்கை, கம்போடியா ஆகிய நாடுகள் சேர்ந்து கொண்டன. ஜவஹர்லால் நேருவின் முன் முயற்சியால் 1947 மார்ச் ஏப்ரலில் 27 ஆசிய நாடுகள் கலந்துகொண்ட மகாநாடொன்று டெல்லியில் நடைபெற்றது. இதுதான் கூட்டு நடவடிக்கைகளுக்காக ஆசிய நாடுகள் எடுத்த முன் முயற்சியாகும். இந்த மகாநாட்டில் சோவியத் மத்திய ஆசியக் குடியரசு, ட்ரான்ஸ்ககாஸியன் குடியரசுகள், மங்கோலிய மக்கள் குடியரசு, வியட்நாம் ஜனநாயகக் குடியரசு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இதர நாடுகளிலிருந்தும் சர்வதேசிய ஸ்தாபனங்கள் சிலவற்றிலிருந்தும் பார்வையாளர்களும் கலந்து கொண்டனர். இம் மகாநாட்டில் பங்கு பற்றியவர்கள் ஏகதேபத்தியத்தையும் கலோனியலிஸத்தையும் எதிர்த்துப் போராடுவதற்காக ஆசிய நாடுகளை ஐக்கியப்படுத்தும் கோட்பாடுகளை வகுக்கப் பிரயத்தனங்களை மேற்கொண்டனர்; கூட்டு முயற்சிகளுக்கூடாகப் பந்தோபஸ்தை உத்தரவாதப் படுத்தும் வழிவகைகளை வரையவும் அவர்கள் முயன்றனர்.

இந்தோனேஷியாவுக்கெதிரான ஒல்லாந்தின் ஆக்கிரமிப்பையொட்டி 1949 ஜனவரியில் டெல்லியில் ஆசிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களது மகாநாடொன்று நடைபெற்றது. இந்த ஆக்கிரமிப்புக்கு முடிவு கட்டும் வகையில் பந்தோபஸ்துக் கவுன்ஸிலின் சயலூக்கமிக்க தலையீட்டிற்கு ஆதரவாகப் பிரதிநிதிகள் இங்கு உரையாற்றினர். அதே நேரத்தில் மகாநாட்டில் ஏராளமான கேள்விகளும் எழுப்பப்பட்டன. பரஸ்பரம் செயலூக்கமிக்க ஆலோசனைகளுக்காகவும் பொதுலட்சியங்களைச் சாதிப்பதற்குக் கூட்டு நடவடிக்கைகளை எடுப்பதற்காகவும் ஒரு நிரந்தர அமைப்பை உருவாக்குவது பற்றி ஆசிய நாடுகள் சிந்திக்க வேண்டும் என்று ஜவஹர்லால் நேரு இந்த மகாநாட்டில் ஆரம்ப உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

1950-க்களின் தொடக்கத்தில் கூட்டுச் சேரா இயக்கம் வலுப்பெற ஆரம்பித்தது. அதன் ஏகாதிபத்திய—விரோத போர் உபாயலட்சியங்கள் சோஷலிஸ உலக நாடுகளது நோக்கங்களுடன் ஸ்தூலமாக ஒத்திருந்தன. இந்த நிலைமைகளில் ஆசிய, ஆபிரிக்க மக்களது ஐக்கியத்தின் பெருவெற்றியாக பாண்டுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1955) திகழ்ந்தது. இம் மகாநாடு இந்தியா, பர்மா, இந்தோனேசியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய ஐந்து ஆசிய நாடுகளது முன்முயற்சியால் கூட்டப்பட்டது. அப்போது, ஏராளமான ஆசிய நாடுகள் ஏற்கனவே தமது அரசியல் சுதந்திரத்தைப் பெற்றிருந்தன. அதே வேளையில் பல ஆபிரிக்க நாடுகளில் விமோசனப் போராட்டம் பேரலை வீசிக்கொண்டிருந்தது. எனவே இரண்டு கட்டங்களின் தேசிய— விமோசனப் போராட்டத்தின் இரண்டு அலைகளின் சந்திப்பாக பாண்டுங் மகாநாடு விளங்கியது. அதே சமயம் இரண்டு கண்டங்களது ஒருமைப்பாட்டின் முதல் வெளிப்பாடாகவும் அது திகழ்ந்தது. ஆயினும் மகாநாட்டில் பங்குபற்றிய பல நாடுகள் பல்வகைப்பட்ட இணைப்பாக்கத்தைக் கொண்டிருந்தன! சென்று போன காலனித்துவத்தின் கறையை அவை இன்னமும் தாங்கியிருந்தன. பாண்டுங்கில் கலந்து கொண்ட 29 நாடுகளில் எட்டு நாடுகள் மட்டுமே (இந்தியா. பர்மா, இந்தோனேஷியா. லாவோஸ், கம்போடியா. ஆப்கானிஸ்தான், நேபாளம், எகிப்து) அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடிப்பவை. இரு நாடுகளின் (மக்கள் சீனக் குடியரசு, வியட்நாம் ஜனநாயகக் குடியரசு) சோஷலிஸ முகாமைச் சேர்ந்தவை. மிகுதி 19 நாடுகளும் மேற்குலக சார்பானவை, அத்துடன் அவை இராணுவக் கூட்டணிகளிலும் அங்கம் வகித்தன.

எனினும், நேருவின் கருத்துப்படி பாண்டுங் மகாநாடானது, மாபெரும் வரலாற்றுப் போக்கின் ஒரு பகுதியாகும், உலக ஜனத்தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு உறுதியான அரசியல் சக்தியாக உலக அரங்கில் தோற்றம் பெற்றது. சமாதான சக ஜீவனக் கோட்பாட்டை மக்கள் பின்பற்றுவதை மறு உறுதி செய்த மகாநாடு உலக சமாதானத்தையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்தும் பிரகடனத்தை வெளியிட்டது. இது பத்து அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்டிருந்தது. இவை பின்னால் கூட்டுச் சேரா நாடுகளது வரலாற்று வளர்ச்சியின் புதிய கட்டத்தில் சர்வதேச உறவுகளுக்கு அடித்தளமாக மாறின.

1950-க்களின் பிற்பாதியின் புதிய சுதந்திர நாடுகளது பலமான திருப்பமானது, பெருவாரியான ஆசிய, ஆபிரிக்க, லத்தீனமரிக்க நாடுகளைத் தன்னகத்தே உள்ளடக்குவதில் இரு கண்டங்களது எல்லைகளையும் தாண்டிச் சென்ற அணிசேரா இயக்கத்தின் குறிப்பிடத்தக்க தீவிரத்தன்மையுடன் ஒத்திருந்தது. 1961 செப்டம்பரில் பெல்கிரேடில் நடைபெற்ற, அணிசேரா நாடுகளது ராஜ்ய, அரசாங்கத் தலைவர்களது முதலாவது மகாநாடு, இந்த இயக்கம் தோற்றம் பெறுவதில் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லாக அமைந்தது. 12 ஆசிய நாடுகள் 11 ஆபிரிக்க நாடுகள் யூகோஸ்லாவியா, கியூபா ஆகிய நாடுகள் உட்பட மூன்று லத்தீனமரிக்க நாடுகள் இந்த மகாநாட்டில் பார்வையாளராகக் கலந்து கொண்டன.

அணிசேரா இயக்கம் தொடர்ந்து வளர்ச்சி பெற்றது. 1964 அக்டோபரில் கெய்ரோவில் நடைபெற்ற இரண்டாவது மகாநாட்டில் 47 நாடுகள் பங்குபற்றின. ஒன்பது லத்தினமரிக்க நாடுகளும் ஆபிரிக்க ஒருமைப்பாட்டு ஸ்தாபனமும் அரபு



லீக்கும் அவதானிகளை அனுப்பின. 1970 செப்டம்பரில் லூஸாகாவில் நடைபெற்ற மூன்றுவது அணிசேரா நாடுகளது மகாநாட்டில் 54 நாடுகளது பிரதிநிதிகளும் 9 நாடுகளின் அவதானிகளும் கலந்து கொண்டனர். அத்தோடு தேசிய விமோசன இயக்கங்களது பிரதிநிதிகள் அதிதிகளாக அழைக்கப்பட்டிருந்தனர். இறுதியாக அல்ஜீயர்ஸில் நடைபெற்ற நான்காவது மகாநாட்டில் 76 நாடுகளினதும்' பிரதிநிதித்துவப் படுத்தும் 15 தேசிய விமோசன இயக்கங்களது தலைவர்களும் கலந்து கொண்டனர்.

அணிசேராமையின் முதற் கட்டத்தில் குறிப்பிட்ட சில புதிய சுதந்திர நாடுகள் ஏகாதிபத்திய வல்லரசுகளிடமிருந்தும் சோஷலிஸ சமாஜ நாடுகளிடமிருந்தும் தம்மை வெகுதூரத்தில் வைத்துக்கொண்டன. ஆயினும் பின்னால் அவற்றின் உலகக் கண்ணோட்டமும் அரசியலும் தீவிர மாற்றத்துக்குள்ளாயின. சமாதானத்துக்கும் மக்களது பந்தோபஸ்துக்குமான, கலோனியலிஸம், யுத்தம், ஆயுதப் போட்டி ஆகியவற்றிற்கு எதிரான நீண்ட, விடாப்பிடியான போராட்டத்தில் முன்னணிக்கு வந்தன. ★

## சோவியத் உலகும் கூட்டுச் சேராமையும்

**பி. ராமநாதன்**

கூட்டுச் சேரா இயக்கத்தின் அடி ஆரம்பநாள் தொட்டே அதை, உலகப் புரட்சிகர நடைமுறையின் பொது அமைப்பின் ஓர் அனுகூலமிக்க காரணியாக சோஷலிஸ நாடுகள் கண்டன. இது முற்றிலும் இயல்பானதே. இந்திய அறிஞரான சர் தேசாய், கூட்டுச்சேராமையை நாடுகளுக்கிடையேயான சமாதான சக ஜீவன அமைப்புக்களில் ஒன்றுகக் கருதுவதற்கு சகல நியாயங்களும் உண்டு என்றூர். சமாதான சக ஜீவனத்துக்காக சோஷலிஸ நாடுகள் அயராது உழைக்கின்றன என்பது துலாம்பரமானதே. அதே வேளையில் சோஷலிஸ நாடுகளுக்கும் கூட்டுச்சேரா நாடுகளுக்கும் இடையிலான உறவுகள், சமாதான சகஜீவனத்தின் பொதுக் கோட்பாடுகளின் எல்லைகளையும் தாண்டியிருந்தன. இந்த உறவுகள், ஏகாதிபத்தியத்திற்கும் கலோனியலிஸத்திற்கும் எதிரான கூட்டு நடவடிக்கையின் அடித்தளத்திலும் இளம் நாடுகளது உறுதியான அரசியல் சுதந்திரம், அந்நாடுகளது பொருளாதார சுதந்திரம், சமாதானம், ஜனநாயகம், சமூக முன்னேற்றம் என்பவற்றிற்கான போராட்டத்தில் ஒருமைப்பாடுடைய அடித்தளத்திலும் நிர்மாணிக்கப் பெற்று பலப்படுத்தப்பட்டவை.

கூட்டுச்சேரா நாடுகள் உட்பட வளர்முக நாடுகளுடன் சோவியத் யூனியன் கொண்டுள்ள உறவுகளை விரித்துரைக்கயில் சோவியத் கம்யூனிஸ்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சி 'மத்திய கமிட்டியின் பொதுச் செயலாளர் எல். ஐ. பிரஷ்நேவ் கூறியதாவது. 'நாமும் இடிபாடடைந்த கலோனியல் அமைப்பிலிருந்து எழுந்த பெருவாரியான நாடுகளும் சமாதானம், விடுதலையின்பாலும் ஆக்கிரமிப்பு, மேலாதிக்கம், ஒரு நாட்டை இன்னொரு நாடு சுரண்டுதல் ஆகியவற்றின் சகல வடிவங்களையும் துடைத்தெறிவதிலும் கொண்டுள்ள ஆழமான பொதுக் கடமைப்பாட்டினால் ஐக்கியப்படுத்தப் பட்டுள்ளோம். இந்த அடிப்படை அபிலாஷைகளின் ஐக்கியம் என்ற வளமும் செழுமையுமிக்க மண்ணில் நமது நட்புறவு தொடர்ந்து வளர்ந்து தழைத்தோங்கும்.

சோவியத் மக்கள், பாண்டுங் மகாநாடு கூடியதை ஆதரித்தார்கள். சோவியத் யூனியன் அண்டையயல் நல்லுறவுகளை, பரஸ்பரம் கௌரவம், ஆசிய நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்பு ஆகியவற்றுக்கு என்றைக்குமே அனுசரணையாக இருந்து வருகிறது. 1955 ஏப்ரலில் சோவியத் வெளிநாட்டமைச்சு தனது அறிக்கையில் வருமாறு தெரிவித்திருந்தது. 'சோவியத் மக்கள், கலோனியலிஸ அடக்குமுறையின் சகல வடிவங்களுக்கும் எதிராகவும் தமது அரசியல், பொருளாதார சுதந்திரத்துக்காகவும் ஆசிய — ஆபிரிக்க மக்கள் தொடுத்துள்ள போராட்டத்தைப் பூரண விளப்பத்துடன் வரவேற்கிறார்கள். சகல நாடுகளுக்கிடையிலான உறவுகள் சமத்துவம், ஒரு நாட்டின் உள் விவகாரத்தில் இன்னோர் நாடு தலையிடாமை, ஆக்கிரமிப்பைக் கைவிடுதல், இதர நாடுகள் மீது அத்து மீறல் செய்தலைக் கைதுறப்பது, பிரதேச முழுமைப்பாடு சுயாதீனத்தையும் தேசிய சுதந்திரத்தையும் பூரணமாக மதிப்பது ஆகிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதை உத்தரவாதப் படுத்துவதற்கான ஆசிய — ஆபிரிக்க நாடுகளது பிரயத்தனங்கள் மீது நமது தேசம் இடையறாது அனுதாபம் கொண்டுள்ளதுடன் அவற்றிற்கு ஆதரவும் தெரிவிக்கின்றது.

1954-ல் இந்தியாவும் சீனாவும் பிரகடனப்படுத்திய சமாதான சகவாழ்வுக்கான பஞ்சசீலக் கோட்பாடுகள் பாண்டுங் மகாநாட்டின் பணிகளுக்கு அடியாதாரமாகவிருந்தன; இவை தொடர்பாக சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 2 -வது காங்கிரஸின் தீர்மானம் வருமாறு வலியுறுத்தியது: இன்றைய நிலைமைகளில் இவை சமுதாய அமைப்பால் வேறுபட்ட நாடுகளிடையேயான உறவுகளுக்கு அற்புதமான சூத்திரங்களாக வுள்ளன; உலக நாடுகளுக்கிடையில் ஸ்திரமான சமாதான உறவுகளின் அடித்தளமாகவும் இவை பயன்படுகின்றன. கூட்டுச்சேரா நாடுகள் எப்பொழுதுமே சோவியத் யூனியனின் ஆதரவையும் உதவியையும் எதிர்பார்க்க முடியும் என்பதைச் சுட்டிக்காட்டும் கட்சியின் வேலைத்திட்டம் கூறுவதாவது, 'யுத்தத்தை விலக்குவதற்காகப் பிரயத்தனமெடுக்கும் சகல ஸ்தாபனங்களும் கட்சிகளும். நாடுகளுக்கிடையே சமாதானமிக்க, சுமுகமான உறவுகளுக்காக உழைக்கும் அகிம்சா இயக்கங்களும் பூர்ஷ்வா வட்டாரங்களும் சோவியத் யூனியனது நல்விளப்பத்தையும் ஆதரவையும் பெற்றுக்கொள்ளும்'

இந்த மார்க்கம் சோவியத் யூனியனின் அயல்துறைக் கொள்கையினால் மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது. அதன் முன் முயற்சியினால் ஐ. நா. பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்ட



'காலனி நாடுகளுக்கும் மக்களுக்கும் சுதந்திரம் வழங்கும் பிரகடனத்' தின் மூலம் தேசிய விமோசன இயக்கங்களுக்கு மாபெரும் தார்மீக, அரசியல், ராஜதந்திர ஆதரவு வழங்கப்பட்டதை இங்கு நினைவுகூருதல் பொருந்தும். இந்தப்பிரகடனம், காலனி எதிர்ப்பு இயக்கத்தை முனைப்படுத்தும் உறுதியான வேலைத்திட்டமாக மாறியுள்ளது. தெற்காசியாவின் அரசியல் நிலைமையை சுமுகமாக்குவதையும் ஸ்திரமாக்குவதையும் நோக்கமாகக் கொண்டு 1956 — 1966 லும் (1966 ஜனவரி தாஷ்கந்த் ஒப்பந்தம்) 1971 லும் சோவியத் யூனியன் எடுத்த பல பயனுள் முயற்சிகளையும் மத்திய கிழக்கு மோதலுக்கு நியாயமான தீர்வு காண்பதற்கு அது முன்வைத்த ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் கூட நினைவு கூரலாம். இந்த ஆலோசனைகளுக்கு முற்போக்கு, சமாதான சக்திகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

கூட்டுச் சேரா நாடுகளுடனான ஒருமைப்பாட்டை வலுப்படுத்திக் கொள்வதற்காக 1971 ஆகஸ்டில் சோவியத் யூனியனுக்கும் இந்தியாவுக்குமிடையில் கைச்சாத்தான சமாதானம், நட்புறவு, ஒத்துழைப்புக்கான உடன்படிக்கை, 1971 மேயில் சோவியத் யூனியனுக்கும் எகிப்து அரபுக் குடியரசுக்குமிடையில் கைச்சாத்தான நட்புறவு, ஒத்துழைப்பு உடன்படிக்கை, 1972 ஏப்ரலில் சோவியத் யூனியனுக்கும் ஈராக்குக்குமிடையில் கைச்சாத்தான நட்புறவு, ஒத்துழைப்பு உடன்படிக்கை ஆகியவற்றினால் துலாம்பரமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பாதையின் மீதான விஸ்வாசம் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25-வது காங்கிரஸின் போது மீண்டும் உறுதி செய்யப்பட்டது. சோவியத்தின் முரண்பாடற்ற கொள்கையை அங்கீகரித்த, இளம் விமோசன நாடுகளது பிரதிநிதிகள் இக்காங்கிரஸில் உரையாற்றியது தற்செயலான ஒன்றல்ல.

தங்கநிக்கா ஆபிரிக்க தேசிய யூனியனின் தேசிய உயரவை உறுப்பினரும் தங்கநிக்கா ஆபிரிக்க தேசிய யூனியன், ஆபிரிக்க, ஷிராஸிகட்சி (தன்ஸானியா) கூட்டுப் பிரதிநிதிகளின் தலைவருமான அப்துல்நுரு சுலைமான் தெரிவித்ததாவது: 'சர்வதேச அரங்குகளில், தமது சொந்த எதிர்காலம் குறித்துத் தீர்மானிப்பதற்கு உரிமையற்றிருக்கும் வளர்முக நாடுகளினதும் ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளதும் நிலைமையை சோவியத் யூனியன் எப்போதும் புரிந்து கொண்டு ஆதரவு தருகிறது. சோவியத் யூனியனின் இந்தக் கொள்கை பெரும் திருப்தியைத் தருகிறது. இந்த மார்க்கத்தை எதிர்காலத்திலும் தொடர்ந்து பின்பற்றுவீர்கள் என்று நாம் உறுதியாக நம்புகிறோம்'

மடகாஸ்கர் காங்கிரஸ் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜிசெலெ ரபெஸாஹலா காங்கிரஸுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது: 'வளர்முக நாடுகளது மக்களின் வீரப் போராட்டங்களின் விளைவாகவே அண்மை ஆண்டுகளில் தேசிய — விமோசன இயக்கம் பெருவெற்றிகளை அடைந்தது என்பதை நாமறிவோம்; சோவியத் யூனியனதும் கட்சியினதும் அயராத முயற்சிகளினாலும் 24-வது காங்கிரஸில் முன்வைக்கப்பட்ட சமாதான வேலைத் திட்டத்தினை அவை இடையறாது செயல்படுத்தியதனாலும் சர்வதேச நிலைமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் ஏற்பட்ட பொது அபிவிருத்தி, முடிவமைதிப் போக்கு ஆகிய நிலைபாடுகளில்தான் இந்த வெற்றிகள் சாதிக்கப்பட்டன என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

இந்த ஆண்டு கொழும்பில் நடைபெறவிருக்கும் கூட்டுச் சேரா நாடுகளினது ராஜ்ய, அரசாங்கத் தலைவர்களது ஐந்தாவது மகாநாடு வெற்றியடையும் என்ற நம்பிக்கைகூட சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25-வது காங்கிரஸில் தெரிவிக்கப்பட்டது. யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் லீக்கின் தலைமைக் குழுவின் உயர்சபையின் செயலாளர் ஸ்தெனே டொலான்தோ தமதுரையின் போது வருமாறு தெரிவித்தார்: 'கூட்டுச்சேரா நாடுகளது முன்னைய நடவடிக்கைகள் அனைத்தும் சர்வதேச உறவுகளின் நன் மாற்றங்களில் பெரும் செல்வாக்கினைப் பதித்துள்ளன. கூட்டுச் சேரா நாடுகளது எதிர் வரும் மகாநாடு கூட, புதிய சர்வதேச அரசியல், பொருளாதார உறவுகளை உருவாக்குவதற்கான போராட்டத்தில் ஒரு பிரதான சுவடாக அமையும் என்றும் சகல நாடுகளினதும் நலன்களுக்கு அமைய சோஷலிஸத்தின் நலன்களுக்கு சேவை செய்யும் என்றும் நாம் நம்புகிறோம்'. ★

## 'கொன்றைப் பூக்கள்'

'சிறுகதைகள் ஒன்றில், சிரிக்கவைக்க வேண்டும் அல்லது அழவைக்க வேண்டும்' என்று ஒரு அறிஞன் சொன்னான். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் இதை விடச் சிந்திக்கவும்' செயல்படவைக்கக்கூடியனவாகவும் அமைதல் வேண்டும். இதன்படி நோக்கின் மண்டூர் அசோகாவின் இச் சிறுகதைகள் யாவும் எளிமையான, ஆடம்பரமற்ற முறையில் அமைந்து எம்மை அழமட்டும் வைத்து முழுமை பெறாமல் அமைந்துள்ளது என்று 3-7-76 சனிக்கிழமை சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற மண்டூர் அசோகாவின் 'கொன்றைப் பூக்கள்' வெளியீட்டு விழாவில் திரு. சில்லையூர் செல்வராஜன் தனது ஆய்வுரையில் கூறினார்.

இக்கூட்டம் திரு. அ. பொ. செல்லையா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. திரு. எஸ். எஸ். கணேசபிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. ஆ. ச. ச. இராசரெத்தினம் அவர்கள் முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

திரு. எச். எம். பி. மொஹிதீன், 'வெறும் இலக்கியத்தால்மட்டும் சமுதாயத்தை மாற்ற முடியாது. இலக்கியத்தோடு இயக்கமும் சேர்ந்திருந்தால் மட்டும்தான், சமுதாய விடிவுக்கு வழி கோலும்' என்றார். வண சா. ம. செல்வரெத்தினம் அடிகளார், திரு. கே. எஸ். சிவகுமாரன், திரு. க. நவசோதி, திருமதி போகா பாலசந்திரன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர். செல்வி மண்டூர் அசோகா நன்றியுரை வழங்கினார். இவ்விழாவினை வேலணை வீரசிங்கம் அவர்கள் முன் நின்று நடத்திவைத்தார்.

**எஸ். செம்வம்**



'கூட்டுச் சேரா இயக்கத்துக்கும் சோஷலிஸ நாடுகளுக்குமிடையில் எந்தவித முரண்பாடுகளும் இல்லை; இருக்கவும் முடியாது!......'

## கூட்டுச் சேரா இயக்கமும், நாமும்

**லோபோ தோ நசிமென்டோ**
(அங்கோலா மக்கள் குடியரசுப் பிரதமர்)

சமாதானம், சுதந்திரம், சுயாதீனம் ஆகியவற்றுக்கானதும், தேசிய சுயாதீனத்தை வலுப்படுத்துவதற்குமான போராட்டத்தில் சர்வதேச ஒருமைப்பாடு ஒரு பிரதான காரணியாகும். இன்று உலகில் ஒருவர் தனிமைப்பட்ட வாழ்க்கையினை நடத்த முடியாது.

எமது சுயாதீனத்தை வலுப்படுத்துவதில் அங்கோலா மக்கள் குடியரசுக்கும் சோஷலிஸ சமாஜத்துக்குமிடையிலான நட்புறவுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகவுள்ளன. சுயாதீனத்துக்காகப் போராடும் மக்களுக்கு சர்வதேச ஒருமைப்பாடு அளப்பரிய முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த சர்வதேச ஒருமைப்பாடு தொடர்ந்து வலுப்பட்டு வரும் என நாம் நம்புகின்றோம்.

பிற்போக்கு, பாசிஸ சக்திகள் மக்களுக்கு எதிராக சதிகளையும் சூழ்ச்சிகளையும் மேற்கொண்டு வருகின்றன. இந்த நிலையில், அனைத்து முற்போக்கு சக்திகளும் அனைத்து மக்களும் தம் மத்தியிலான ஐக்கியத்தை உறுதிப்படுத்திக் கொள்வது அத்தியாவசியமாகின்றது.

பிற்போக்கினை எதிர்த்து வெற்றிபெறுவதற்கு ஒரே சாதனம் ஐக்கியமே. எல்லா முற்போக்குச் சக்திகளும் மேலும் நெருங்கி அணி திரள வேண்டும். இவை எல்லா விமோசன இயக்கங்களுடனான ஐக்கியத்தை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்,

கூட்டுச் சேரா இயக்கத்துக்கும் சோஷலிஸப் பாதையில் பயணிக்கும் நாடுகளுக்குமிடையில் எவ்விதமான முரண்பாடுகளும் இல்லை, இருக்கமுடியாது என நான் வலியுறுத்த விரும்புகிறேன். சோஷலிஸ உலகுடன் நட்புறவு பேணும் சூழலில்தான் கூட்டுச்சேராக் கொள்கையினை வெற்றிகரமாகப் பின்பற்ற முடியும் என அங்கோலாவிலுள்ள நாம் கருதுகின்றோம்.

கூட்டுச் சேராக் கொள்கையினை நடைமுறையில் பின்பற்றுவதற்கு நாம் சோஷலிஸப் பாதையில் சென்றாக வேண்டும். ஆபிரிக்காவில் கூட்டுச் சேராக் கொள்கை தீவிரமாகப் பின்பற்றும் நாடு எமது நாடு. நாம் சோஷலிஸ அமைப்பினை ஆதாரமாகக் கொள்வது கூட்டுச் சேரா இயக்கத்தின் வெற்றிகரமான வளர்ச்சிக்குப் பெருந்துணை செய்யும்.

கூட்டுச்சேராக் கொள்கை ஏகாதிபத்திய— எதிர்ப்பு, கலோனிஸ — எதிர்ப்புப் போராட்டத்துக்கும் நிஜமான தேசிய சுயாதீனத்தை எய்துவதற்கான போராட்டத்துக்கும் உறுதியான ஒரு அடித்தளமாக உள்ளது. இதில்தான் கூட்டுச்சேரா இயக்கத்தின் முக்கியத்துவம் தங்கியுள்ளது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்று நாடகங்கள்

★ விழிப்பு
★ இருதுயரங்கள்
★ அபசுரம்

நெல்லை க. பேரன்

நடிகர்கள் ஒன்றியம் கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் 'விழிப்பு', 'இருதுயரங்கள்', 'அபசுரம்' ஆகிய தமது மூன்று நாடகங்களை மேடையேற்றியது.

இந்த மூன்று நாடகங்களிலும் ஏனைய சாதாரண நாடகங்களில் இல்லாத ஏதோ ஒரு தனித்தன்மை காணப்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. பல ஆண்டுகளாக வேலைக்கு முயன்றுவரும் பட்டதாரி ஒருவனைப் பின் கதவாலேனும் வேலைக்கு அனுப்ப அவனது தந்தையும் பெரியதந்தையும் முயற்சிக்கிறார்கள். அதுவும் முடியவில்லை. வாலிபனோ ஏனைய வேலையற்ற வாலிபர்களு டன் இணைந்து போராட்டம் நடத்துகிறான். கட்டாயம் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவனுக்குத் திருமணமும் முடித்து வைக்கிறார்கள். நம்பி வந்த மனைவியாளும் தினமும் வேலை வேலை என்று நச்சரிக்கிறாள். ஒருநாள் வேலையற்ற வாலிபர்களின் நியாய மான கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு அதிகார வர்க்கத்தினால் அவர்கள் தாக்கப்பட்டதை நேரடியாகக் கண்ட பிறகுதான் அவ ளது கண்கள் திறக்கின்றன. அவளும் வேலையற்ற கணவனைவிட் டுத் தகப்பன் வீட்டிற்கு வரமாட்டேன் என்று அமைதி கொள்கி றாள். பாத்திரங்கள் அத்தனையும் மிகவும் இயல்பான முறையில் உணர்வு பூர்வமாக இயங்குகின்றன. தமிழ் நாடக உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அசைவு உத்திகள் (மைமிங்) இந்த மூன்று நாடகங்களிலும் நன்கு கையாளப்படுகின்றன. இந்த நாட கத்தின் தயாரிப்பாளர் திரு. சுந்தரலிங்கத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

'இருதுயரங்கள்' என்ற நாடகத்தில் தன் சிசுவைப் பிரிந்த ஒரு டாக்டரிடம் மனைவிக்கு வைத்தியம் செய்ய வரும்படி ஒருவன் கெஞ்சிக் கூட்டிக் கொண்டு போகிறான். ஆனால் அவனது மனைவியோ கள்ளக் காதலனுடன் ஓடிவிட்டாள். அதற்காகவே அவனையும் டாக்டரிடம் அனுப்பினாள். அவள் கள்ளக்காதலனுடன் ஓடிவிட்ட துயரம் அவனுக்கு. தன் பிள்ளை செத்த துயரையும் தான் நடக் கத்தானும் சக்தியற்று இருப்பதை அறியாமலும் தன்னைக் கூட்டி வந்து கேவலப்படுத்துகிறானே என்ற ஆத்திரம் டாக்டருக்கு. இரு வரது நடிப்பையும் மேடையில் உணர்ச்சிபூர்வமாகக் காண முடிந்தது.

'அபசுரம்' அரசியல் வாதிகள் எவ்வாறு பொதுமக்களை ஏமாற்றிப் பிழைக்கிறார்கள் என்பதை உருவகப்படுத்திக் காண் பிக்கப்பட்ட ஒரு நாடகம்.

மொத்தத்தில் சிறந்த கருத்துக்களையும் நடிப்பையும் புதிய உத்திகளையும் கொண்ட இம் மூன்று நாடகங்களும் பலராலும் பார்த்து விமர்சிக்கப்படவேண்டிய நாடகங்கள். இவற்றைத் தயா ரித்து வழங்கியதன் மூலம் தனித்துவம் பெற்றுள்ள நடிகர்கள் ஒன்றியமும் பாராட்டப்பட வேண்டியதே.



கூட்டுச்சேரா நாடுகளின்
ஐந்தாவது உச்சி மகாநாட்டுக்கு
நமது
நல்வாழ்த்துக்கள்

சுன்னாகம் பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

கிராமிய வங்கிகள், நுகர்ச்சிப் பொருட்கள், புடவை வகைகள், கட்டிடப் பொருட்கள், இரும்பு வகைகள், புத்தக வகைகள், பசளை வகைகள், பாதணிகள், கால் நடைத் தீனிகள், ஒப்பந்த வேலைகள், லொறிச் சேவைகள், எரிபொருட்கள், நெசவு நிலையங்கள், உற்பத்தி நிலையங்கள், சிறுவர் பாடசாலைகள் ஆகிய துறைகளில் 53 கிளை நிலையங்களை உள்ளடக்கிச் சேவை செய்கின்றது.

"மக்களின் தேவை சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சேவை"

CHUNNAKAM
M. P. C. S.

T'phone : Chunnakam 203

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Mallikai** JULY 1976

Registered as a Newspaper in Sri Lanka


அழகுக்கழகு தருவது — பண்கோப் சேட்

நீடித்துழைப்பது — பண்கோப் சேட்

நவீன டிசைன்களில் வருவது — பண்கோப் சேட்

உன்னத பாவனை உணர்த்துவது — பண்கோப் சேட்

ஆடவரைப் பொலிவுறக் காட்டுவது — பண்கோப் சேட்

ஒரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உயரிய தயாரிப்பு

●

சமீபத்தில் பேர்லினில் நடந்த உலக வர்த்தகக் கண்காட்சியில் இலங்கையின் சார்பில் இடம் பெற்றுப் புகழீட்டியது

●

வட இலங்கையில் சேட் தயாரிக்கும் ஒரேயொரு நிறுவனம்

●

தயாரிப்பாளர் :

**பண்டத்தரிப்புப் பிரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

**பண்டத்தரிப்பு**

தொலைபேசி :

தலைமை அலுவலகம் 803

மொத்த விற்பனை நிலையம் 36


234 A, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் வசிப்பவரும் ஆசிரியரும் வெளியீட்டாளருமான டொமினிக் ஜீவா அவர்களால் மல்லிகை சஞ்சிகைக்காக யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா அச்சகத்திலும், அட்டை யாழ் மாநகர [illegible] கூட்டுறவு அச்சகத்திலும் அச்சிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org